பல்வேறுபட்ட காரணங்களுக்காக அழிவடைந்த் இயற்கை காடுகளின் தரத்தை மேம்படுத்தும் நொக்கத்திற்காக இயற்கைவழி மீள் உரவாக்கததை அதிகரிப்பதன் மூலம் 2225 ஹெக்டயார் காடுகள் தபிக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டில் அவ்வாறு தாபிக்கப்பட்ட 4386 ஹெக்டெயார் வன நிலங்கள் பராமரிப்பு செய்யப்பட்டு பேணி வரப்பட்டது.

முழுமையாக அழிவடைந்த யார் 150 ஹெக்டெயார் வன் நிலப் பகுதி மீளமைக்கப்பட்டதோடு அவ்வாறு கடந்த ஆண்டில் மீளமைக்கப்பட்ட 193 ஹெக்டெயார் வன நிலங்கள் பராமரிப்புச் செய்யப்பட்டு பேணி வரப்பட்டது.

(ii) வனங்களைத் தாபித்தல்

அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்பு வழங்கும் முதிர்ந்த தொழிநுட்ப வனப் பயிர்கள் 816.3 ஹெக்டெயார் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வெட்டப்பட்டு மீண்டும் வனப் பயிர் பயிரிடப்பட்டன. கடந்த 03 வருட காலப்பகுதியினுள் அவ்வாறு தாபிக்கப்பட்ட வனப் பயிர்கள் 2783 ஹெக்டெயார் பராமரிப்புச் செய்யப்பட்டு பேணி வரப்பட்டது. அவ்வாரே பொருளாதார விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் 2788 ஹெக்டெயார் வன நிலப் பகுதி விஞ்ஞான ரீதியாகமுகாமைத்துவம் செய்யப்பட்டன.

(iii) சூழ் காடுகளைப் (வன ஒதுக்குகளை) பேணுதல்

தற்போது இருக்கும் வனப் பகுதிகளை பேணிப்பாதுகாத்துக் கொண்டு சூழ் காடுகளை பொருத்தமான அடிபப்படையில் பேணி வரும் நோக்கில் இயற்கை காடுகள் 500 கிலோ மீற்றர் பகுதி அளக்கப்பட்டு அளவை நில வரைபடம் தயாரிக்கப்பட்டதோடு வனப் பகுதியைச் சுற்றி 700 கிலோ மீற்றர் பகுதி கொங்கிரீட் தூண்கள் நடப்பட்டு எல்லைகள் குறிக்கப்பட்டன.

சுற்றாடல் பாதுகாப்பு, நீர் ஈர்ப்பு, உயிரியற் பல்வகைமை பாதுகாப்புக்காக பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரசைகளை ஈர்ப்பதைவிருத்தி செய்யும் நோக்கில் நாடளாவிய ரீதியில் 654 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரசைகளின் பங்கபளிப்புடன் 153 மர நடுகைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 400000 மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு நாடளாவிய ரீதியில் மர நடுகைத் திட்டங்களுக்குப் பயன் படுத்தப்பட்டன.

(v) சுற்றாடல் சுற்றுலா அலுவல்கள்

சிங்கராஜ, நகல்ஸ், கன்னெலிய, ஹுருளு மற்றும் உடவத்த காடு ஆகிய் சுற்றாடல் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

மேலும் படகமுவ (குருணாகல்), எக்கல் ஓயா (அம்பாறை), ஹிரிகட்டு ஓயா(பலாங்கொடை), கந்தேஎல (நுவரெலியா), குருலுகெல (கேகாலை), கொட்டவ (காலி), மாகந்தாவ (கித்துல்கம) ஆகிய புதிய சுற்றுலாப் பிரதேங்களில் சுற்றாடல் சுற்றுலா மேம்பாட்டுக்காக பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதோடு இந்த இடங்களில் சுற்றாடல் சுற்றுலா வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டன்.

(vi) வனவியல் ஆராய்ச்சி

பரிட்சார்த்த ரீதியான மற்றும் அபிவிருத்தி ரீதியான ஆராய்ச்சிகள் ஊடாக தேசிய வனத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தேசிய முக்கியத்திற்க ஏற்ப பரீட்சார்த்த நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை மேற்கொள்ளல் இதனூடாக மேற்கொள்ளப்பட்டன.

ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- மர உற்பத்திக்காகத் தெரிவு செய்யப்பட்ட உள்நாட்டுத் தாவரங்களுக்குப் பொருத்தமான கள வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்

- ஜேம் (Muntingia Calabura) விதைக் கன்றுகள் உற்பத்திக்காக பொருத்தமான வழிமறைகளை ஆராய்தல்.
- தேதுரு ஓயா ஊடாக தொட்டால் சுருங்ஜகி (Mimosa pigra) தாவரப் பரம்பலை இனங்காணல்
- மக்கள் வனப் பயிர் நிலப்பகுதிகளில் காடுகளின் இருப்புநிலை மாற்றங்களை மதிப்பீடு செய்தல்
- காடுகள் மீளமைப்புவழிமுறை மதிப்பீடு
- பல்வேறு தாவர விசேடங்களின் காபன் குவிப்புத் தொடர்பாக ஆராய்தல்.

(vii) வனவியல் கல்வி

இலங்கை வனவியல் நிறுவனம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக வனவியல் சான்றிதழ் பாடநெறி மற்றும் வனவியல் உயர் டிப்ளோமா பாடநெறி ஆகியவற்றை நடாத்துகின்றது. அதற்கமைய அடவி வன அலுவலர்கள் 53 பேருக்காக உயர் டிப்ளோமா பாடநெறி நடாத்தப்பட்டது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனைத்து மடடங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக சேவைப் பயிற்சி பாடநெறிகள் 14 நடாத்தப்பட்டதோடு பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 1066 ஆகும். ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை வனவியல் நிறுவனத்தினுள் நடத்தப்பட்டதோடு அதற்கு அமைய மகாவலி அதிகார சபையின் 80 உத்தியோகத்தர்கள் , வெயிஸ் ஏசிய பெடரேசன் நிறுவனத்தின் 45 உத்தியோகத்தர்கள் , சப்பிரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் 12 பேர் மற்றும் கங்க இஹல கொரலே பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 45 பேர் ஆகியோர்களுக்காக குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

(viii) வளங்கள் முகாமைத்துவம்

வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள வெளிக்கள ஊழியர்களின் விடுதி, அலுவலகக் கட்டிடம் 105 பராமரிப்பு செய்து பேணி வரப்பட்டதோடு கேகாலை மாவட்ட கித்துல்கல அடவி வன உத்தியோகத்தர் விடுதி மற்றும் மட்டக்களப்பு கள நிலையக் கட்டிடம் நிர்மாணப் பணிகளின் முதல் கட்டம் நிறைவு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

(i) வர்த்தமானியில் வனப் பிரதேசங்களை பிரகடனம் செய்தல்.

இதன் கீழ் நாடளாவிய அடிப்படையில் 12136 ஹெக்டெயார் உள்ளடக்கும் வகையில் 16 வனங்கள் ஒதுக்குகளாக பிரகடனம் செய்யப்பட்டன. 17856 ஹெக்டெயார் கண்டல் தாவரப் பிரதேசம் உள்ளடக்கும் வகையில் 76 கண்டல்தாவரப் பிரதேசங்கள் ஒதுக்குகளாகப் பிரகடனம் செய்யப்பட்டன மற்றும் சிங்கராஜ உலக மரபுரிமை வனக் காணியைச் சுற்றியுள்ள 36474 ஹெக்டெயார் காடுகள் உள்ளடங்கும் வகையில் மழைக் காடுகள் ஒதுக்குகளாக பிரகடனம் செய்யப்பட்டது

(ii) தேசிய வனக் கணக்கெடுப்பு.

நாட்டின் அனைத்து வனங்களதும் உற்பத்தி இயலுமை மற்றும் சுற்றாடல் சேவைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் எதிர்கால வன அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகளைச் சேகரிக்கும் நோக்கில் தேசிய வனக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய வனக் கணக்கெடுப்பின் மொத்த மாதிரிகளின் அளவு *4500* ஆகுமென்பதோடு *2019* ஆண்டு வரையில் *2700* மாதிரிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

(iii) கண்டல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

இடைவெப்ப மண்டலத்தில் அமைந்துள்ள ஏரி மற்றும் முகத்துவாரப் பிரதேசங்களில் கண்டல் தாவரங்களை நடக் கூடிய பிரதேசங்களை இனங்கண்டு அம்பாறை, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் 376 ஹெக்டயார் பிரதேசத்தில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டன.

(iv) சுற்றாடல் சுற்றுலாச் செயற்பாடுகள்

இடம்	பார்வையிட்டோர் எண்ணிக்கை	பார்வையிட்டதால் கிடைத்த வருமானம் ரூபா.
ஹுருளு சுற்றாடல் பூங்கா	90,324	95,437,239.13
சிங்கராஜ ஒதுக்குக் காடு	48,732	7,057,605.00
நகல்ஸ் ஒதுக்குக் காடு	57,315	2,009,630.00
கன்னெலிய ஒதுக்குக் காடு	46,408	1,923,779.50
உடவத்தைகெல ஒதுக்குக் காடு	24,828	5,403,763.76
மொத்தம்	**267,607**	**111,832,017.39**

(v) மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மரக்கன்றுகள் உற்பத்தி

நாடு முழுவதிலும் மரம் நடுகை வேலைத் திட்டங்ளுக்காக 3.2 மில்லியனுக்கு கிட்டிய பல்வேறு வகையான விதைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

மக்கள் பங்கேற்பு வன விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 400, 000
வாணிக வனப் பயிரிடல் தொடர்பாக: 1, 397, 000
வன ஒதுக்குகளை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 1, 441, 400
மொத்த மரக் கன்றுகள் உற்பத்தி: 3.238 மில்லியன்

2.1.2 கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம்.

முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

நீண்ட காலமாக தேசிய அபிவிருத்தி குறிக்கோளுக்கு இணங்க கரையோர வலயத்தில் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளை துரிதப்படுத்தியதைத் தொடர்ந்து கரையோர வலயப் பேணிக்காப்பு, அபிவிருத்தி மற்றும் நிலைத்திருக்கத்தகு தன்மை தொடர்பில் கவனம் செய்யப்பட்டதுடன் அதற்காக இணைந்த கரையோர முகாமைத்துவத்தின் தேவைப்பாட்டை இனங்கண்டு இலங்கையில் வளங்கள் நிறையக் காணப்படுகின்ற கரையோர வலயத்தை நிலைத்திருக்கத்தகுவாறு பயன்பாட்டின் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்

புத்தளம், கம்பஹா, களுத்துறை, மாத்தறை, காலி, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் 12 கரையோரப் பாதுகாப்பு கருத்திட்டங்கள் மற்றும் திடீர் கரையோர அரிப்பிலிருந்து கடற்கரையோரத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட 14 திடீர் கரையோரப் பாதுகாப்பு கருத்திட்டங்கள் மூலம் கரையோரத்தின் 8.8 கி.மீற்றர் பாதுகாக்கப்பட்டதன் மூலம் கரையேர அரிப்பு குறிப்பிடதக்க மட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.



புத்தளம், மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 5500 கண்டல் தாவரக் கன்றுகள் மற்றும் பம்பல பிரதேசத்தில் 1000 கண்டல் தாவரக் கன்றுகள் நடப்பட்டதன் மூலம் கண்டல் பசுமை கரையோரம் தாபிக்கப்பட்டது.

புத்தளம் மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான கரையேரப் பிரவேசப் பாதையை இனங்கண்டு அதற்கான திட்டத்தைத் தயார் செய்தல் மூலம் கடற்கரையோரத்தை பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை மக்களுக்கு ஏற்பாடுசெய்து கொடுத்தல்.

கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கடற் கரையோரத்தைச் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை புத்தளம், அம்பாறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நிரந்தர துரு லதா கரையோரத்தை அடையாளமிடல் மூலம் ˙கரையோரத்தை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான ஒழுங்கு முறைகளை இலகுபடுத்தல்.

புத்தளம் மாவட்டத்தின் புனப்பிட்டி,சென்டிகாடு மணல் ஒழுக்கு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் பாணமை மணல் மேடு பாதிப்படையும் பிரதேசமாக வர்த்தமானியில் பிரகடனம் செய்தல் மூலம் அந்த மணல் மேட்டைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக முகாமைத்துவம் செய்தல்.

காலி, மாத்தறை மாவட்டங்களில் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டதன் மூலம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை அறிவூட்டல். பாடசாலைகளுக்கு பாடத்திட்ட விருத்தி உள்ளிட்ட கரையோர பிரச்சினைகள் தொடர்பான அறிவை மேம்படுத்தல்.

நீர்கொழும்பு தொடக்கம் மிரிச்ச வரை இணைந்த கரையோர வலயம் முகாமைத்துவத் திட்டத்தை தயார் செய்தல்.

கொக்கல கரையோரப் பூங்காவை நிர்மாணிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 1893 மின் அனுமதிப்பத்திரங்களை வழங்கல் மற்றும் EIA அனுமதிப்பத்திரம் 3 மற்றும் IEE அனுமதிப்பத்திரம் 9 வழங்கல் மூலம் கரையோர வலய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்கு விதிமுறைப்படுத்தல்.

காலி முதல் மாத்தறை, மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை மற்றும் பாணமை முதல் காரைதீவு வரை கடலுக்கடியில் அளத்தல் பணிகளை மேற்கொள்ளல்.

மேற்கு, தெற்கு கடற்கரையோரங்களில் கரையோர மணல் ஒழுக்கு (The flow) கல்வி நடவடிக்கைகளின் தரவுகள் மூலம் கரையோர மணல் பிரவாகத்தின் போக்கு மற்றும் பரிமானம் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ளல்.



இலங்கையைச் சுற்றிலும் உள்ள சுற்றுலா 6 கடற்கரையோரங்கள் (உனவட்டுன, பொல்ஹேன ஹிக்கடுவா, அறுகம்பை, கல்கிஸ்சை மற்றும் நிலாவெலி.) நீரின் தரத் தன்மை பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் கரையோர நீரின் தரத்தன்மை பற்றிய இறுதி அறிக்கையைத் தயார் செய்தல் மூலம் தேவையான குறிகாட்டிகள் மற்றும் நீரின் தரத்தன்மை தொடர்பான தகவல்களை முன்வைத்தல்.

கரையோர வளங்கள் முகாமைத்துவத்திற்காக மக்கள் பங்களிப்பை அதிகரித்தல்

சவால்கள் மற்றும் எதிர்கால அடையிலக்குகள்

1 கரையோர அரிப்பை கணிசமானளவு குறைத்தல்.
2. கரையோர மணல் அகழ்வைக் கணிசமானளவு குறைத்தல்
3. முருகைக்கல் அகழ்வை முழுமையாக நிறுத்துதல்
4. கரையோர வலயங்களில் சட்டவிரோத நிருமானங்களைக் கட்டுப்படுத்தல்.

2.1.3 இலங்கை மகாவலி அதிகார சபை

இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய சக்தியை வழங்கி பல்வகை நோக்கங்கள் சகிதம் மகாவலி அபிவிருத்தி திட்டம் இந்நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற மிகப் பாரிய பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும்.

விசேட, வெற்றிகளும் முன்னேற்றமும் 2019

*** மொரகஹாகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தை மகாவலி அதிகார சபையின் நிருவாகத்தின் கீழ் ஒப்படைத்தல்.**

விவசாயக் கைத்தொழிலுக்கு மகாவலியின் பங்களிப்பு

2019 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தியில் 23%, சோயா போஞ்சியில் 96% உம், நிலக்கடலை உற்பத்தியில் 5% உம் மற்றும் மிளகாய் உற்பத்தியில் 7% உம், சோளம் உற்பத்தியில் 6% மற்றும் பெரிய வெங்காயம் உற்பத்தியில் 40% என்றவாறு தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு மகாவலி வலயம் பங்களிப்பு செய்துள்ளது

*** 2019 ஆம் ஆண்டிற்கான மகாவலி விளையாட்டு விழாவை மகாவலி டீ வலயத்தில் நடாத்துதல் மற்றும் அதற்குச் சமாந்தரமாக டீ வலயத்தில் மகாவலி விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்தல்**

*** மகாவலி, உணவகங்களை மகாவலி பீ வலயத்தில் ஆரம்பித்தல்**

*** சீ வலயத்தில்'' மங்சல" மற்றும் டீ வலயத்தில் பிசோபுர ஆகிய சுற்றுலா விடுதிகளைத் திறந்து வைத்தல்**

*** மகாவலி கைத்தொழில் விருது விழாவை வெற்றிகரமாக நடாத்துதல்**

மகாவலி அதிகாரப்பிததேசத்தில் தனது முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கைத்தொழிலாளர்களில் இருந்து சிறந்த மூன்று வியாபாரிகளுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என்ற பதக்கள் வழங்கப்பட்டதோடு மேலும் 34 வியாபாரிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மகாவலி குடியேற்ற வாசிகளுக்கு காணி உறுதிகளை வழங்குதல்.

කලාපය	ඉලක්කය	අවසරපත්‍ර	ප්‍රදානපත්‍ර	දීර්ඝ කාලීන බදුකර	විහාරස්ථාන	වෙනත් (නිවාස දීමනාපත්‍ර/ රාජ්‍ය ආයතන)	එකතුව
බී	7500	6130	683	6	8	2	6829
සී	9500	5433	3851	-	13	22	9319
ඩී	1600	965	621	-	2	-	1588
එච්	6500	627	890	2	3	204	1726
එල්	3600	303	1841	-	-	-	2144
මොරගහකන්ද	1500	490	581	2	2	1	1076
වික්ටෝරියා	600	-	35	1	1	3	40
හුරුළුවැව	1000	306	350	90	3	47	796
වලව	6500	1394	3500	8	-	3	4905
රඹකැන්ඔය	1700	1489	-	-	2	7	1498
එකතුව	40,000	17,137	12,352	109	34	289	29,921

මකාවලි இணைந்த கருத்திட்டம்.

2019ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 230மில்.ரூபா ஆகும்.அதில் 120மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	நீர் விநியோகக் கால்வாய் நிருமானம் .'.புனரமைப்பு	8.5 கி.மீ
02	வாய்கால் நிருமானம்.'.புனரமைப்பு	68.20 கி.மீ
03	ஒத்துழைப்பு வயல் வாய்கால் புனரமைப்பு	4 கி.மீ
04	கட்டடிடப் பழுதுபார்ப்பு	4

பி வலய மாதுருஓயா தென் கரை அபிவிருத்திக் கருத்திட்டம்
(மல்வென்ன மற்றும் மகாவலிதென்ன)

2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 45 மில். ரூபா ஆகும். அதில் 40 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	வயல் வாய்கால் நிருமானம்	1.8 கி.மீ
02	நீர் விநியோகக் கால்வாய் நிருமானம்	1.3 கி.மீ
03	சாய் பாலம் நிருமானம்	1

ரிதி மாலியத்த ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்.

2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 76 மில். ரூபா ஆகும். அதில் 53 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	நீர்ப்பாசன முறைமை மறுசீரமைப்புச் செய்தல்	3.74 கி.மீ. நீர்ப்பாசனக் கால்வாய்
02	வீதி மறுசீரமைப்புச் செய்தல்	9 வீதிகள் பூர்த்தி, 1 நடைபெற்று வருகின்றது. 300 மீற்றர் கொங்கிரீட் வீதி 04 கல்வர்ட் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
03	பொதுக் கட்டிடம் நிருமானம் மற்றும் மறசீரமைப்புச் செய்தல்	7 கட்டிடம்
04	தாபன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	39 நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது
05	விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2500 குடும்பங்களுக்காக விவசாய ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்
01	நீர்ப்பாசன முறைமை மறசீரமைப்புச் செய்தல	3.74 கி.மீ. நீர்ப்பாசனக் கால்வாய்

ரம்பகென் ஓயா ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்.
2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 90 மில். ரூபா(திருத்தம் செய்யப்பட்ட) ஆகும். 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் நிறைவடையும் போது அதில் 71 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	வீதி மறுசீரமைப்புச் செய்தல்	5 வீதிகளை மறுசீரமைப்புச் செய்தல
02	கட்டடிட நிருமானம்	11
03	காணி மற்றும் காணி அபிவிருத்தி (நட்டஈடு வழங்கல்)	• 30 சராசரி மட்ட துண்டுகள் , 924 ஆய்வுகள் • 08 துண்டுகளட் கையகப்படுத்தல்
04	விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	3550 குடும்பங்களுக்கான ஊக்குவிப்பு
05	தாபன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	70 நிகழ்ச்சித் திட்டங்கள்

06	வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	08 நிகழ்ச்சித் திட்டங்கள்
07	சுற்றாடல்	28 நிகழ்ச்சித் திட்டங்கள்

வெலி ஓயா ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்.

2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 220 மில். ரூபா ஆகும். அதில் 179 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	காணிகளை அடையாளமிடல் மற்றும் அளத்தல்	1413 கட்டி
02	நீர்ப்பாசன கால்வாய் மறுசீரமைப்புச் செய்தல்	46 கல்வர்ட்
03	கட்டடிட நிருமானம்	09 கட்டிடங்கள்
04	விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	3000 குடும்பங்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

அவசர கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் கீழ் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன கருத்திட்டப் புனரமைப்பு

2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 100 மில். ரூபா ஆகும். அதில் 82.46 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம்
01	ஆரம்ப வேலை மற்றும் நீர்த் தேக்கங்களின் பழுதுபார்ப்பு மறற்றும் பராமரிப்பு செய்தல்	8 பிரதான நீர்த் தேக்கங்களின் 90 % பூர்த்தி

விவசாய கால்நடை வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்.

2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 180 மில். ரூபா ஆகும். அதில் 163.45 மில் ரூபா பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயப் பயிர்ச் செய்கை

2018/2019 மத்திய போகத்தில் மகாவலி பிரதேசங்களில் நெல் பயிரிடப்பட்ட காணியின் அளவு 93,336 ஹெக்டயார் என்பதோடு கிட்டத்தட்ட 537,533 மெ.டென் நெல் உற்பத்தி செய்யப்பட்டன. 2019 சிறு போகத்தில் நெல் பயிரிடப்பட்ட காணியின் அளவு 63,358 ஹெக்டயார் என அறிக்கையிடப்பட்டுள்ளதோடு நெல் உற்பத்தி. 352,240 மெ. டென்கள் ஆகும். இரண்டு போகங்களிலும் அறிக்கையிடப்பட்டுள்ள மொத்த நெல் உற்பத்தி 889,773 மெ. டென்கள் ஆகும்.

ஏனைய பயிர்ச் செய்கைகள்: களப் பயிர்கள். 14,142 ஹெக்டயார்கள், பழவகைகள். 13,641 ஹெக்டயார்கள் மற்றும் நிரந்தரப். பயிர்கள் 5 157 என்றவாறு பயிர் செய்யப்பட்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தி - 2019

உற்பத்தி	இலக்கு	முன்னேற்றம்
திரவப் பால்	32 மில். லீற்றர்	25.51 மில். லீற்றர்
கோழி இறைச்சி	20,000 மொகா டொன்	12,310 மொகா டொன்
நன்னீர் மீன்	17,000 மொகா டொன்	36,000 மொகா டொன்
அலங்கார மீன் (வளர்ப்பு மீன்)	17.மில் சோடி	29.83 மில் சோடிகள்

2.1.4. மத்திய சுற்றாடல் அதிகார சபை

மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விசேட அடைவுகள்.



அதிமேதகு சனாதிபதி மற்றும் ஏனைய விருந்தினர்களின் பங்குபற்றலுடன் **2019** ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் **29** ஆம் திகதி தாமரைத் தாடகம் (நெலும் பொகுன) மண்டபத்தில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக வழங்கிய செயற்பாட்டுப் பங்களிப்புக்காக 8 தங்க விருதுகள் , 11 வெள்ளி விருதுகள், **15** வெண்கல விருதுகள், 22 திறமை விருதுகள் என்பன வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் போது 10 பிரதேசங்கள் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதோடு ஹாலிஎல நீர் மூலத்தை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போன்று பொல்கொட, தளங்கம, முத்துராஜவெல, பன்சலாதென்ன, மரகலகந்த மற்றும் கிரேகரிவெவ ஆகிய சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

1.சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு		
1. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்குதல்	பாரிய அளவிலான மாசுச் செயற்பாடுகள் கொண்ட கைத்தொழில்கள் 1,018	மத்திய அளவிலான மாசுச் செயற்பாடுகள் கொண்ட கைத்தொழில்கள் 777
2. இணக்கப்பாட்டு பின்னாய்வு	பாரிய அளவிலான மாசுச் செயற்பாடுகள் கொண்ட கைத்தொழில்கள் 3,208	மத்திய அளவிலான மாசுச் செயற்பாடுகள் கொண்ட கைத்தொழில்கள் 3,417
3. இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழில்களுக்காக அதிகாரியின் இணக்கப்பாட்டை வழங்குதல்	884	
4. புதிய கைத்தொழில் சூழல் சிபாரிசுகளை வழங்குதல்	1,054	
5. மக்களின் துன்ப துயரங்களை முன்வைப்பதற்கான பொறிமுறை	2,828 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் அதில் 2,032 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன.	
6. நீர்க்கட்டமைப்பை பாதுகாப்பதற்காக தற்கால நீர் நிலைமை பின்னாய்வு செய்வதற்காக 41 நீர் மாதிரிகள் பகுப்பாய்வு. செய்யப்பட்டன.	களனி கங்கையின் 17 இடங்களில், மாஓயாவில் 08 இடங்களில் பெந்தோட்டை கங்கையில் 08 இடங்களில் தியவன்னா ஓயாவில் 08 இடங்களில்	
7. தொடர்ச்சியாக வாயு நிலைமையைப் பின்னாய்வு செய்தல்	கொழும்பு கோடடை, பத்தரமுல்லை மற்றும் கண்டி	
8. புதிய கைத்தொழில்களை தாபித்தல் தொடர்பாக தொழில்நுட்ப சிபாரிசுகளை வழங்குவதற்காக பல் தரப்புக் குழு நியமிக்கப்பட்டது.		
9. துறைசார் நீர்த் தரம் பின்னாய்வு ஒழுங்குவிதிகள் 2126/2019 ஆம் இலக்கம வர்த்தமானியிலும், நிலையான வாயு வெளியீட்டைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குவிதிகள் 2148/20 ஆம் இலக்க வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டன		
10. கலி சேவையை வழங்குவோரைப் பதிவு செய்வதற்கான வழிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.		
11. இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் வெதுப்பகம் மற்றும் சுண்ணாம்பு போரனைகளால் ஏற்படும் மாசைக் கட்டுப்படுத்துவதற்காக இரண்டு தொழில்நுட்ப வழிகாட்டு நெறிகளும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர (EPL) செயற்பாடுகளை நாடு முழுவதிலும் விதிமுறையாக்கம் செய்வதற்காக வழிகாட்டல் நூல் ஒன்றும் தயாரிக்கப்பட்டது.		
12. தேசிய சுற்றாடல் கொள்கையினுள் நிலக்கீழ் நீர் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை உள்ளடக்கி திருத்தியமைக்கப்பட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது		
2. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு		
1. கருத்திட்டங்கள் மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புக்களை மதிப்பீடுக்கு உட்படுத்தல்	சுற்றாடல் பாதிப்புக்களை மதிப்பீட்டு அனுமதிகள் 17 உம், ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அனுமதிகள் 266 உம் தரங்களுக்கு இசைவானதா என்பதை உறுதி செய்து கொள்ளல் 57 உம், தொழிநுட்ப உதவிகளை வழங்கும் கருத்திட்டங்கள் 44 உம்.	

2. தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஏற்பாடுகளை உள்ளடக்கும் வரைவை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
3. சிறிய நீர் மின் கருத்திட்டங்கள் தொடர்பாக மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுக்கான பரிந்துரைகளை (ToR). இலங்கை நிலைத்திருக்கத்தகு சக்தி அதிகார சபைக்குக் வெளியிடப்பட்டது.
4. அறிவித்தல் மற்றும் விளம்பரப் பலகைகள் மூலம் ஏற்படக் கூடிய பார்வை மாசைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய ஒழுங்கு விதிகள் 2019.11.05 ஆம் திகதிய 2148/19 ஆம் இலக்க வர்தமானியில் வெளியிடப்பட்டது..
3. கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்
1.ஆபத்தான கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளின் கீழ் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.
2. பாசல் உடன்படிக்கையின் " பி" அட்டவணையில் அடங்கும் ஆபத்தான இரசாயனப் பொருட்களை இறக்குமதி தடை நீக்கல் அனுமதிகள் 225 உம், ஆபத்தான கழிவுகள் இறக்குமதிக்கான அனுமதிகள் 73 உம் வழங்கப்பட்டன.
3. பாசல் உடன்படிக்கையின " A" மற்றும்" B" கீழ் பட்டியல் படுத்தப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை இந்நாட்டின் தேச எல்லையூடாக கொண்டு செல்வதற்கான 34 அனுமதிகளும் தேச எல்லையூடாக இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான 22 அனுமதிகளும் வழங்கப்பட்டன.
4. இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கான சுற்றாடல் சிபாரிசுகள் 60 உம், இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 419 அனுமதிகளும் வழங்கப்பட்டன.
5. வெள்ளை எஸ்பெஸ்டோ இறக்குமதிக்கான 74 அனுமதிகள் வழங்கப்பட்டன.
6.ஆபத்தான கழிவுப் பொருட்கள் பெயர் பட்டில் தயாரிக்கப்பட்ட வெளியிடப்பட்டது.
7. மாத்தர கொட்டவில கழிவுகள் மூலம் வலுச் சக்தி உற்பத்தி செய்யும் கருத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.
8. 3R எண்ணக்கரு (மட்டுப்படுத்தல், மீண்டும் பயன்படுத்தல் மற்றும் மீள்சுழற்சி) செயற்பாடுகளைச் செய்வதற்கு நாடளாவிய ரீதியில் பரவி இருக்கும் கழிவுகளை சேகரிப்பற்கான சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சி செய்வோர்களை அதிகார சபையில் பதிவு செய்து கொள்ளவதற்காக ஊக்குவித்தல்.
9. நீரை போத்தலில் அடைக்கும் போது பயன்படுத்தப்படும் PET போத்தல் நிறம் அற்றதாக இருக்க வேண்டுமென்பதோடு லேபல் செய்யும் போது PVC அற்ற மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
10. உணவு பக்கற் அல்லது கட்டை(பண்டல்) லேபல் செய்ய வேண்டிய தகவல்களை உள்ளடக்கி 2019.11.29 ஆம் திகதிய் 2151/58 ஆம் இலக்க வர்த்தமானியில் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.
11. புத்தளம், மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இலக்ரோனிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
12. அலுமீனியம் உற்பத்தி மீள்சுழற்சி செய்வதை ஊக்குவிப்பதற்காக பேராதனை பல்கலைப்பழகத்துடன் இணைச்து " Meting point" என்ற கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
13. நெஸ்லே லங்கா மற்றும் டெட்ரா பெக் இந்தியா தனியார் கம்பனிகளின் தலைமையில் பொலிதீன் மற்றும் அலமினியம் கலந்த பொதிகளை மீள்சுழற்சி செய்வதற்கான வசதியைத் தாபிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
14. சகாதாரத் (துப்பரவேட்பாட்டு) துண்டுகள் Sanitary towels அகற்றுவதற்காக இந்திய வேதியல் எரிப்புத் தீர்வு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது..
15. பொலிதீன் தடையை வலுவாக்கம் செய்வதற்காக இலங்கை பொலிஸ் மற்றும் நுகர்வோர் சேவை அதிகார சபையின் ஒத்துழைப்புடன் 10,412 சுற்றி வழைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
4 சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டல்
1. வரையறுக்கப்பட்ட வசதிகளின் கீழ் சுற்றாடல் முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட 5 பாடசாலைகளுக்கு வாசிகசாலை பொருட்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டன.
2. தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக வாயு மாசடைவை கட்டுப்படுத்தல் தொடர்பாக சாதாரண பொது மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிததிட்டங்கள் / செயற்பாடுகள் **25** மாவட்டங்கள் முழுவதும் நடாத்தப்பட்டன.

5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
1. மேல் மாகாணத்திற்கான இணைய வலையமைப்புச் செய்யப்பட்ட ஈரநில பெயர்பட்டியல் தயார் செய்யப்பட்டது.
2. பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தை மீளாய்வு செய்வதற்காக **ArcGIS** தயார் செய்யப்பட்டது.
3. இலங்கையினுள் சுற்றாடல் திட்டத்தைத் தயாரித்தல், முகாமைத்துவம், பின்னாய்வு, பகுப்பாய்வு, அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக பொருத்தமான பிரதேசத்தை இனங்கண்டு கொள்ளல், கழிவுக்காக மன் ஆயத்தம் செய்தல் மற்றும் அறிவூட்டும் செயற்பாடுகளுக்காக GIS சுற்றாடல் தகவல் முறைமை 2019 ஆண்டில் தயார் செய்யப்பட்டது.
4. மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்காக மாவட்ட சுற்றாடல் வளங்கள் விபரம் தயார் செய்யப்பட்டது.

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்.)	திருத்திய தொகை (ரூபா.மில்.)	முன்னேற்றம் (ரூபா.மில்.)	மன்னேற்றம் சதவீமாக
மீண்டெழும் செலவுகள்	1,006.00	1,006.00	1,045.40	103.88%
மூலதனச் செலவுகள்	55.00	55.00	48.63	88.41%
கருத்திட்டம்				
1. பாடசாலைச் சுற்றாடல் முன்னேடி நிகழ்ச்சித் திட்டம்- பசுமை முன்னோடி	20.00	20.00	18.64	93.19%
2. பிலிசரு தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்	53.00	53.00	51.33	96.84%
3. இணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்- தெதியாகந்த, கம்பஹா	47.00	17.50	15.83	90.46%
4. உள்ளக நீர் மூலங்களின் நீர் இருப்பு நிலைப் பரிசீலனை செய்யும் கருத்திட்டம்	9.20	6.20	5.54	89.35%
5. சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டல் மற்றும் பசுமை விருது	22.00	22.00	20.97	95.32%
6. இலங்கையினுள் திண்மக் கழிவகற்றல் வசதிகள் நிருமானிக்கும் கருத்திட்டம் (EDCF கருத்திட்டம்	24.59	24.59	22.36	90.93%

- **திண்மக் கழிவகற்றல் வசதிகளை நிருமானிக்கும் கருத்திட்டம் (EDCF கருத்திட்டம்)**

திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரச்சினைக்குத் தீர்வாக எச்ச திண்மக் கழிவுகளை அகற்றுவதற்காக அநுராதபுரம் கிரிக்குளம் கிக்கடுவா மொன்ரோவியாவத்தை, மெதிரிகிரிய மீகஸ்வெவ மற்றும் யாழ்ப்பாணம் கீரிமலை ஆகிய பிரதேசங்களில் துப்புரவேற்பாட்டுச் கழிவுகளை சேகரிக்கும் இடத்தைத் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் மூலம் உரிய மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை அகற்றுவதற்காக கூட்டு முறைமையை அடிப்படையாக கொண்ட பொது இறுதி வெளியேற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

2.1.5 பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகம் (CECB)

2019 ஆம் ஆண்டு இறுதிகப் பகுதியாகும் போது அடைந்த கொண்ட முன்னேற்றம்.

2019 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்ட புதிய மதியுரைக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 120	2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட மதியுரைக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை -99
மதியுரை சேவைகளின் மொத்தப் பெறுமதி 1,053 மில். ரூபா	மதியுரை சேவைகளின் மொத்தப் பெறுமதி 836 மில். ரூபா

நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

களுகங்கை பிரதான வேலை அபிவிருத்திக் கருத்திட்டம்
மொத்தக் கருத்திட்டச் செலவு : 14,250 மில். ரூபா / 31.12.2019 ஆம் திகதிக்கு அடைந்து கொண்ட முன்னேற்றம்: **100%**
உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்.
மொத்தக் கருத்திட்டச் செலவு 71,400 மில். ரூபா / 31.12.2019 ஆம் திகதிக்கு அடைந்து கொண்ட முன்னேற்றம்: **70%**
புரோடம்லன்ட் நீர் மின் கருத்திட்டம்
மொத்தக் கருத்திட்டச் செலவு 11,000 மில். ரூபா / 31.12.2019 ஆம் திகதிக்கு அடைந்து கொண்ட முன்னேற்றம்: **77%**

கட்டிடங்கள் சேவைக் கருத்திட்டங்கள்.

	கருத்திட்டம்.	மதிப்பீடு	முன்னேற்றம்
1	பாதுகாப்பு தலைமையகக் கட்டிடத் தொகுதி கருத்திட்டம்,அகுரகொட	மொத்தக் கருத்திட்டச் செலவு: 55,000 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம்: **59%**
2	மெனிங் சந்தை பெலியகொடை மீளமைத்தல்	மொத்தக் கருத்திட்டச் செலவு: 4,260 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம்: **95%**
3	நாராஹேன்பிட்ட மாவட்ட செயலாளர் அலுவலகக் கட்டிடத் தொகுதி	மொத்தக் கருத்திட்டச் செலவு 2,515 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம்: **100%**
4	சகாதார அமைச்சுக்காக தலைமை அலுவலகக் கட்டிடத் திட்டமிடல் மற்றும் நிர்மானம்	மொத்தக் கருத்திட்டச் செலவு: ,979 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம்: **50%**
5	சட்டமா அதிபர் திணைக்களத்தைத் தாபித்தல், கொழும்பு **12**	மொத்தக் கருத்திட்டச் செலவு 960 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம: 87%
6	நனோ- தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞானப் பூங்கா	மொத்தக் கருத்திட்டச் செலவு: 1,400 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றம்: **54%**
7	இலங்கை துறைமுக அதிகார சபைக்காக **17** மாடிகளைக் கொண்ட புதிய அலுவலகக் கட்டிட நிர்மானம்	மொத்தக் கருத்திட்டச் செலவு: 4,274 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம: **41%**
8	இரத்தினபுரி **5** மாடிகள் கொண்ட நீதிமன்ற கட்டடத் தொகுதியை நிர்மானித்தல்	மொத்தக் கருத்திட்டச் செலவு 1,800 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம: **13%**
9	செத்சிரிபாய கட்டிடத் தொகுதியை நிர்மானித்தல் (செத்சிரிபாய - கட்டம் **3**)	மொத்தக் கருத்திட்டச் செலவு: 15,600 மில். ரூபா	அடைந்து கொண்ட முன்னேற்றம: **40%**

10	கொழும்பு **12** இல் சிறப்பு நீதி மன்றத் தொகுதி	அக் கருத்திட்டத்தின் செலவு 14,600 மில். ரூபா	மொத்தக் கருத்திட்டச் செலவு: 14,600 மில். ரூபா

கழ்க் கட்டுமான சேவை கருத்திட்டம்

முன் கொண்டு செல்ல வேண்டியுள்ள சில மதியுரைக் கருத்திட்டங்களின் விபரங்கள்

	கருத்திட்டம்	மதிப்பீடு	முன்னேற்றம்
1	மாத்தறை- பெலியத்த புகையிரதப் பாதை நீடிப்பு செய்தல் கருத்திட்டம்	மொத்தக் கருத்திட்டச் செலவு 40 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றம் : **86%**
2	தக்ஸிண அதிவேக வீதி விஸ்தரிப்புக் கருத்திட்டம்	மொத்தக் கருத்திட்டச் செலவு 255,280 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றம் : **98%**
3	மத்திய அதிவேக வீதி கருத்திட்டம்	மொத்தக் கருத்திட்டச் செலவு 137,340 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றம் : **81%**
4	கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி கருத்திட்டம் - உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நில அலங்காரம்	மொத்தக் கருத்திட்டச் செலவு 144,542 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றமி : **59%**
5	கொழும்பு நகர கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் - அருவாக்காடு	மொத்தக் கருத்திட்டச் செலவு 16,103 மில். ரூபா	அடைந்துகொண்ட முன்னேற்றம் : **90%**
6	சாதாரண புகையிரத (LRT) கருத்திட்டத்தின் முன் சாத்தியக் கூற்று மற்றும் சாத்தியக் கூற்று அராய்ச்சி	மொத்தக் கருத்திட்டச் செலவு 202,47 மில். ரூபா	மொத்தக் கருத்திட்டச் செலவு 202,47 மில். ரூபா
7	**20**MW சீதாவக்க கங்கை நீர் மின் கருத்திட்டத்தின் ශක්‍යතා ஆராச்சி மற்றும் கேள்விமனுக்கோரல் கட்டங்களைத் திட்டமிடல் (SGHPP)	மொத்தக் கருத்திட்டச் செலவு 12.000 மில். ரூபா	முன்னேற்றம : **100%**

2019 ஆம் வருட நிறைவில் முன்கொண்டு செல்ல வேண்டியுள்ள மதியுரைக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 321

முன்கொண்டு செல்ல வேண்டியுள்ள மதியுரைக் கருத்திட்டங்களின் பெறுமதி - 2,668 மி.ரூபா

	மதியுரைக் கருத்திட்டம்	மொத்தக் கருத்திட்ட செலவு ரூபா.மில்
1	முல்லேரியா ஆதார வைத்தியசாலையின் தேசிய பக்கவாத வைத்திய நிலையம் நிர்மாணம்	1,111
2	மாத்தர நீதிமன்ற கட்டிடத் தொகுதி நிர்மாணம்	833
3	தேசிய கண் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, அறுவைச் சிகிச்சை மற்றும் வாட் தொகுதி நிர்மாணம்	4,500
4	றிஜ்வே சீமாட்டி வைத்தியசாலையின் இருதய மற்றும் நுண்ணாய்வு உதவி கட்டிடத் தொகுதி நிர்மாணம்	2,631
5	வீ ஓயா நீர்த்தேக்க சாத்தியக் கூறு ஆராய்ச்சி	16,000
6	தற்போது காணப்படும் வளவில் தாதி பீடம் நிர்மானித்தல்- கட்டம் I- பீடங்களுக்கான கட்டிடம் நிர்மானித்தல் தாதி பயிற்சிக் கல்லூரி - ஸ்ரீ ஜயவர்தனபுர	7,172
7	தற்போது காணப்படும் வளவில் தாதி பீடம் நிர்மானித்தல்- கட்டம் IIII- இல 2 தங்கும் விடுதிக் கட்டிடம் நிர்மானித்தல் தாதி பயிற்சிக் கல்லூரி - ஸ்ரீ ஜயவர்தனபுர	5,247
8	மிஹிந்தலை விடுதி வளாகத்திற்குரிய மலக்கழிவு மற்றும் கழிவு நீர் சேகரித்தல் மற்றும் சுத்தம் செய்தல் முறைமையைத் திட்டமிடல்,நிருமானித்தல்,பூரனப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்	156

CECB நிதிச் செயலாற்றுகை

அரச சார்பாக அவசர அடிப்படையின் மீது எந்தவொரு ஆபத்தான சூழ்நிலையிலும் செயற்படும் சாத்தியம் மற்றும் கொள்திறன் கொண்ட அரச நிறுவனமாக பெயர் பெற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டில் CECB இன் குழுமத்தின் வருமானம் 13.1பில்லியன் ரூபாவாகும். CECB இற்கு கையளிக்கப்பட்ட அனைத்து நிர்மாணப் பணிகளின் முழு உரிமை கொண்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனிக்கு (CESL) உரித்து மாற்றம் செய்தமை காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது CECB இன் வருமானம் 21.8% ஆலும் மற்றும் மொத்த இலாபம் 45% இனாலும் குறைவடைந்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் வரிக்குப் பின்னரான இலாபம் முறையே 203 மில் ரூபா மற்றும் 345 மில் ரூபாவாகும். CECB இன் இலாபம் 49% இனால் வீழ்ச்சியடைந்துள்ளதோடு குழுமுத்தின் இலாபம் 34% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.. பணியகத்தின் இலாபம் மொத்த சொத்துக்களின் பெறுமதியான 22,994 மில்லியன் ரூபாவில் 1.5% பிரதிநிதித்துவம் செய்கின்றது.

நித மற்றும் பெறுகை வழிகாட்டல் மற்றும் ஒழுங்குகளுக்கு ஏற்ப செயற்படுகின்ற சுய வருமானம் உழைக்கின்ற அரச தொழிலொன்றாக (SOE) சவால்களுக்கு முகம் கொடுத்து இந்தச் செயலாற்றுகையை அடைந்துள்ளது.

CECB வழிநடாத்தல் மற்றும் செயலாற்றுகை - 2019

விபரம்		2019	2018
மொத்த வருமானம்	மில். ரூபா	7,548	9,667
செயற்பாட்டு இலாபம்	மில். ரூபா	30	235
மொத்தச் செலவு	மில். ரூபா	7,693	9,602
வரிக்கு முன் தேறிய இலாபம்	மில். ரூபா	340	526
நடைமுறையில்லாச் சொத்துக்கள்	மில். ரூபா	2,918	2,559
நடைமுறைச் சொத்துக்கள்	மில். ரூபா	16,718	16,814
நடைமுறையில்லாப் பொறுப்புகள்	மில். ரூபா	327	168
நடைமுறைப் பொறுப்புக்கள்	மில். ரூபா	13,063	13,406
சம பங்கு	மில். ரூபா	6,247	5,799
மொத்தச் சொத்துக்கள்	மில். ரூபா	19,637	19,373
நடைமுறை விகிதம் (நடப்பு சொத்துக்கள்/ நடைமுறைப் பொறுப்புகள்)		1.3:1	1.2:1
சொத்துக்கள் மீது பிரதிபயன்கள்(வரிக்கு முன்னர் தேறிய இலாபம்/ மொத்த சொத்துக்கள்)		1.7%	2.7%
சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனத்தின் மீது பிரதிபயன்கள் (தேறிய செயற்பாட்டு இலாபம்/ மொத்தச் சொத்துக்கள் - நடைமுறைப் பொறுப்புக்கள்)		0.5%	4%

2.1.6 புவிச்சரிதவியல் அராய்ச்சி மற்றும் சுரங்க அகழிவுப் பணியகம்.

கனிபொருள் ஆய்வு, கனிபொருள் அகழ்வு மற்றும் கனிபொருள் போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் மற்றும் சுற்றாடல் மேற்பார்வை தொடர்புடைய பல்வகைமை மற்றும் பிரச்சினைகள் காரணமாக அகழ்வு பிரிவு மிகவும் கனெமான சவால்களுக்கு மகம்கொடுத்துள்ளது. சட்டமுரணான அகழ்வு நடவடிக்கைகள் மற்றும் அகழ்வு நடவடிக்கை மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பை குறைத்துக்கொள்வதற்காக அகழ்வுப் பிரிவு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது

பசுமை மணல் துறைஎண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு ஆற்றுத் தொகுதிக்கு ஏற்படுகின்ற பாதகமான சுற்றாடல் தாக்கங்களைக் குறைப்பதற்காக ஆறுகள் சார்ந்த மணல் அகழ்வுப் பிரதேசங்களை தரப்படுத்துவதங்கு நடவடிக்கையெடுக்கட்டது. இலங்கை பொலிஸின் விசேட செயலணியுடன் இணைந்து செயற்படுவதனூடாக பணியகத்தின் சட்டத்தை நடைமுறைப்படுத்து பிரிவு மேலும் வலுப்படுத்தி சட்டவிரோத மணல் மற்றும் மண் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

பணியகத்தின் ஒழுங்குபடுத்தல் சேவை மேலும் பண்முகப்படுத்தி வவுனியா மற்றும் மாத்தளை நகரங்களில் இரண்டு புதிய பிரதேச அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

பணியகத்தின் முக்கிய பலம் புவிச்சரிதவியலாளர்கள் மற்றும் அகழ்வுப் பொறியியலாளர்களைக் உள்ளடங்கிய உயர் தகைமை கொண்ட தொழில்நுட்ப பணிக்குழுவாகும்.

கடந்த பணிக்குழு எண்ணிக்கை திருத்தம் காரணமாக உருவாக்கப்பட்ட புதிய பதவிகள் மற்றும் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு பொருத்தமான நபர்கள் 2019 ஆம் வருடத்தினுள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதன் காரணமாக புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம் தனது நாளாந்தப் பணிகளை மேற்கொள்ளும் போது முகம்கொடுத்த பிரதானமான தடை நீங்கியது. நிர்மாணப் மூலப்பொருட்களைப் பரீட்சித்தல், அனு மூலப்பொருட்களை பரீட்சித்தல் மற்றும் மண் மாதிரிகளின் புவி இரசாயன நிலைமையைத் பரீட்சித்தல் ஆகிய பணிகள் புவிச்சரிதவியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை தங்காலை ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் இருபடிப் புவிச்சரிதவியல் இரண்டு வரைபடங்கள் (1: 50000) அச்சிடல் நடவடிக்கை 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டது. வடமத்திய சப்பிரகமுவ ஆகிய மாகாணங்களில் மாகாண கனிபொருள் நிலவரைபடம் நிறைவு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது அச்சிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அன்றாடப் பகுப்பாய்வு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முக்கிய தடையாக இருந்தது போதுமானளவுஆய்வு கூட மற்றும் நூதனசாலை வசதிகள் காணப்படாமையாகும்.. அதற்கான பரிகாரமாக 6 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றை திட்டமிட்ட 2019 ஆம் வருடத்தினுள் அதன் பிரதான நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

பணியகத்தின் புவிச்சரிதவியலாளர்கள் மற்றும் பொறியியலாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் பொருத்தமான வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை புவிச்சரிதவியர் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம், அவுஸ்திரேலிய புவிச்சரிதவியல் நிறுவனத்துடன் புவிச்சரிதவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று அவுஸ்திரேலியாவில் 2019.11.05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய இராச்சியத்தின் பிரித்தானிய புவிச்சரிதவியல் சங்கத்துடன் அத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒனறைக் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையின் அனுமதி எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்டகாலமாக காணப்பட்ட தேவைப்பாடொன்றைப் பூர்த்தி செய்து. பணியகம் பற்றிய கைநூலில் விரிவான பதிப்பாக " ஷீலா: இலங்கையின் புவி வளங்கள் பற்றிய ஒரு புராணக்கதை " என்ற நூல் வெளியிடப்பட்டது. வருடத்தினுள் பணியகத்திற்கு மிக வலுவான நிதி அடிப்படையொன்று கிடைக்கப்பெற்றதுடன் அதன் முழுமையான வருமானம் 2797.5 மில்.ரூபாவாகக் காணப்பட்டது. 2510 மில் ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டது. தமத அடிப்படைச் சம்பளம் மற்றும் செயலாற்றுகை மீதின் அடிப்படையில் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் ஊக்குவிப்பு படியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. அவ்வாறே 228 மில். ரூபா. தொகையை பணியகத்தின் மூலதனச் சொத்துக்களை விருத்தி செய்வதற்காக செலவிடுவதற்கும் சாத்தியம் கிட்டியது. உதாரணமாக புதிதாக வாகனங்களை கொள்வனவு, அனுராதபுரம், கம்பஹா දිස්ත්‍රික් කණක்காய்வாளர் புதிய வாகனக் கொள்வனவு, அநுராதபுரம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் புதிய வலய அலுவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல், குருணாகல் நகரத்தில் புதிய சொத்துக் கொள்வனவு மற்றும் ஆய்வு கூட உபகரணங்களை வழங்குதல் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

புவிச்சரிதவியல் நிலவரைபடம் தயாரித்தல், கனிபொருள் ஆய்வு, கனிபொருள் ஒழுங்குபடுத்துதல், வாடிக்கையாளர்கள்ால் அனுப்பப்படுகின்ற கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளல் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் மக்களுக்கு புவிச்சரிதவியல் தகவலகள், ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட முதன்மைத் தறைகளுக்கு சேவைகள் வியாபித்துள்ளது..

பிரதானமாக சுற்றாடல் பேண்தகுநிலைமையை உறுதி செய்தல், கனிபொருள் ஆய்வு, பிரித்தெடுத்தல், போக்குவரத்து மற்றும் விற்பனை ஒழுங்குபடுத்துதல் மேற்கொள்ளப்படுவதோடு பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் கனிபொருள் வளங்களை மேம்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.

அம்பாறை மாவட்டத்தில் புத்டங்கல பிரதேசத்தில் புதிய நில நடுக்க (புவியதிர்வு) நிலையத்தைத் தாபித்தல் 2019 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் நிர்மாணப் பணிகில் ஒரு பகுதி வருட இறுதியில் நிறைவு செய்யப்பட்டது. புதிய நிலையம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நாட்டில் காணப்படுகின்ற நில நடுக்க நிலையங்களின் எண்ணக்கை 4 ஆக மாறும். நில நடுக்கம் ,புவி அதிர்வு மற்றும் இந்து சமுத்திரத்தில் ஏற்படுகின்ற நிலநடக்கம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டல் செய்வதை மிகவும் சிறந்த வகையில் மேற்கொள்வதற்கு அதன் மூலம் பணியகத்திற்குச் சாத்தியம் கிடைக்கும்.

From L-R: Gravity assisted manual soil sampling; Paul and GSMB geologists panning for heavy minerals.

மாகாண மட்டத்தில் கனிபொருள் ஆய்வுகளைச் செய்தல் மற்றும் மாகாண கனிபொருள் நிலவரைபடத்தைத் தயார் செய்தல் என்பன பணியகத்தின் பணியாகும். அதற்கமைய கனிபொருள் வளங்கள் அமைந்துள்ள புதிய இடங்களை கண்டறிந்து கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாணத்தினுள் துரிதி மாகாண கனிபொருள் ஆய்வு செய்யப்பட்டது. வட மத்திய மற்றும் சபபிரகமுவ மாகாணங்களில் மாகாண கனிபொருள் நிலவரைபடம் அச்சிடப்பட்டு பிரதிகள் முன்வைக்கப்பட்டன. கொழும்பிலிருந்து கிரித்த வரை கரையோரத்தினுள் கார் வண்டி ஒன்றிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற கெமா கதிர் நிறமாலையியல் பயன்படுத்தி சர்வதேச அணு சக்தி அதிகார சபையின் உதவியுடன் அனு மூலப்பொருள் ஆய்வின் கள அலவல்கள் நிறைவு செய்யப்பட்டன. இதன் மூலம் பன்முக கதிரியக்கத்தன்மை வலயங்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டு குறித்த வலயங்கள் தொடர்ந்தும் ஆய்வு செய்யப்பட்ட வருகின்றன.

புவிச்சரிதவியல் அராய்ச்சி மற்றும் சுரங்க அகழிவுப் பணியகம்.- நிதிச் செயலாற்றுகை

	விபரம்	2019 வருமான இலக்கு (ரூபா.மில்.)	2019.12.31 முன்னேற்றம் (ரூபா.மில்.)	வருடாந்த முன்னேற்றம்%	நிதியம் (நிலையான வைப்பு அல்லது வேறு முதலீடு)
1	வேத்துரிமை வருமானம்	1,986	1,997	100%	
2	அனுமதிப்பத்திர வருமானம்	146	194	128%	
3	வெளிக்களப் பரீசிலனை	441	262	59%	
4	கருத்திட்டம் மற்றும் பரிசோதனைக் கூடச் சேவைகள்	43	27	81%	
5	ஏனையவை	221	316	138%	
	மொத்தம்	**2,837**	**2,786**	**98%**	**276**

வருமானப் பகுப்பு

விபரம்	2019 வருமான இலக்கு (ரூபா.மில்.)	2019 முன்னேற்றம் (ரூபா.மில்.)	வருடாந்த முன்னேற்றம்%	நிதியம் (நிலையான வைப்பு அல்லது வேறு முதலீடு)	திறைசேரிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பு 2019
புவிச்சரிதவியல் அராய்ச்சி மற்றும் சுரங்க அகழிவுப் பணியகம்	2837	2786	98%	276	2510



2.1.7 கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை

2019 ஆம் ஆண்டின் அடைவுகள்/ வெற்றிகள்

1. செயவகத்தின் கொரல் பாறை தொடர்பாக இணைந்த நிறுவன இணைப்பு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல் மூலம் 2019/04/11 ஆம் திகதிய கடல் பாதுகாப்புப் பிரதேசமொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல்

2. திருகோணமலை மற்றும் மிரிஸ்ஸ ஆகிய பிரதேசங்களை அண்மித்ததாக 650 சதுர மீற்றர் கொரல் பாறைப் பகுதி மீளமைக்கப்பட்டது

3. தல்தியவத்தை SPBM முகத்துவாரத்திற்கு அருகில் ஏற்பட்ட 60 மெ. டொன் எண்ணெய்க் கசிவு 4 நாட்களினுள் வெற்றிகரமாக கட்டுப்பாடுக்குள் கொண்டுவரப்பட்டது.

4. 2019/07/18 ஆம் திகதி Sri lanka gloury கப்பல் காலி ரூமஸ்சல பிரதேசத்தில் முருகைக்கல் பாறை சார்ந்துவிபத்துக்குள்ளானமை காரணமாக அதில் உள்ளடக்கப்பட்டிருந்த 6 மெ.டொன் டீசலை பாதுகாப்பாக வெளியேற்ற முடிந்தமை.

5. சர்வதேச கடல் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற Glofouling partnerships கருத்திட்டத்திற்கு தெற்கு ஆசிய வலய முதன்மை உதவி நாடு என்ற வகையில் இலங்கையைத் தெரிவு செய்து கொள்ளல் மற்றும் கப்பல் மூலம் fouling organisms காரணமாக ஏற்படும் மாசுக்கட்டுப் பாட்டுக்குத் தேவையானஅடிப்படை செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

6. 2018 ஆம் ஆண்டிற்குச் சமாந்தரமாக 2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் வருமானத்தை 30% அதிகரிக்க முடிந்தமை.



7. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற நியதிச் சட்ட சபைக்கான 2017 ஆம் ஆண்டின் சிறந்த வருடாந்த அறிக்கை - மூன்றாம் இடத்தை வெற்றி கொள்ளல்.

8. 115 பேரின் பங்களிப்புடன் நாளாந்தம் கரையோரத்தைச் சுத்தம் செய்யும் கரையோரப் பாதுகாவர்களின் நிகழ்ச்சித்திட்டத்தை வருடம் முழுவதும் மேற்கொள்வதற்கு முடிந்தமை மற்றும் அதற்காக தனியார் துறையின் 30% அளவிலான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு முடிந்தமை.

சவால்கள்

1. அதிகார சபையில் சட்டத்திற்கு அமையதயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தும் போது தெமாடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து போதுமானளவு ஒத்துழைப்புக் கிடைக்காமை.
2. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் ஏற்படும் கடல் மாசடைதல் அதிகரித்தல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்படுதல்.
3. விரைவாக கரையோரம் மற்றும் கடல் வலயத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் கடல் மாசடைவதை தடுப்பதற்காக போதுமானளவு சட்ட ஏற்பாடகள் தற்போதைய சட்டத்தில் காணப்படாமை.
4. கப்பல் மூலம் ஏற்படும் கடல் மாசடைதலைக் தவிர்ப்பதற்காகக் காணப்படுகின்ற சர்தேச உடன்படிக்கை மற்றும் கப்பல் மூலம் ஏற்படும் மாசடைவுகளுக்காக நட்டஈடு பெற்றுக் கொள்வதற்காக உள்ள சர்தேசப உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அவ்வுடன்படிக்கைகளின் ஒரு தரப்பாக இல்லாத காரணத்தால் இலங்கையினுள் அச்சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளமை.
5. அதிகார சபைக்கு பிரதான அலுவலகக் கட்டிடம் இன்மை மற்றும் குத்தகை அடிப்படையில் பிரதான அலுவலகத்தை தெமட்டகொடயிலிருந்து நவால பிரதேசத்திற்கு 2019 ஆம் ஆண்டில் இடமாற்றம் செய்ய வேண்டியேற்பட்டது.

எதிர்கால அடையிலக்குகள்

1. கடல் மாசடைவதை தவிர்ப்பதற்காக சட்டத்தின் கீழ் சட்ட ஏற்பாடகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் கடல் மாசடைவதை தவிர்த்தல் சட்டத்தில் தேவையான அனைத்து புதிய சட்ட ஏற்பாடுகளையும் சேர்த்து திருத்தம் செய்தல்.

2. அதிகார சபைக்காக வழங்கப்பட்டுள்ள காணியில் அனைத்து வசதிகளும் கொண்ட அதிகார சபையின் தலைமையகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்.

3. கப்பல் மூலம் ஏற்படுகின்ற எண்ணெயக் கசிவு மாசடைதலின் போது செயற்படுவதற்காக தேசிய அவசர எண்ணெய் கசிவின் போது செயற்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக கப்பல்களுக்கு விதிக்கப்படுகின்ற வரி மூலம் மேற்படி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

4. இலங்கையில் உள்ள கொரல் பாறைகளை பாதுகாப்பாதற்காக இணை நிறுவன செயற்பாடுகளை பலப்படுத்துவதன் மூலம் கடல் பாதுகாப்பு வலய அளவை அதிகரித்தல்.

5. எண்ணெய் கசிவின் போது செயற்பாட்டுத் திட்டத்தை உரிய முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம் காணப்படுகின்ற வழிமுறையை பலப்படுத்துதல்.

6. 2020- 2030 வரையிலான காலப்பகுதிக்கு இலங்கையில் கடல் மாசடைதல் தொடர்பான கொள்கை, மூலோபாயம் மற்றும் தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாக அனுமதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் செயற்படுத்தல்.

7. இலங்கையில் அனைத்து கரையோர மாவட்டங்கள் உள்ளடக்கும் வகையில் கரையோரத்தை அண்மித்த கடல் வலயத்தில் பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய உக்காத திண்ம கழிலுகள் மூலம் ஏற்படும் மாசடைவைக் தடுத்தல் மற்றும் குறைப்பதற்காக கரையோரத்தைப் பாதுகாப்போரின் நிகழ்ச்சித்திட்டத்தை பலப்படுத்தல் மற்றும் கரையோர வலயத்துக்குள் திண்ம கழிவுகள் ஒன்று சேருவதை தவிர்ப்பதற்காக ஆறுகள்,கால்வாய்களில் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் தடைகளை (Litter Traps) தாபித்தல்.

2.1.8 தேசிய இரத்தினக்கல் மற்றம் தங்க ஆபரணங்கள் அதிகார சபை

இந்த அதிகார சபையினால் இரத்தினக்கல் சுரங்கங்கள் அகழ்வ்காக அனுமதிப்பத்திர் வழங்கல், இரத்தினக்கல் படிமங்களை கண்டுபிடித்தல், தங்க ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல் தங்க அளவைநிச்சயப்படுத்தல், இரத்தினக்கல் பரிசோதனைச் செய்தல் மற்றும் சான்றிதழ் வழங்கல், இரத்தினக்கல் ஏற்றுமதி செய்யும் போது வசதிகளை வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் பிரதான வருமானம்

இல	பிரதான வருமானப் பகுப்பு	வருமானம் (ரூபா)
1	இரத்தினக்கல் காணிகளை ஏலவிற்பனை செய்தல்	9,094,663.
2	அனுமதிப் பத்திரம் வழங்குதல்- (அகழ்வு/ வியாபாரம்.'. இரத்தினக்கல் ஏல விற்பனை/ இரத்தினக்கல் வெட்டுதல்)	89,597,777.
3	இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதி சேவைக் கட்டணம் பெற்றுக் கொள்ளல்-	137,967,891.
4	இயந்திர சுரங்க அனுமதிப்பத்திரம் வழஙட்கல்	69,834,750.
5	அபராத கட்டணம்.'. இணக்கக் கட்டணங்கள். (சுற்றி வளைப்பு வருமானம்)-	17,145,497.
6	இரத்தினக்கல் பரிசீலனை செய்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதல்	9,202,611.
7	தங்க அளவைத் தீர்மானித்தல், பொறியிடல', சான்றிதழ் வழங்குதல்	25,189,250.

அதிகார சபையின் நிதி முன்னேற்றம் -

• 2019 ஆம் ஆண்டில் உழைத்த மொத்த வருமானம் 604.58 மில்லியன் ரூபா என்பதேமாடு வரிக்கு மன்னரான தேறிய தேறிய இலாபம் 187.44 மில். ரூபாவாகும்.

• உழைத்த மொத்த வருமானத்தில் திறைசேரிக்கு 25 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

• நியதிச் சட்ட வருமானத்தில் அதிகரிப்பொன்று காட்டப்பட்டிருப்பது இயந்திர சுரங்க அகழ்வு மற்றும் தொடர்புடைய அனுமதிப் பத்திர விநியோகத்தினால் என்பதோடு அது கடந்த வருடத்தோடு ஒப்பிட்டளவில் 100% அதிகரித்துள்ளது.

• மொத்த இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணம் ஏற்றுமதி பெறுமதி 45.76 மில்லியன ரூபா என்பதோடு அது 2018 ஆம் ஆண்டு பெறுமதியை விட 4% அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது.

அதிகார சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள விசேட கருத்திட்டங்கள்-

• இரத்தினபுரி தெமுவாவத்த இரத்தினக்கல் வீதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் இரத்தினக்கல் கோபுரத்தை நிருமாணித்தல்.

குறிக்கோள் 1.இரத்தினக்கல மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலுக்குரிய அனைத்துச் சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் மிகவும் நம்பிக்கையாகவும் மற்றும் தரமிக்கதாகவும் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.

2. சர்தேசப் தரங்களைப் பின்பற்றி வெளிநாட்டு கொள்வனவாளர்களைக் கவர்ந்து கொள்ளல்.

3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிலாளர்களுக்கு வர்த்தக சந்தையை எற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு உயர் வருமானத்தையும் மற்றும் வாழ்வாதார மட்டத்தையும் வழங்கி தேசிய ஏற்றுமதி இலக்கை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

• **கொழும்பு பிரதான அலுவலகக் கட்டிட நிருமாணம்.**

குறிக்கோள் 1. உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட அலுவலக கட்டிடமொன்றை (அடுக்கு மாடி) நிர்மாணித்தல்.

2. கொழும்பு துறைமுக நகரை அண்மித்ததாக இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலுக்குரிய பரிசோதனை கூட வசதிகள், பயிற்சி அளித்தல் வசதிகள், ஏற்றுமதி வசதிகள் கொண்ட சர்வதேச நிலையமாக இந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்தல்.

3. சிறிய, நடுத்தர அளவிலான மற்றும் பாரிய அளவிலான வியாபாரிகள் அனைவருக்கும் சமமான வசதிகள் வழங்கப்படுகின்றன.

வெற்றிகள் - 2019

- எஹெலியகொட பிரதேச அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல்.

மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைதம்தொழில் தொடர்பான தொழிலாளர்களுக்கு இந்தக் கட்டிடத்தினுள் வியாபார வாய்ப்புக்களை ஏற்பாடு செய்து கொடுத்து அதன் மூலம் கைத்தொழிலை விருத்தி செய்தல்.

எஹெலியகொட பிரதேசஅலுவலகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலும் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

சவால்கள் - 2019

- சுற்றாடல் நட்புறவான இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுகளை இனங்கண்டு அந்த சுற்றாடல் தொகுதியைப் பாதுகாத்துக் கொண்டு இரத்தினக்கல் வளங்களை நிலைத்திருக்கத்தகு கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

- இனங்காணப்பட்ட தோட்டக் கம்பனிகள் நிருவகிக்கின்ற அரச காணிகளை இரத்தினக்கல் அகழ்வுக்காக ஏல விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் விடுவித்துக் கொள்ளல்.

- கைவிடப்பட்டுள்ள சுரங்கக் குழிகளை மூடுதல் மற்றும் சட்டவிரோத அகழ்வு காரணமாக ஏற்கனவே சேதமடைந்துள்ள காணிகளை நல்ல நிலைக்கு கொண்டுவருதல்.

- சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வுகளை தடுத்து சட்டரீதியான சட்டகமொன்றினுள் மாணிக்கக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு கைத்தொழிலாளர்களை தூண்டுதல்.

- சர்வதேச மட்டத்திலான இரத்தினக்கல் பரிசோதனைக்கூடத்தை விருத்தி செய்வதற்கு தேவையான நவீன இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மனித வளத்தை அதற்காகப் பயிற்றுவித்தல்

- தற்போது ஏற்றுமதி செய்கின்ற இரத்தினக்கல் மூலம் ஆய்வுகூடத்தில் பரிசீலனை செய்வதற்கு முன்வராதிருத்தல்.

- தங்க ஆபரண வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற தங்க ஆபரணங்களின் தரத்தை அதிகரித்து உரிய தரம் கொண்ட தங்க ஆபரணம் சந்தையொன்று இன்மை..

- சட்ட விரோதமான இரத்தினக்கல் அகழ்வு வேலைத்திட்டதின் போது உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சிக்கலான சந்தர்ப்பங்கள்

.

எதிர்கால அடையிலக்குகள்-

- அதிகார சபையின் அனைத்து பணிகளும் உள்ளடக்கும் வகையில் புதிய கணினி மென்பொருள் ஒன்றை விருத்தி செய்தல்.

- இரத்தினக்கல் பரிசோதனைக்கூடம், தங்க அளவு தீர்மானிக்கும் பரிசோதனைக்கூடம் ஆகியவற்றை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருதல்.

- அதிகார சபையின் சட்டத்தைத் திருத்தம் செய்தல்.

2.1.9 தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

ஆராய்ச்சிப் பிரிவு

ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.

இலங்கையில் இரத்தினக்கல் படிவகள் ஆய்வு மற்றும் மதிப்பீடு

இலங்கையில் இரத்தினக்கல் இருப்புக்களை வரைபடப்படுத்தல் மற்றும் சுற்றாடலுக்கு பொருத்தமான அகழ்வு முறையை அறிமுகப்படுத்தல் சார்பாக " இலங்கையில்இரத்தினக்கல் படிவுகள் ஆய்வு மற்றும் மதிப்பீடு" என்ற பெயரில் விசேட கருத்திட்டமொன்று மேற்கொள்ளப்படுகின்றது. இதுவரை பின்வரும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இரத்தினக்கல் தோற்றுவாய்களை நிலவரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புத்தளம படல்கும்புற வெல்லவாய். மொனராகலை மடகம பிபிலை செவணகல தனமல்வில கதிரகாமம் பண்டாரவெல ஹுபுத்தலே ஹல்துமுல்ல

இலங்கையில் இரத்தினக்கல் படிவுகளை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு: எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவு, பெல்மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவு தவளம பிரதேச செயலாளர் பிரிவு

இரத்தினக்கல் துறைகளில் உள்ள ஏனைய பொருளாதார ரீதியில் பெறுமதியான கனிபொருள் வகைகள் பற்றி ஆராய்ச்சி செய்தல்

இலங்கையில் இரத்தினக்கல் படிவுகளை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு: எஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவு





1ப்புத்தளை மற்றும் பிபிலை பிரதேசங்களில் பெறப்பட்டமாதிரிகளில் தங்கம் மற்றும் வேறு % லப்பொருட்களின் சதவீதம்

நூல் வெளியீடு:



- இலங்கை இரத்தினக்கல் சுரங்கத் தொழில் வளமான யுகத்தை நோக்கி
- இலங்கையில் களு புட்பராகக்கல்லுகாக பல்வேறு வாயுகோள நிலைமைகளின் கீழ் வெப்பமேற்றல் விளைவு பற்றிய கல்வி
- இலங்கையில் இரத்தினக்கற்களுக்கு பெறுமதி சேர்க்கும் கருத்திட்டம்.
- ஆறு முன்செல்லல் மூலம் ஆற்றுக்கு ஏற்படுகின்ற சேதம் பற்றிய ஆராய்ச்சி
- கொடக்கவெல பிரதேசத்தில் கிடைத்த இனங்காணப்படாத கதிரியக்க கனியம் / தாது பற்றிய ஆராய்ச்சி
- இலங்கையில் ஐந்து இடங்களில் பெறப்பட்ட கெடுவ மாதிரிகளின் புவியியல் இரசாயன மாற்றம் பற்றிய ஆராய்ச்சி
- புட்பராகக்கல் நனோ துகள்ள் உள்ளடங்கிய அச்சிடப்பட்ட பருத்தித் துணிகள் தயாரித்தல்
- புட்பராகக்கல் மற்றும் மைக்கா துகள்கள் அடங்கிய இறப்பர் மெத்தை தயாரித்தல்
- இலங்கையில் தங்கஆபரண உற்பத்தியின் போது இரசம் வெளியீட்டை மதிப்பீடு செய்தல்
- இலங்கையின் இரத்தினக்கல் இருப்புக்களில் கிடைக்கும் பகுதியளவு பெறுமதியான இரத்தினக்கற்களுக்கு மிகப் பயனள்ள மற்றும் வினைத்திறன் கொண்டநிறம் மற்றும் தெளிவுத் தன்மையை அதிகரித்தல் முறை அறிமுகம்

பயிற்சிப் பிரிவு
இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணத் துறையில் தொழிலாளர்களின் திறன் விருத்தி.

#	பயிற்சிப் பாடநெறி	வருடம் மற்றும் மாணவர் எண்ணிக்கை					
		2014	2015	2016	2017	2018	2019
1	தொழில் ரத்ன வித்யா டிப்ளோமா	-	-	-	-	12	12
2	ரத்ன வித்தியா	105	134	97	69	13	101
3	அடிப்படை ரத்ன வித்தியா	-	-	31	113	105	139
4	கெவுட வெப்பமேற்றல்	84	96	96	111	139	114
5	இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல்	109	190	213	381	114	306
6	இரத்தினக்கல் வர்ணம் தரப்படுத்தல் மற்றும் விற்பனை	175	157	73	87	318	68
7	இரத்தினக்ல் செதுக்கல்	-	-	12	4	68	6
8	தங்க ஆபரணம் வடிவமைப்ப் மற்றும் உற்பத்தி டிப்ளோமா	-	-	-	-	6	13
9	தங்கஆபரணம் வடிவமைப்பு நிர்மாணம்	18	37	30	95	71	71
10	தங்கஆபரணம் உற்பத்தி	49	42	63	116	133	133
11	நவநாகரீக தஙகஆபரன உற்பத்தி	-	18	48	104	50	50
12	தஙகஆபரணம் கல் பதித்தல்	-	-	26	47	51	51
13	கணனி ஊடாக வடிவமைப்பு நிர்மாணம்	-	-	20	22	27	27
14	கரடுமுரடான இரத்தினக்கற்களை இனங்காணல்	-	-	27	20	-	-
15	அடிப்படை இரத்தினக்கல் வெட்டும் தொழிநுட்பம்	-	-	21	21	16	16
16	வார்ப்பு இலத்திரனியல் மற்றும் உலோக மூட்டல்	-	-	-	-	-	-
17	குறுகிய காலப் பாடநெறி	-	-	-	5	7	3
18	வெளிநாட்டு மாணவர்களை பயிற்றுவித்தல்	-	-	-	5	3	3
மொத்த எண்ணிக்கை		**540**	**674**	**757**	**1200**	**1220**	**1133**

பாடநெறிப் பாடதிட்டம் விருத்தி – கைத்தொழிலின் பல்வகைத் தன்மைக்கமைய

I. ரத்ன வித்தியா (Diploma In professional Gemmologist – Dip PGSL)
II. தங்க ஆபரண டிப்ளோமா பாடநெறி (Diploma In professional Jeweller – Dip PJSL / NVQ 5)

புதிய சான்றிதழ் பத்திரப் பாடநெறி அறிமுகப்படுத்தல் மற்றும் பாடத்திடடம் விருத்தி

I தங்க ஆபரண தரப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்

II. நவீன மைக்ரோ செடிங் தொழில்நுட்பம் தங்ஆபரண கல் பினைப்பு விடயம் தொடர்பாக அறிமுகப்படுத்தல்

III. கணனி சார் தங்கஆபரண உற்பத்தி தொழிநுட்பம் (CAM) அறிமுகப்படுத்தல்.

IV. நவநாகரி ஆபரன பாடநெறிக்கு எனமலின் விடயத் துறையை சேர்த்து பாடத்திட்டத்தை அபிவிருத்தி செய்தல்.

V. சுற்றுசூழல் நட்பான இரத்தினக்கல் சுரங்க அகழ்வு தொழில்நுட்பம் அடங்கிய புதிய பாடநெறியொன்றை அறிமுகப்படுத்தல்

VI. பென்டசி வெட்டு (Fantasy Cutting) தொழில்நுட்பத்தை பாடநெறிகளில் அறிமுகப்படுத்தல்

VII. கணினி சார்ந்த இரத்தினக்கல் வெட்டு (GEM CAD) தொழில்நுட்பத்தை பாடநெறிகளில் அறிமுகப்படுத்தல்

VIII. இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரண மதிப்பீடு மற்றும் விற்பனை

புதிய நிலையங்களை ஆரம்பித்தல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி – 2019

• தங்கஆபரணக் கைத்தொழில் மையமாகக் காணப்படுகின்ற மட்டக்களப்பு பிரதேசத்தில் புதிய நிலையமொன்றை ஆரம்பித்தல்

• எலஹெர, பகமுண இரத்தினக்கல் கைத்தொழில் முதன்மையாகக் காணப்படுகின்ற பிரதேசத்தை இலக்காகக் கொண்டு நாவுல பிரதேசத்தில் இரத்தினக்கல் வெட்டு பாடநெறிக்காக புதிய நிலையமொன்றை ஆரம்பித்தல்.

NVQ மட்டத்திலான பாடநெறிகளை மேற்கொள்ளல்.

TVEC நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள்

• கடுவெல, இரத்தினபுரி, கண்டி, அவிஸ்ஸாவெல்ல நிவிதிகலை, நாவுல மற்றும் மட்டக்களப்பு

• இரத்தினபுரி இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் (NVQ 3/4), தங்கஆபரண உற்பத்தி (NVQ 3/4) மற்றும் தங்கஆபரணங்களில் கல் பிணைப்பு (NVQ 3)

• கண்டி இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் (NVQ 3/4) மற்றும் தங்கஆபரண உற்பத்தி (NVQ 3/4)

• நிவிதிகலை நிலையத்தில் இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் (NVQ 3/4)

• அவிஸ்ஸாவெல்ல இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் (NVQ 3/4) தங்கஆபரண உற்பத்தி (NVQ 3/4)

• நாவுல நிலையத்தில் இரத்தினக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் (NVQ 3/4)

2019 இல் 51 மாணவர்களுக்கு சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு 40 மாணவர்கள் பரீட்சைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தர முகாமைத்துவ முறைமையை (QMS) தாபித்தல்.

- உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல், உற்பத்திப ல்வகைமைப்படுத்தல், உற்பத்தி தரப்படுத்தல் மற்றும் தொழி-நுட்ப இயந்திர உபகரணங்களின் தொழிற்பாட்டை மேம்படுத்தவதற்காக புதிய தொழிநுட்பம் அறிமுகம் செய்யப்பட்டது.

இரத்தினக்கல் கைத்தொழில்



- அரத்தினக்கல் செதுக்கல் மற்றும் முத்து உற்பத்தி மணிகள்
- பென்டசி வெட்டுதல் தொழிநுட்பம்
- கணனி சார் இரத்தினக்கல் வெட்டல் மென்பொருள்

இரத்தினக்கல் கைத்தொழில

- வார்ப்பு மற்றும் இலத்திரனியல் உலோகம் பூசுதல்
- CAD/CAM பிரிவு
- 3D Printing
- Micro setting / Invisible setting தொழிநுட்பம்
- தங்க ஆபரயம் தரப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்

கல்வி பணிக்குழுவினரின் உயர் கல்வி

மனித திறன் விருத்திற்காக கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பட்டதாரிகளை கல்விப் பணிக்குழுவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- மென் திறமை மற்றும் மொழித் திறனை விருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

சந்தை ஆய்வு

- இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணத் துறை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்காக சந்தை ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 60 பிரதேச செயலாளர் அலுவலகங்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

- அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்கள், இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை சுங்கம், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஊடாகப் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களின் தகவல்களைப் பெற்றுக்கொண்டு விதிமுறையான மற்றும் அறிவியல் ரீதியான தரவு முறைமையை அமைத்துருவாக்குதல்

தொழில் வழிகாட்டல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி

1.மாணவ உற்பத்தி விற்பனை 2. மாணவ தொழில் வழிகாட்டல், 3. மாணவர்களை தொழிலில் அமர்த்தல்,4. கல்வியலாளர்களின் சங்கத்தை தாபித்தல்.

2.1.10 அரச மரக் கூட்டுத்தாபனம்

உற்பத்தி

பிரதான ஆக்கக் கூறு	2019 ஆம் ஆண்டு		வருடாந்த முன்னேற்றம் (%)
	இலக்கு	முன்னேற்றம்	
மரக் குற்றிகள் (க. மீ)	108,647	123,206	113
சில்பர் (அலகு)	49,000	36,701	75
தளபாடங்கள் (ரூபா.மில்)	432	318	74
மின் கம்பம் (அலகு)	11,000	8,660	79
அரிந்த மரம் (க. மீ)	4,895	4,774	98
வேலிக் கம்பம் (அலகு)	18,275	93,783	513
வேலிக் கம்பம் (அலகு)	31,800	99,047	311
யானை வேலிக் கம்பம் (அலகு)	8,200	11,837	144
விறகு (க மீ).	56,650	107,914	190

விற்பனை வருமானம் (ரூபா.மில்)



சுற்றாடல் செயற்பாடுகள்.

- **"வனரோபா" தேசிய மர நடுகை வேலைத்திட்டத்திற்கு தொழிற்பாட்டுப் பங்களிப்பை வழங்குதல்.**

120,000 மரக் கன்றுகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல்

- பதுளையில் நடைபெற்ற " வனரோபா 2019 " தேசிய வைபவத்தின் பெயர்ப் பலகைக்கான பங்களிப்பு வழங்குதல்.
- ஹபரனை ஹுருளு ஓயா வன ஒதுக்கில் 10 ஹெக்டெயார் அளவில் மீள் பயிரிடல் (மீள் நடுகை) நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தல்.

- **உலக சுற்றாடல் தின நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்பாட்டுப் பங்களிப்பை வழங்குதல்.**

- நுவரெலியா மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மர நடுகை வேலைத் திட்டத்திற்கு பங்களிப்பு வழங்குதல்.
  - சைப்பிரஸ் கன்றுகள் 125 மற்றும் மரக் கன்றுகளுக்கான சதுரக் கூடுகள் வழங்குதல்.
- கூட்டுத்தாபனத்தின் கங்கானிமுல்ல மற்றும் பிங்கிரிய களஞ்சியங்களில் மர நடுகை வேலைத்திட்டங்களை ஏற்பாடு.
- குருணாகல் மாவட்டத்தில் 02 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்

- **துருஜன – " மாணவர் வங்கி " நிகழ்ச்சித் திட்டத்திற்கான தொழிற்பாட்டுப் பங்களிப்பு வழங்குதல்..**

தெரிவு செய்யப்பட்ட 02 பாடசாலைகளில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்

இரண்டு பாடசாலைகளில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

- பாடசாலைகளில் துரு கொழு அமைப்பதற்காக மரக் கன்றுகளை வழங்குதல்.
- விவசாய உபகரணத் தொகுதிகளை பகிர்ந்தளித்தல்.
- அரச மரக் கூட்டுத்தாபனத்தின் நூல் வெளியீடு - சிறிய நூல் மற்றும் துண்டுப் பிரசுரம் பகிர்ந்தளித்தல்
- கண்காட்சிகளை நடாத்தல்
- பாடசாலை ஆசிரியர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளவாளர்களின் பங்களிப்பை வழங்குதல்.

ஆசிரியர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

அமைச்சு மற்றும் சனாதிபதி செயலாளர் அலுவலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த உயிர் முறைமை தொழிநுட்பவியலை போதிக்கும் ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட 14 " சுற்றாடல் கல்வி

" அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளவாளர் பங்களிப்பை வழங்குதல். இதன் மூலம் மரப் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு பயன்பாடு தொடர்பாக ஆசிரியர்கள் அறிவூட்டப்பட்டனர்.

அரச மரக் கூட்டுத்தபானத்தில் செயலமர்வுகள் மற்றும் வெளிக்கள சுற்றுலாக்களுக்காக பங்களிப்பு வழங்குதல்

மரத் துறையோடு தொடர்பான வெளி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கட்டிடத் தொகுதியினுள் வெளிக் கள சுற்றுலா மற்றும் விரிவுரைகளை ஏற்பாடு செய்தல்.

நிறுவனம்	கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை
கப்பல் மற்றும் கடல் அகடமி	19
நகர கட்டிடக் கலைப் பாடசாலை	40
உயர் தொழில்நுட்ப நிறுவனம் - காலி	99
உயர் தொழில்நுட்ப நிறுவனம் - கம்பஹா	85
இலங்கை வான்படை	07
சிறு கைத்தொழில் திணைக்களம்	48
தொழில்நுட்பக் கல்லூரி – குளியாபிட்டிய	28
தேசிய கல்வி நிறுவனம்	120
சந்தலங்கா மத்திய மஹா வித்யாலயம்	40
உதவிப் பணிப்பாளர் (கைத்தொழில்) - தென் மாகாண அலுவலகம்	45
மொத்தம்.	**531**

கண்காட்சிக் கூடங்களுக்கான பங்களிப்பை வழங்குதல்.

- நிதி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட "Enterprise Sri lanka" கண்காட்சி – யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம்

ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் மரத் தொழிநுட்ப விடயத்தோடு இணைந்த பல ஆய்வுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மரங்களை அடையாளம் காணுதல் மற்றும் மர அறிக்கை

மர மாதிரிகள் - 275
வெளியிடப்பட்ட மர அறிக்கைகள் - 244

மரச் சான்றிதழ்	வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை
அடையாளம் காணல் அறிக்கை	137
சக்தி குணப்பன்பு அறிக்கை	18
ஈரப்பதன் அளவு அறிக்கை	37
கணளவு அறிக்கை	21
CCB அறிக்கை	11
Boron அறிக்கை	30
மொத்தம்	**244**

உள்நாட்டு பயிற்சி திட்டங்கள்.

மிகவும் வினைத்திறனும் மற்றும் விளைதிறனும் கொண்ட சேவைகளுக்காக மரத் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (TTTI) மற்றும் வெளி நிறுவனங்கள் மூலம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்தல். தொடர்பாக 467,662.50 ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளதோடு வெளி நிறுவனங்கள் மூலம் 1072 ஊழியர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக. 2,415,622.25 ரூபா தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை
(TTTI) நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	13
வெளி நிறுவனங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்	45
(பட்டப்பின் படிப்பு/ பட்டம்/ டிப்ளோமா/ சான்றிதழ் பத்திரம்) ஊழியர்களின் மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு வழங்குதல்	15
வருடாந்த பயிற்சி திட்டத்தின் வெளி நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - வனக் கணக்கெடுப்பு மற்றும் மரத் தரப்படுத்தல் - 2 - GPS பயிற்சி – 1 – ISO 9001: 2015 பயிற்சி - 2	5
மொத்தம்	**78**

வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக 06 ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுகு அனுப்பி வைக்கப்பட்டனர்.

2.1.11 பேண்தகு அபிவிருத்தி சபை

பேண்தகு அபிவிருத்தி மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்

இதன் கீழ் கீழேயுள்ள இரண்டு துணைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது.
1.1 அமைச்சின் மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்
1.2 தேசிய மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்

அமைச்சின் மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்

அனைத்து அமைச்சுகளுக்காகவும் **“ பேண்தகு அபிவிருத்தியடைந்த இலங்கை “** என ஒரு நோக்கை பயன்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாகாண சபைகளுகடகாகவும் இவ்வாறே நோக்கைத் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்த அரச எண்ணக்கருவிற்கமைய அனைத்து அரச தாபனங்களும் செயற்படுதல் உண்மையான மக்கள் சேவையை சித்தரிக்கும் வகையில் பணிக் கூற்றைத் தயார் செய்வதற்கும் தேவையான பயிற்சிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்பட்ட அனைத்து அமைச்சுக்களுக்கான பணிக் கூற்றைத் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது

தேசிய மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல்

பேண்தகு அபிவிருத்தி சட்டத்திற்கு அமைய பேண்தக அபிவிருத்தி தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல், பேண்தகு அபிவிருத்தி சபையின் பிரதானமான பணியொன்றென்பதோடு அது அனைத்து மாகாண சபைகளதும் ஆலோசனைகளைப் பெற்று தயாரிக்கப்படல் வேண்டும். அதற்கமைய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், மாகாண சபைகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல் 80% வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது எஞ்சிய அரச நிறுவனங்களை உசாவுதல் மற்றும் மாகாண சபைகளை உசாவுதல் என்பவற்றை விரைவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சிவில் சமூக ஆலோசனையை 2019 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேண்தகு அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டத்தின் வரைவு 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பேண்தகு அபிவிருத்தி சபைக்கான இணையத் தளம் மற்றும் தேசிய பேண்தகு அபிவிருத்தி டிஜிடல் தகவல் நுழைவாயிலை நிர்மாணித்தல்.

மேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை (இலக்குகளை) செயற்படுத்தல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்வதற்காக தேசிய பேண்தகு அபிவிருத்தி தகவல் நுழைவாயிலை நிர்மாணித்தல் மூலம் பேண்தகு அகபிவிருத்தி நோக்கங்கள் (இலக்குகள்) உள்ளடங்கிய 2030 நிகழ்ச்சி நிரலை இலங்கையில் பன்முகப்படுத்தல் , விஸ்தரித்தல் மற்றும் செயற்படுத்தல் முன்னேற்றம் தொடர்பாக தேசிய போன்றே சர்வதேச அடிப்படையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளல்.

மேலும் 2019 ஆம் ஆண்ட திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது டிஜிடல் தகவல் நுழை வாயிலைத் தயாரித்தல் தொடர்பானம் முறைமை ஆராய்ச்சி அறிக்கை மதியுரை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பின்னர் தகவல் தொழிநுட்பக் குழு மூலம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. டிஜிரல் முறைமைக்கான மென்பொருள் நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பதை 2020 ஆம் ஆண்டு முதல் காலாண்டினுள் ஆற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பேண்தகு அபிவிருத்தி சபைக்கான புதிய அலுவலர்களை நியமனம் செய்தல்

இரண்டு (02) உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் 10 பேண்தகு அபிவிருத்தி அலுவலர் பதவிகளுக்கு தகைமையுடைய நபர்களை ஆட்சேர்ப்புச் செய்வற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



பேண்தகு அபிவிருத்தி சபைக்கான அலுவலகமொன்றை அமைத்தல்.

அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றம்.

2.2.1. மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம்

முதன்மை நோக்கங்கள்.

மொரகஹகந்த – களுகங்கை கருத்திட்டத்தைத் தொடர்ந்து 82,000 ஹெக்டெயார் காணிக்கு சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களுக்கும் நீர் வழங்க முடிந்தமை. அதாவது பல்வேறு பிரதேசங்களில் 100 % முதல் 154 % வரையிலான பயிர் தீவிரத்தன்மையின் சாதாரண பெறுமதியை 181 % வரை அதிகரிப்பதற்கான சாத்தியம் உண்டு. இதன் நேரடிப் பயனாக ஒரு ஹெக்டயாருக்கும் கிடைக்கும் நெல் அறுவடை அதிகரிப்பதோடு மேலதிக விவசாய உற்பத்தி (123,000 மெ . டொன்) பாரியளவு பங்களிப்பைத் தொடர்ந்து வருடாந்த பயன் 4,000 மில். வரை ஏற்படலாமெனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய நோக்கங்கள்

மாத்தளை, பொலன்னறுவை, அநுராதபுரம் ,திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் குடிநீர் மற்றும் விவசாயத்திற்காக நீர்ப்பாசன நீர் வழங்குதல்.

மின் சக்தி உற்பத்தி - மொரகஹகந்த கருத்திட்டத்தில் மின்சக்தி உற்பத்தி 114.5 GWh என்பதோடு, அதன் மூலம் வருடாந்தம் மீதப்படுத்தப்படுகின்ற் எரிபொருள் செலவு 1545 மில். ரூபா வரையாகும்.

நன்னீர் மீன்பிடித் தொழில் - மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்துடன் இரண்டு பிரதான நீர்த் தேக்கங்கள் மற்றும் அதன் போஷாக்கு நிர்த் தேங்கங்கள் மூலம் வருடாந்தம் நன்னீர் மீன் உற்பத்தி சாத்தியப்பாடு 4,700 மெ. டொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு அதன் பெறுமதி 940 மில் ரூபா ஆகும்.

தொழில் வாய்ப்பு மேம்படுத்தல் - மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்துடன் மீண்டும் குடியேற்றப்படுகின்ற 3,000 வரையான குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கு இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபண பயிற்சி, ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சி, சுய தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு எதிர்கால தொழிலற்றவர்களுக்கு தீர்வு வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு மேலதிகமாக இந்த கருத்திட்டத்தின் ஊடாக 650 தொழில் வாய்ப்புக்கள் வரை வழங்கப்பட்டுள்ளன.

சுற்றாடல் சுற்றுலாக் கைத்தொழில் - வஸ்கமுவ தேசிய பூங்கா, மின்னேரியா தேசிய பூங்கா மற்றும் ரிவஸ்டன் போன்ற சுற்றுலாப் பிரதேசங்களுக்கு மத்தியில் இந்த மொரகஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்படல, சிகிரியா, தம்புள்ள அலுவிஹாரய மஹியங்கனை ஆகிய வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு இலகுவாகச் செல்லக்கூடிய வீதித் தொகுதியொன்று சகிதம் சுற்றுலா அடிப்படையில் முக்கியமான அமைவிடம் சகிதம் வளமான சுற்றாடல் முறைமையொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கீழ்க் கரைப் பிரதேசங்களில் வெள்ள நிலைமைக் கட்டுப்பர்டு - மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்துடன் வருடாந்தம் ஏற்படுகின்ற சோமாவதிய மற்றும் மனம்பிட்டிய பிரதேசங்களில் நீர்ப் பெருக்கை (வெள்ள நிலைமையை) நிறுத்த முடிந்துள்ளது.

பிரதானமான பணிகள்

மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தி கருத்திட்மடத்தின் முதலாம் கட்டத்தின் செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. மொரகஹாகந்த நீர்தேக்கத்தின் பிரதான அணையை அம்பன்கன் கங்கை ஊடாக நிருமாணித்தல், 2 அமைக்கப்பட்ட அணை, வான் கதவுகள், மேல் பிரதான மதகு, மேல் எலஹெர கால்வாய் மதகு, 25 மொகா வோட் நீர் மின உற்பத்தி நிலையம் மற்றும் 16Km நீளமான மின் பரிமாற்ற முறைமை.

2. அமபன் கங்கையின் பிரதான கிளை ஆறான களுகங்கையை மறித்து களுகங்கை நீர்த்தெக்கத்தின் பிரதான கால்வாய்யை நிருமாணித்தல். இதன் களி மற்றும் கற்களால் அமைக்கப்பட்ட 2 கால்வாய்கள் பிரதான கால்வாயின் இடது கரை மதகு அமைக்கப்பட்ட அணை தெற்கு கரை மதகுடன் இணைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பிரதான கால்வாயில் உள்ள மற்ற சுரங்கவளைவ கால்வாயுடன் இணைக்கப்பட்டு வறைவு சுரங்கத்துடன் தொடுக்கப்பட்டுள்ளது.

3. இடம்பெயர்ந்த 3000 குடும்பங்களுக்காக காணிகளை சுவீகரித்தல் மற்றும் மீள் குடியேற்ற அலவல்கள்

4. மீள் குடியேற்ற 2 பிரதேசங்களுக்கான சமூக மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

I. களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டத்திக் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் பிரதேச (எப் வலயம்) இடது கரை 1900 ஹெக்டயாரையும், வலது கரை 1700 ஹெக்டயாரையும் கொண்டுள்ளது.
II. கவுடுல்ல இடது கரை விருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் ஏற்படுகின்ற அபிவிருத்தி வலயம் (டீ வலயம்) 7000 ஹெக்டயாரைக் கொண்டுள்ளது.

5. மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள இரண்டு EIA அறிக்கைகளுக்கு அமைய சுற்றாடல் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்.

விசேட வெற்றிகள்/அடைவுகள்

2019 ஆம் ஆண்டில், 248 MCM நீர்க் கொள்ளவுடைய களுகங்கை நீர்த்தேக்கம் நிருமாணித்து முடிக்கப்பட்டுள்ளது. (557 MCM நீர்க் கொள்ளவு மற்றும் 25MW மின் உற்பத்தி நிலையமொன்று சகிதம் மொரகஹகந்த நீர்த்தேக்கம் 2018 ஆம் ஆண்டில் நிறைவ செய்யப்பட்டது.)

விபரம்	மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை		மேட்டுக் காணி மற்றும் நீர்ப்பாசன காணிக்காக 16 இலட்சம் ரூபா பெற்றுக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை		நீர்ப்பாசன காணிக்காக 12 இலட்சம் ரூபா பெற்றுக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை	
	2019.01.01 இருந்து 2019.12.31 வரை	2019.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம்	2019.01.01 இருந்து 2019.12.31 வரை	2019.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம்	2019.01.01 இருந்து 2019.12.31 வரை	2019.12.31 ஆம் திகதிக்கு திரண்ட முன்னேற்றம்
நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்						
மொரகஹகந்த	7	1740	5	721	0	360
களுகங்கை	74	1068	1	85	1	108
நேரடியாகப் பாதிக்கப்படாத குடும்பங்கள்						
மொரகஹகந்த	20	20	0	0	0	0
களுகங்கை	0	0	0	0	0	0
மொத்தம்	**101**	**2828**	**6**	**806**	**1**	**468**

ஒவ்வோர் அபிவிருத்திப் பிரதேசங்களுக்காகவும் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை வருமாறு

அபிவிருத்திப் பிரதேசம்	2019.01.01 இருந்து 2019.12.31 வரை நட்டஈடு கொடுப்பனவு (மில். ரூபா)	2019.12.31 வரை திரண்ட நட்டஈடு கொடுப்பனவு (மில். ரூபா)
மொரகஹகந்த	110.00	4,672.78
களுகங்கை	413.39	3,422.17
மெதிரிகிரிய	40.88	104.60
மொத்தம்	**1,564.25**	**8,199.55**

களுகங்கை கீழ்க் கரையில் 3000 ஹெக்டயார் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான விரிவான விபரங்கள் பின்வருமாறு.

இல	வேலை விபரம்	2019.01.01. இருந்து 2019.12.31 வரை நிறைவு செய்யப்பட்ட வேலை விபரம்	2019.12.31 வரை நிறைவு செய்யப்பட்ட திரண்ட வேலை அளவு
1	கட்டிடம்	40 நிறைவு செய்யப்பட்டுள்ளது	341 நிறைவு செய்யப்பட்டுள்ளது
2	வீதி		
2.1	பிரதான வீதி	-	38 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
2.2	வியாபார வீதி	3.35km நிறைவு செய்யப்பட்டுள்ளது	52.64 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
2.3	கிராமியப் பாதை	2.10km நிறைவு செய்யப்பட்டுள்ளது	67.20 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
3	நீர்ப்பாசன வேலை		
3.1	பிரதான கால்வாய்	8 km வேலை நிறைவு செய்யப்பட்டுள்ளது	10 km வேலை நிறைவு செய்யப்பட்டுள்ளது
3.2	D & F கால்வாய்	3.5 km நிறைவு செய்யப்பட்டுள்ளது	120.81 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
3.3	சிறிய குளம்	-	11 நிறைவு செய்யப்பட்டுள்ளது
3.4	சம மட்ட கடல் பாதை	**4 இல்** -29 % நிறைவு செய்யப்பட்டுள்ளது	**4** இல் -75% நிறைவு செய்யப்பட்டுள்ளது

கவுடுல்ல நீர்த்தேக்கத்தின் இடது கரையில் டீ .வலயம் (மெதிரிகிரிய) 2000 ஹெக்டயார் அபிவிருத்தி செய்தல் முன்னேற்றம்.

இல	வேலை விபரம்	2019.01.01. இருந்து 2019.12.31 வரை நிறைவு செய்யப்பட்ட வேலை விபரம்	2019.12.31 வரை நிறைவு செய்யப்பட்ட திரண்ட வேலை அளவு
1	கட்டிடம்	26 நிறைவு செய்யப்பட்டுள்ளது	84 நிறைவு செய்யப்பட்டுள்ளது
2	வீதி		
2.1	பிரதான வீதி	1.82 km நிறைவு செய்யப்பட்டுள்ளது	9.82 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
2.2	வியாபார வீதி	35.1 km இல் 15% வேலை பூர்த்தி	35.1 km இல் 75% வேலை பூர்த்தி
2.3	கிராமியப் பாதை	56 km இல் 17% வேலை பூர்த்தி	56 km இல் 87% வேலை பூர்த்தி
3	நீர்ப்பாசன வேலை		
3.1	பிரதான கால்வாய்	1 km நிறைவு செய்யப்பட்டுள்ளது	17 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
3.2	D & F கால்வாய்	77.4 km இல் 20% வேலை பூர்த்தி	77.4 km இல் 20% வேலை பூர்த்தி
3.3	சிறிய குளம்	4 நிறைவு செய்யப்பட்டுள்ளது	17 நிறைவு செய்யப்பட்டுள்ளது

2019 ஆம் ஆண்டினுள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு சுற்றாடல் தாக்கங்களை குறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இல.	வேலை விபரம்	2019.01.01 - 2019.12.31 வரை முடிக்கப்பட்ட வேலைகள்	2019.12.31 வரை முடிக்கப்பட்ட திரண்ட வேலைகள்
1	மீண்டும் கால் நடை வளர்ப்பு	20,000 மரக் கன்றுகளை நாட்டுதல்	276,000 மரக் கன்றுகளை நாட்டுதல்
2	மரக்கன்றுகள் உற்பத்தி	8,000 மரக் கன்றுகள் உற்பத்தி	290,000 மரக் கன்றுகள் உற்பத்தி
3	நீரேந்து பிரதேசங்ளில் மண் பாதுகாப்பு	6 ஹெக்டயார் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	25 ஹெக்டயார் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
4	மண் பெறப்பட்ட இடங்களை மீண்டும் புனரமைத்தல்	8 ஹெக்டயார் புனரமைத்தல்	12 ஹெக்டயார் புனரமைத்தல்
5	நீரேந்து பிரதேசங்கள் மற்றும் பிரதான அணைப் பிரதேசங்களில் மூடு தாவரங்களை அகற்றல்	3 ஹெக்டயார் பூர்த்தி.	5 ஹெக்டயார் பூர்த்தி.
6	மின்சார வேலி	23 km நிறைவு செய்யப்பட்டுள்ளது	250 km நிறைவு செய்யப்பட்டுள்ளது
7	பாதுகாப்பு சாவடிகள் மற்றும் ஓய்வு அறைகள் நிர்மாணம்	பாதுகாப்பு சாவடிகள் 3 இன்வேலைகள் பூர்த்தி	பாதுகாப்பு சாவடிகள் 8 இன்வேலைகள் பூர்த்தி
8	அம்பன நகர பிரதேசத்தில் நில அலங்காரம் மற்றும் மர நடுகை	500 மரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன	500 மரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன
9	லக்கல புதிய நகரை பசுமை நகரமாக மாற்றுதல்.	1800 மரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன	1800 மரக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன

2.2.2 உமா ஓயா பல்தேவை அபிவிருத்திக் கருத்திட்டம்.

உமா ஓயா பல்தேவை அபிவிருத்திக் கருத்திட்டம் மைய வேலைகள் மற்றும் கிரின்திஓயா கீழ்க்கரை அபிவிருத்தி என்ற இரு பிரதான பிரிவுகளை உள்ளடக்கியுதோடு மையவேலைகள் பொறியியல் பெறுகை மற்றும் நிர்மாண ஒப்பந்தம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, கீழ்ப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதானநோக்கங்கள்.

உமாஓயா கரையோரத்தில் சுற்றாடல் மற்றும் ஏனைய நீர்த் தேவைப்பாடுகளுக்குத் தாக்கம் ஏற்படாத வகையில் மேற்படி ஆற்றங்கரையில் இருந்து நீர்ப் பற்றாக்குறையால் பீடிக்கப்பட்டுள்ள தென் வலயத்தின் கிரின்தி ஓயா ஆற்றுக்கு நீர் கணமீற்றர் 145 மில்லியன் வருடாந்தம் திருப்பியனுப்புதல் கருத்திட்டதின் பிரதான நோக்கமாகும்.

அதன் மூலம் மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய். மற்றும் தனமல்வில பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள புதிய காணி 4500 ஹெக்டயார் மற்றும் தற்போது பயிர்செய்யப்படும் காணி 1500 ஹெக்டயார்களுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்கல், மெ. டொ. 120 கொள்ளளவு கொண்ட நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையம் மூலம் கி. வோட் 290 மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்வலுத் தொகுதிக்கு சேர்த்தல், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் குடிநீர் மற்றும் கைத்தொழில்களுக்காக 30 மில்லியன் கணமீற்றர் நீர் வழங்கல், டயரபா நீர்த்தேக்கத்திலிருந்து பதுளை மாவட்டத்தின் பண்டாரவெல விசல் நீர்வழங்கல் திட்டத்தின் நீர்த் தேவைப்பாட்டை பூர்த்தி செய்தல், புஹுல்பொல நீர்த்தேக்கத்திலிருந்து பதுளை மாவட்டத்தின் எட்டம்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் நீர்த் தேவைப்பாட்டை வழங்குதல், குடாஓயா நீர்த்தேக்கத்திலிருந்து பதுளை மாவட்டத்தின் ஹம்பகமுவ பிரதேசத்தின் குடிநீர் தேவைப்பாட்டை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பிரதான பணிகள்.

கருத்திட்டத்தின் மைய வேலைகளின் நிர்மாணப் பணிகள் 2011 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிப்பகுயாகும் போது மைய வேலைகளின் மொத்த முன்னேற்றம் 94.01%. ஆகும். டயரபா அணை மற்றும் நீர்தேக்கம் மற்றும் இணைக்கின்ற சுரங்கம், பசுஆரா சுரங்கத்தின் வேலைகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதோடு தலபமன இயந்திரம் பொருத்துதல் மற்றும் நிலக்கீழ் நீர்மின் வலுக் கூடம் மற்றும் அது சார்ந்த வேலைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. மின் வலுக் கூடம் சார்ந்த மின் விசைச் சுற்றுவட்டம் மற்றும் மின் கடத்தல் பாதை 2020 யூலை மாதமாகும் போது நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

புஹுல்பொல அணைக் கட்டு

டயரபா அணைக்கட்டு

இணைக்கும் சுரங்கம்

சுரங்கம் வெட்டும் இயந்திரம்

உமா ஓயா பல் தேவை அபிவிருத்திக் கருத்தட்டம் - மைய வேலை		
செயற்பாடுகள்	**பௌதீக முன்னேற்றம்** 31.12.2019 **ஆகும் போது**	**எதிர்பார்க்கப்பட்ட திகதி**
புஹுல்பொல அணைக் கட்டு	97.30%	2020 மார்ச்
நீர்த் தேக்க இணைப்புச் சுரங்கம்	98.67%	2020 ஏப்ரல்
டயரபா அணைக்கட்டு	92.36%	2020 யூலை
பிரதான சுரங்கம்	94.44%	2020 யூன்
சுழற்சிக் கிணறு	86.50%	2020 ஏப்ரல்
நீர் அமுக்க செங்குத்து சுரங்கம்	96.10%	2020 மே
நிலக் கீழ் மின் உற்பத்தி நிலையம்	92.76%	2020 ஆகஸ்ட்
பிரதான நுழைவுச் சுரங்கம் மற்றும் நுழைவுச் சுரங்கங்கள்	94.77%	2020 ஏப்ரல்
நுழைவு வீதி மற்றும் மீளமைப்பு வீதிகள்	79.12%	202**0** செப்தெம்பர்
மின் பரிமாற்ற வழிகள்	89.00%	2020 யூலை
நீர் வெளியேற்றும் சுரங்கம்	96.95%	2020 பெப்ருவரி
மொத்த மைய வேலைகளின் முன்னேற்றம்	94.01**%**	**2020** செப்தெம்பர
கருத்திட்டம் நிறைவு பெறும் காலம் (குறைபாடுகளைத் சீரமைக்கும் காலம் உட்பட)		**2021** செப்தெம்பர





கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம்.

அலிகொட்ட ஆர நீர்த் தேக்கம்

அலிகொட்ட ஆர நீர்த் தேக்க வான்

உமா ஓயா பல்தேவை அபிவிருத்திக் கருத்திட்டம் - கீழ்ப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலை:		
செயற்பாடுகள்	**பௌதிக முன்னேற்றம்**	**எதிர்பார்க்கப்பட்ட தினம்**
அலிகொட்ட ஆர நீர்த் தேக்கம் நிர்மாணம்	100%	2019 திசெம்பர்
குடா ஓயா நீர்த் தேக்கம் நிர்மாணம்	70.0%	2020 திசெம்பர்
ஹந்தபான்கல மேம்படுத்தல்	100.0%	2019 திசெம்பர்
ஹந்தபானாகல இடது கரை கால்வாய்த் தொகுதி	80.0%	2020 திசெம்பர்
அலிகொட்ட ஆர - குடா ஓயா வளைவுக் கால்வாய்	68.0%	2020 திசெம்பர்
குடா ஓயா – சிங்கலயாகம குள வளைவு காலடவாயட	70.0%	2020 திசெம்பர்
குடா ஓயா புனரமைப்பு	32/96	2020 திசெம்பர்
மொத்தம்	**85.0%**	**2020** திசெம்பர்

ஹந்தபானாகல நீர்த் தேக்கம்

குடா ஓயா நீர்த் தேக்கம் நிர்மாணம்

செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்		நிதி முன்னேற்றம்			
	திரண்ட முன்னேற்றம் 31.12.2018 ஆகும் போது (%)	31.12.2019 ஆகும் போது திரண்ட முன்னேற்றம் (%)	மொத் மதிப்பீட்டுச் செலவு	31.12.2019 ஆகும் போது திரண்ட செலவு (மில் ரூபா)	கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள் (மில் ரூபா)	31.12.2019 ஆகும் போது திரண்ட நிதி முன்னேற்றம் கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள சகிதம் (மில் ரூபா)
1. மைய வேலை	87.80	94.01	80,447.5	67,182.0	579.1	67,761.1
2. கீழ்க் பள்ளத்தாக்கு அபிவிருத்திய	72.0	85.0	9,352.5	7,040.0	645.6	7,685.6

2.2.3 மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம்.

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் என்பது பரரியதொரு நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பதோடு அது இலங்கையின் வடக்கு மற்றும் வட மத்திய உலர் வலயத்தின் பொருளாதார அலுவல்கள் துரிதப்படுத்தும் நோக்கில் மகாவலி ஆற்றங்கரை பள்ளத்தாக்கின் மேலதிக நீரை நீர்ப்பாசனம், குடிநீர் மற்றும் வணிக அலுவல்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாகும். அது வடமத்திய மாகாண கால்வாய நிகழ்ச்சித்திட்டத்தின் (NCPCP) கீழ் திட்டமிடப்பட்டுள்ள நீர் போக்குவரத்து (கொண்டு செல்லல்) மற்றும் களஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் என்பது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (MPD) பூர்த்திசெய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அரசாங்கத்தின் உயர் முதன்மை அபிவிருத்திக் கருத்திட்டமாகும்.
இந்த நிகழ்ச்சித்திட்டத்தை இரண்டு கட்டங்களில் நிறைவு செய்வதற்கு த்திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாம் கட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்குவதோடு இரண்டாம் கட்டம் தனியான வேறு நிதியுதவியின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.



பிரதானநோக்கம்

வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் வட மாகாணங்களின் உலர் வலயங்களில் பொருளாதார அலுவல்களை துரிதப்படுத்துவதற்காக விவசாயம் மனையக மற்றும் நகர நீர் வழங்களுக்கான நீர் வளத்திற்கான பாதுகாப்பான பிரவேசமொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.

பிரதானபணிகள்

1. மினிப்பே இடது கரை புனரமைப்பு
2. வடமேல் மாகாண கால்வாய் மேம்படுத்தல்
3. மேல் எலஹர கால்வாய் நிர்மாணம்.

வருடாந்த நிதி முன்னேற்றம் (2019 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது) (மில். ரூபா)

கருத் திட்டக் காலம்	வருடாந்தஒதுக்கீடு (2019)	திருத்தியவருடாந் தஒதுக்கீடு(2019)	2019.12.31 ஆம் திகதிக்கு			வருடாந்தமுன்னேற் றம் %
			இலக்கு	முன்னேற்ற ம்	Progress %	
2015-2024	மொத்தத் தொகை 9750.00	மொத்தத் தொகை 6750.00	மொத்தத் தொகை 6750.00	5026.75	74%	52% (வருடாந்த ஒதுக்கங்களுக்கு அமைய)
	5188.88 (2 ஒப்பந்த முற்பணம் தவிர)	5188.88 (2 ஒப்பந்த முற்பணம் தவிர)	5188.88		97%	78% (முற்பணம் தவிர வருடாந்த ஒதுக்கங்களுக்கு அமைய)

மினிப்பே இடது கரை கால்வாய் புனரமைப்புக் கருத்திட்டம் (MLBCRP)

வருடாந்த பௌதிக முன்னேற்றம் (2019 திசெம்பர் 31ஆம் திகதியாகும் போது)

விடயம்	வருடாந்த பௌதீக இலக்கு %	முன்னேற்றம் %
மினிப்பே இடது கலை கால்வாய் புனரமைப்புக் கருத்திட்டம் (MLBCRP)	100	87
வடமேல் மாகாண கால்வாய்க் கருத்திட்டம் (NWPCP)	100	83
மேல் எலஹர கால்வாய்க் கருத்திட்டம் (UECP)	100	89
மதியுரை சேவைகள் (PMDSC, ISEWP மற்றும் நிபுநர் குழு)	100	92
PMU& PIU செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு (பயன்பாட்டு மாற்றம் மக்கள் வேலை ஒப்பந்தம், கள அலுவலக வேலை, ,அலுவலக உபகரணங்கள், வாகனங்கள், சம்பளம், பயிற்சி, உபகரணங்கள் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு, சுற்றாடல் மற்றும் சமூக மட்டுப்படுத்தல் மற்றும் மூலோபாயத் தொடர்பாடல் திட்டம்)	100	92
ஒட்டு மொத்த முன்னேற்றம்	**100**	**89**

Ongoing Construction : Minipe Anicut Raising (ICB-1 Contract) -

வடமேல் மாகாண கால்வாய்க் கருத்திட்டம் (NWPCP)

மேல் எலஹர கால்வாய்க் கருத்திட்டம் (UECP)

2.2.4. சுற்றாடல் கட்டமைப்பு பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டம்.

உலக வங்கியுடன் (World Bank) இனைந்த சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) மூலம் வழங்கப்படுகின்ற 45 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகை மூலம் இந்தக் கருதிட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கருதிட்டத்தின் பிரதான ஆக்கக் கூறுகளுக்காக கீழ்வருமாறு நிதி ஒதுக்கீட செய்யப்பட்டுள்ளது.

தொ.இல	கருதிடடத்தின் பகுதி	நிதி ஒதுக்கீடு மில் ரூபா
1	முன்னோடி புவியியல் - வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம்	2.8
2	வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயற்கை வளங்களை நிலைத்திருக்கத்தகு அடிப்படையில் பயன்படுத்தல் மற்றும் மனிதனின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக யானை மனிதன் சகவாழ்வு	17.0
3	வன ஒதுக்குப் பிரதேசங்களின் முகாமைத்துவம் மற்றும் நிறுவனம் சார் திறன் விருத்தி	24.2
4	கருத்திட்ட முகாமைத்துவம்	1.0
முழு மொத்தம்		**45.0**

பிரதான நோக்கங்கள்.

இலங்கையில் சுற்றாடல் முறைமை முகாமைத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு மூலம் சுற்றாடல் முறைமை சார்ந்து வசிக்கின்ற மக்களிற்குத் தேவையான நன்மைகளை வழங்குதல் இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை அதிகரித்தல், சுற்றாடல் முறைமை சார்ந்து வசிக்கும் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி, யானை - மனித மோதல்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் வனப் பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகள் திணைக்களங்களின் நிறுவன அபிவிருத்திக்காகத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களைஆமற்கொள்ளல் போன்ற விசேட நோக்கங்களை ஆற்றிக்கொள்வதற்காக இந்தக் கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதான பணிகள்

பகுதி 1 : முன்னோடி புவியியல் - வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம்

இதன் கீழ் உலர் வலயம் மற்றும் ஈர வலயத்தில் இனங்காணப்பட்ட இரண்டு பிரதேசங்களில் முன்னோடி புவியியல் - வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இலக்காகக். இந்த புவி - தர்ஸன திட்டத்திற்கு (டுயனெளஉயிந ீடயெ) உரிய வலயத்தின் அடிப்படை சூழல் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்குரிய வாய்ப்புக்கள் (ழீழசவரவைநைள) மற்றும் வரையறைகளை (வாசநயவள) அடையாளம் காணுதல், சுற்றாடல் தொகுதிகளின் நிலைத்திருக்கத்தகு இருப்பு மற்றும் உயிருனவியல் தோற்றுவாய்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய அடிப்படை செயற்பாடுகளை அடையாளம் காணுதல், செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் உரிய புவியியல் - வடிவமைப்பு வலயத்திற்கே உரித்தான , சமதன்மையுடைய காணி மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக உரிய தரப்புக்களை உய்யடக்கிய நிறுவன சட்டகமொன்றைத் தயாரித்தல்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயற்கை வளங்களை நிலைத்திருக்கத்தகு அடிப்படையில் பயன்படுத்தல்.

கருத்திட்டப் பிரதேசம்	உப பகுதி (a) 2 வின் தற்போதுள்ள முன்னேற்றம்
அனுராதபுரம்	மக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டம் 02 உம் மக்கள் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் 01உம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. வருமான வழி உற்பத்திச் செயற்பாடுகள் 4 ஐ ஆரம்பிப்பதற்காக பல பெண் பயனாளிகளுக்கு தையல் மெசின், கைத்தொழில் உற்பத்திப் பொறிகள், தேனீ வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்திக்கான உதவி வழங்குதல்.
பொலொன்னறுவை	சகாதார பண்புகள் நிறைந்த உணவு உற்பத்தி, தேனீ வளர்ப்பு, ஆடை மற்றும் பேக் தைத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல். வருமானம் உழைப்பதற்கான 4 செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக தேனீ வளர்ப்புக்கான பெட்டிகள்,மக்கள் வன செயற்பாடுகளை ஆரம்பிப்பதங்காக உதவிகள் வழங்கப்பட்டன.

கருத்திட்டப் பிரதேசம்	உப பகுதி (a) 2 வின் தற்போதுள்ள முன்னேற்றம்
புத்தளம்	மக்களை அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 5 நடாத்தப்பட்டன 70 வீட்டுத் தோட்டங்களை ஆரம்பிப்பதற்கு உதவி வழங்குதல். வாழ்வாதார அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுத்தல்.
மாத்தளை	04 சுகாதாரப் பாதுகாப்பு முகாம்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. தேயிலைப் பயிர்ச் செய்கை மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைகளை ஆரம்பிப்பதற்கு உதவி செய்தல் (மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம், தேவையான ஏனைய அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சேதனப் பயிர்ச்செய்கை பற்றிய செயலமர்வுகளை நடாத்தல்). வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்திக்குதம் தேவையான ஆய்வுகளை நடாத்தல், 4 பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்தல் மற்றும் மரக்கன்றுகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் 100 பயனாளிகள். எடென்வல கிராமத்தில் நிரந்தர மலசல கூடங்கள் இல்லாத 25 குடும்பங்களிற்கு சுகாதாரப் பாதுகாப்பு துப்புரவேற்பாட்டுச் உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல்.
கண்டி	2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேனீ வளர்ப்பு, நாற்றுமேடை தாபித்தல், கோப்பி உற்பத்தி, சேதனப் பயிர்ச்செய்கை, நவீன விவசாய முறைகள, மிளகு, இஞ்சி, மஞ்சள் பயிர்ச் செய்கைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி, மக்களின் அதற்கான ஈடுபாடு பற்றிய பின்னாய்வு மற்றும் தேவையான உதவிகளை வழங்குதல். 06 புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல். 05 புதிய மக்கள் நீர் வழங்கல் கருத்திட்டங்களை மேற்கொள்ளல். 30 குடும்பங்களுக்கு கொரகா மரக்கன்றுகள், 25 குடும்பங்களுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பொரட்களைக் கொள்ளவனவு செய்தல் மற்றும் துப்புரவேற்பாட்டுச் பொருட்களை பகிர்ந்தளித்தல்.
இரத்தினபுரி	சனசமூக மண்டபம் நிர்மாணிப்பற்காக தேவையான உபகரணங்களை வழங்கப்பட்டன.. குடாவ, பிட்டகெலே, பெதியக கந்த, கொடலபட்டல, புத்கந்த ஆகிய 05 ங்கள் உள்ளடங்கும் வகையில் 247 பயனாளிக் குடும்பங்கள். 02 மக்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தல். குடாவ மற்றும் பிட்டிகலே கிராமங்களில் வீட்டு தங்குமிட வசதிகள் 05 ஐ அபிவிருத்தி செய்தல்.
மாத்தர	சிரமதான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதல். ஏடுகளைப் பேனுதல், நுன்நிதியீட்டம், கித்துல் உற்பத்தி, ஏற்றுமதி விவசாயக் கைதொழில் மற்றும் சுற்றுலா வழிகாட்டல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று என்பன வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன. மகளிர் பங்கேற்பு 35% ஆகக்காணப்பட்டது.
காலி.	வாழ்வாதார அபிவிருத்தி மக்கள் அறிவுறுத்தல் 8 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 02 வீட்டு தங்குமிட வசதிகள் அபிவிருத்தி செய்தல், 01 சனசமூக மண்டபம் மற்றும் 01 குடி நீர் வழங்கல் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உதவிகளை வழங்குதல்.

வன ஒதுக்குப் பிரதேங்கள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்.

செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்
1. ஒதுக்கு வனப் பிரதேசங்களுக்குரிய திட்டத்தை இற்றைப்படுத்தல்.	சிங்கராஜ ஒதுக்கு வனம் மற்றும் ஹுருளு ஒதுக்கு வனத்திற்குரிய அவற்றின் திட்டங்களை இற்றைப்படுத்தல்.
2. காடுகளின் எல்லைகளை அளத்தல் மற்றும் அடையாமிடல்	- இதற்கு உரிய கிராமங்களில் மோதலைத் தீர்ப்பதற்காக கூட்டங்கள் நடந்தப்பட்டதோடு பிரதான சிக்கல்கள் 03 கிராமங்களிர் தீர்த்துவைக்கப்பட்டன. - ஒதுக்குப் பிரதேசத்தில் 256 கி.மீ. எல்லைகளை அடையாளமிடல் மற்றும் பராமரித்தல். - 2750 எல்லைத் தூண்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2000 தூண்கள் இரத்தினபுரி - சிங்கராஜ ஒதுக்கு வனப்பகுதி எல்லைகளுக்காகவும் 750 தூண்கள் புத்தளம் மாவட்டத்தின் வன்னியாகம வீரக்கோதிசோலை எல்லைகளை அடையாளமிடுவதற்காகவும் பயன்படுத்தகப்பட்டன.
3. மூடு தாவர விசேடங்களைக் கட்டுப்படுத்தல்	- 350 ஹெக்டயார் பிரதேசத்தில் அகற்றப்பட்டதோடு 450 ஹெக்டயார் பராமரிப்புச் செய்யப்பட்டன.
4. இயற்கை வனங்கள் புனரமைப்பு	- 270.5 ஹெக்டயார் இயற்கை வனங்கள் புனரமைப்பு மற்றும் 86 ஹெக்டயார் பராமரிப்புச் செய்தல். - 63 ஹெக்டயார பயினஸ் பயிரச் செய்கைக்காக பொருத்தமான கீழ் வளர் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. - நகல்ஸ் வன ஒதுக்கில் கண்டி மாவட்டத்தில் பயிர்ப் பைகள் மற்றும் 11,000 மரக் கன்றுகள் உற்பத்தி.
5. ஒதுக்கு வனப் பிரதேசங்களின் முகாமைத்துவத்திற்குரிய கீழ்க் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	- பிட்டு வன உத்தியோகத்தர்களின் 12 விடுதிகளின் வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு மேலும் 05 விடுதிகளின் வேலைகள் இறுதிக் கட்டத்தில் (95%) காணப்படுகின்றன. - வீரக்கொடிசோலை ஒதுக்கு வனப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கல்வில eco - park இல் உத்தியேபகபூர்வ விடுதிக் கட்டிடத் தொகுதி மற்றும் அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

	- ஹுருளு ஒதுக்கு வனப்பிரதேசத்தில பிட்டு வன உத்தியோகத்தர்களின் உத்தியேபகபூர்வ விடுதிகளைப் பராமரிப்பு செய்தல். - நுழைவுச் சீட்டு கருமபீடமொன்றை நிருமாணித்தல் - மாத்தறை வெஹெரஹேன
6. தீப் பட்டிகளைத் திறத்தல்	- தீப் பிடித்தலைத் தவிர்க்கும் குழுக்கள் வன ஒதுக்குகளுக்கு அருகில் தாபிக்கப்பட்டன. - தீப் பட்டிகள் 40 கி.மீ வரை புதிதாக வெட்டப்பட்டதோடு 105 கி. மீ பராமரிக்கப்பட்டன.
7. ஒதுக்குக் காடுகள் சார்ந்த வீதித் தொகுதிகளை புனரமைப்புச் செய்தல்	- மாத்தறை பிட்டதெனிய உட்பிரவேசித்தல் நிலையத்தை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு அலுவல்களை மேற்கொள்ளல். - படபிலிகந்த உட்பிரவேசித்தல் பாதை மறுசீரமைப்புச் செய்தல்.

ஒதுக்கு வனப் பிரதேசங்ளில் மேற்கொள்ளப்படுகின்ற இயற்கை (சுற்றாடல்) சுற்றுலா வணிகம்.

- சர்வதேச ஆலோசகர்களின் உதவியோடு சிங்கராஜ, நகல்ஸ், புந்தல மற்றும் உடவலவ ஆகிய வன ஒதுக்குப் பிரதேசங்களில் நான்கு இயற்கைச் சுற்றாடல் சுற்றுலாத் திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டதோடு, யால வனப் பூங்காவுக்கான சுற்றாடல் தொகுதியின் விசிறுதல்திறன் ஆற்றல் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான சாத்தியம் கிட்டும்.
- சுற்றுலா சேவைத் தகவல் நிலையத்தை வசதிகளுடன் கூடியதாக நிர்மாணித்தல்/ திருத்த வேலைகள், புதிய அனுபவங்கள் சகிதம் சுற்றாடல் நற்புரவான வசதிகளுடன் கூடிய தங்குமிடம் மற்றும் முகாம்களை நிர்மாணித்தல். உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தலுக்குத் தேவையான திட்டத்தைத் தயாரித்து அவற்றை செயற்படுத்தல்
- சர்தேசப் ஆலோசகர்களின் வழிகாட்டலின் கீழ் சுற்றாடல் சுற்றுலா வணிகத்திற்குரிய திட்டம் மற்றும் செயற்படுத்தும் பொறுப்புகளை வகிக்கும் இரண்டு திணைக்களங்களின் குறித்த பொறுப்பான அலுவலர்களை பலமும் சக்தியும் பெறச் செய்வதற்காக 06 செயலமர்வுகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.
- இயற்கைச் சுற்றுலா வழிகளை (Nature trails) நிர்மாணித்தல், சுற்றாடல் கண்காணிப்பு இடங்கள் மற்றும் கண்காணிப்கு கூடங்களை நிர்மாணித்தல், வன விலங்குகளைப் பார்வையிடுவதற்காகச் சுற்றுலாப் பயணிகளுக்கு பயணிக்கக் கூடியவாறு துரு வியன் வழிகளை அமைத்தல் மற்றும் விரிவான வழிகாட்டல் சகிதம் வன ஒதுக்குப் பிரதேசங்கள் சார்ந்ததாக இயற்கை சுற்றுலா கைத்தொழிலை சிறப்பாக மேம்படுத்துவதற்குத் தேவையான மதியுரை சேவைகள் மற்றும் கட்டங்களாக இந்த சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.
- மேலும், இதன் கீழ் பட்பிலகந்த உட்பிரவேசித்தல் வழியை புனரமைத்தல், குடாவ வன தங்குமிடத்தில் தங்கும் கூடங்கள் 1, 2, 3 மற்றும் கொஸ்குலன ஆகியவற்றை மேம்படுத்தல்.
- குருணாகல் - வெஹெரஹேன புதிய உட்பிரவேசித்தல் கூடங்களை ஆரம்பித்தல், அனுமதிப்பத்திர கருமபீடம் மற்றும் வாகனத் தரிப்பிட அபிவிருத்தி.
- சுற்றுலா வழிகாட்டிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான 25 சீறுடைத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டன.
- நகல்ஸ் வன ஒதுக்குப் பிரதேசம் - கண்டி மாவட்டத்தின் எல்லையில் 5 இயற்கை வழிகள் பராமரிப்பு இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன். சிங்கராஜ வன ஒதுக்குப்டி பிரதேசம், மாத்தறை மாவட்டத்திற்கு எல்லையாக 23கி.மீ இயற்கை வழிகள் பராமரிப்பு, பிட்டதெனிய நிலையத்தை சார்ந்ததாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், இயற்கை பாலம் மற்றும் பால வேலிகள் பராமரிப்பு என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன.
- நகல்ஸ் வன ஒதுக்குப் பிரதேசத்திற்காக மாத்தளை மாவட்டம், இயற்கை சுற்றாடல் சுற்றுலா வணிகத்திற்காக (NBTP) விருத்தி செய்வதற்காக செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கு கருத்திட்டம் தொடர்பான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதோடு விரிவான செயற்பாட்டுத் திட்டமான்றும் தயாரிக்கப்பட்டது.

ஹுருலு பொலன்னறுவை வன ஒதுக்கினுள் 12 கி.மீ இயற்கை வழிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளது. கன்னெலிய மற்றும் நகல்ஸ் ஆகிய ஒதுக்குக் காடுகளினுள் 30 கி.மீ இயற்கை வழிகள் மேம்படுத்துவதற்காக கேள்வி மனு வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளில் 80% வீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இயற்கை சுற்றுலா வணிகத்தை அபிவிருத்தி செய்வதற்காக விரிவான விதத்தில் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கிரிதலே தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. அதற்கமைய வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இயற்கை வழி சுற்றுலா வர்த்தகத்தை அபிவிருத்தி தொடர்பான 25 புதிய முன்மொழிவுகள் வரைவு செய்யப்பட்டதோடு, அவவை மேற்பார்வை மற்றும் அனுமதித்தல் செற்பாடுகளுக்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு இந்தப் முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன.

2.2.5 காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்துவதற்கான இணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம்.

காநிலை எதிர் இணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (CRIWMP) – நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவளவு 03 உள்ளன. இந்தக் கருத்திட்டத்திக் பிரதான நோக்கத்தை சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின்,: உலர் வலயத்தின் சிறு காணி உரிமையாளர்களான விவசாயிகள் காநிலை மாறுபடும் தன்மை மற்றும் குறுகிய விவகாரங்கள் தொடர்பில் தாக்குப்பிடிக்கும் இயலுமையைப் பலப்படுத்தல். கிராமிய நீர்ப்பாசன முறைமையை (வீஜஎஸ்) புனரமைத்தல், வருடம் முழுவதும் குடி நீரை வழங்கல், காநிலை பழக்கப்படல் (Climate smart) விவசாயப் பழக்கங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் வெள்ளப் பெருக்கு , வரட்சி பற்றிய முனனாபத்து எதிர்வுகூறல் மற்றும் விவசாயம் மற்றும் நீர் முகாமைத்துவ திட்டங்களுக்காக காநிலை மதியுரைகளை வழங்குதல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் அவதானத்திற்குற்பட்ட விளைவளவுகளாகும் எனக்குறிப்பிடலாம்.

இந்தக் கருத்திட்டம் மீ ஓயா,யான் ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய மூன்று ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. கிராமிய நீர்ப்பாசன முறைமை (VIS) அபிவிருத்தி மற்றும் காநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு பழக்கப்படுத்தும் விவசாயம் (CSA) உப கருத்திட்டம்
2. பாதுகாப்பான குடி நீரை வழங்கும் உப கருத்திட்டமொன்றை வழங்குதல்
3.வானிலை/காலநிலை/ எதிர்வு கூறல் மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் வானிலைத் தகவல்களை வழங்கும் உப கருத்திட்டம்.

பிரதான நோக்கங்கள்.

“ உலர் வலயத்தில் உள்ள சிறிய தோட்ட உரிமையாளர் காலநிலை தன்மை மாற்றங்கள் மற்றும் விஷேட நிகழ்வுகளுக்கு தாக்குப் பிடிக்கும் இயலுமை மற்றும் அதற்காக வலுவான வகையில் செயற்படுவதற்காக நீர் முகாமைத்துவம் தொடர்பாக இணைந்த பிரவேசமொன்றைப் பெற்றுக் கொள்வதாகும். ”

விளைவளவு 1: உலர் வலயத்தின் 3 ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகளில் கிராம நீர்ப்பாசன முறைமை மேம்படுத்தல் மற்றும் காலநிலைகளுக்கு தாக்குப் பிடிக்கும் விவசாயப் பயிர்ச்செய்கை முறைகளை மேம்படுத்தல்.

விளைவளவு 2: ஆபத்துக்கு உட்படக் கூடிய மக்களுக்கு பாதுகாப்பான குடி நீரைப் பெற்றுக் கொள்வதற்காக காலநிலைக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய, பன்முகப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் நீர் முகாமைத்துவ தீர்வுகளை மேம்படுத்தல்.

விளைவளவு 3: வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்குகளுக்கு சிறு காணி உரிமையாளர்களின் மற்றும் விவசாயிகளின் இயைபுபடும் கொள்ளளவை அதிகரிப்பதற்காக வானிலை/காலநிலை மற்றும் நீரியல் கண்காணிப்பு, எதிர்வு கூறல் மற்றும் நீர் முகாமைத்துவ முறைமையை வலுப்படுத்தல்.

பிரதானமான பணிகள்.

2019 ஆண்டின் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியினுள் சிறிய அளவிலான விவசாயிகள் 99,579 பேருக்கு கருத்திட்டத்தின் பிரதிபயன்கள் வழங்கப்பட்டுள்ளதோடு அதில் 50,786 பேர்

பெண்களாகும். இது கருத்திட்டத்தின் மூலம் இலக்கிடப்பட்ட நேரடி பயனாளிகளில் 12% வரை என்பதோடு 3 ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகளின் மொத்த ஆற்றங்கரைப் பள்ளத்தாக்கு சனத்தொகையில் 10% ஆகும். அதாவது மீ ஓயா, மள்வத்து ஓயா மற்றும் யான் ஓயா ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகள் இதன் கீழ் அடங்கும்.

விளைவளவு 1: 2019 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் இந்த விளைவளவு முக்கியமான முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. வீ.ஐ.எஸ் 102 முழுமையாக மேம்படுத்தப்பட்டதோடு வீ.ஐ.எஸ் 26 இன் பிரதாக கட்டமைப்பு பூரணப்படுத்தப்பட்டதோடு பிரதான மற்றும் சிறு பயிர் காலங்களில் விவசாயிகளுக்கு நெல் பயிர் செய்வதற்கு வாய்ப்புக்கிடைக்கின்றது. அறிக்கையிடப்பட்ட ஆண்டில் சிறு தொட்ட உரிமையாளர்கள் 3,978 பேர் நீர்ப்பாசன நீரைப் பயன்படுத்தி 2,419 காணிகளில் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இதில் 2,913 இல் (பெண்கள் 1,740 பேர்) காலநிலை தன்மைக்கு தாக்குப் பிடிக்கின்ற விவசாயதொழிநுட்ப தொகுதியைப் பயன்படுத்தினர். மேலதிக VIS 90 இற்கான பொறியியல் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. VIS 80 இற்கான அடிப்படை பரிசீலனை மற்றும் கள ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு அதற்காக 2020 இல் அளவை மற்றும் திட்டமிடல் மேற்கொள்ளப்படவுள்ளன.. இதற்கமைய, கருத்திட்டம் மூலம் ஏற்கனவே மொத்தப் VIS களில் 88% மேம்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 34% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன – மிகுதிப் பகுதியை அடுத்த அறிக்கையிடுகின்ற காலப்பகுதியினுள் முடிவடையும் போது மொத்த VIS களில் 64% முழுமையாக இற்றைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பருவகால எதிர்வு கூறல்கள், விவசாய மதியுரை மற்றும் காலநிலைத் தன்மைகளுக்கு தாக்குப்பிடிக்கின்ற விவசாய தொழிநுட்ப தொகுதி ஐந்து மாவட்டங்களின் 13 கமநல சேவைகள் நிலையங்கள் மற்றும் விவசாய வலய அலுவலகங்கள் ஊடாக ஆண் மற்றும் பெண் விவசாயிகள் 87,789 பேர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. அறிக்கையிடப்படுகின்ற ஆண்டில் காலநிலைகளக்கு இயைபுபடும் (கிளைமட் ஸ்மார்ட்) விவசாயக் கைத்தொழில் தொடர்பாக தேசிய வழிகாட்டியை வரைவு படுத்துவதற்காக விவசாய அமைச்சுக்கு உதவி வழங்கியதோடு பயிற்சி மொடியுள் தயாரிக்கப்பட்டது. மேலும், தேசிய வழிகாட்டியின் அடிப்படையில் மாவட்ட, மாகாண மட்டத்தில் விவசாய விரிவாக்கல் அலுவலர்கள் 109 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

விளைவளவு-2:அறிக்கையிடப்படுகின்ற ஆண்டில் 77 கருத்திட்டங்களுக்கான நீர் மூலங்கள் விசாரணைகள் தொடராகச் செய்யப்பட்டதோடு கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்காக 17 நீர் தோற்றுவாய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 13 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான திட்டம் பூரணப்படுத்தப் பட்டுள்ளதோடு 06 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 11 இடங்களில் மகப்கள அடிப்படை அமைப்புக்கள் அமைக்ககப்பட்டதோடு 2,696 நபர்களில் 1,209 பேர் பெண்களாவர். இவர்கள் கிராமிய நீர் வழங்கலின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். இதற்கு மேலதிகமாக மழை நீர் சேகரிக்கும் தாங்கிகளைப் பொருத்துதல் மூலம் 5,484 நபர்களுக்கு பாதுகாப்பான குடி நீர் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குடி நீர் பெற்றுக்கொண்ட 11,440 நபர்கள் வரையில் சேவையாற்றுவதற்காக 44

கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கான நீர் வடிக்கும் முறைமை தற்போது தாபிக்கப்பட்டள்ளது.

விளைவளவு- 3: கருத்திட்டம் மூலம் நீர்க் கால நிலையியல் கண்காணிப்பு முறைமையின் முழுமையானி வலையமைப்பு தாபிக்கப்பட்டதோடு, தரவு சேகரிப்பு மற்றும் பாதுகாப்புக்காக பொறிமுறையொன்று அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வு கூறுவோருக்கு பரவகால எதிர்வு கூறல் பற்றிய முன் பயிற்சி மற்றும் காலநிலையியலுக்கான புவியியல் தகவல் முறைமை (ஜீ.ஐ.எஸ்.) மூன்று ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகளிலும் வெள்ள நிலைமை ஆபத்து மதிப்பீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கொள்வதன் சவால்கள் பின்னர் கலந்துரையாடப்பட்டவாறு அறக்கையிடப்படுகின்ற காலப்பகுதியினுள் கருத்திட்டத்திற்கு சவால்கள் சிலவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது.

- வருடாந்த அமுலாக்கல் திட்டம்- 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குடி நீர் வழங்கல் திட்டங்களைத் தாபிப்பதற்காக பொருத்தமான நீர் தோற்றுவாய்களை கண்டுபிடிப்பது கருத்திட்டத்தின் முதன்மையான சவாலாக அமைந்துள்ளது. கருத்திட்ட இடங்களில் வறிய மற்றும் ஆபத்துக்களுக்கு உட்படக் கூடிய மக்களுக்குப் பாதுகாப்பான குடி நீரைப் பெற்றுக் கொள்வது கருத்திட்டதின் அடையிலக்காகும். இந்த இடங்களில், நீர் மூலங்களின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நீர் தோற்றுவாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அளவை விடக் குறைவாகக் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தெரிவு செய்யப்பட்ட நீர் தோற்றுவாய்களின் பலவீனம் நீரின் தரத்தன்மை மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை விடவும் உயர்வாக ஆகுசெலவுகள் அதிகரித்துள்ள நீர் தோற்றுவாய்களால் எதிர்பார்க்கப்பட்ட பிரசைகளுக்கான தூரம் அதிகரிப்பு, ஆகுசெலவுகள் அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளன. ஆகுசெலவுகள் அதிகரிப்பைதவிப்பதற்கான மாற்று நடவடிக்கையாக நிதி இடைவெளியை ஈடு செய்வதற்காக மேலதிக நிதியை சேகரிப்பாதற்கு கருத்திட்டத்திற்குப் பொறுப்பான தரப்பினர்கள் மற்றும் அரசாங்க பொறுப்புடைய உத்தியோகத்தர்களுடன் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுவரகின்றன. எவ்வாறாயினும், இந்த சவால்களின் பெறுபேறாக ஆரம்பத்தில் இலக்கிடப்பட்ட நீர் வழங்கல் திட்டங்கள் 35 இல் தற்போதைய கருத்திட்டத்தின் வரவு செலவுத் திட்டத்தைப் பயன்படுத்தி 13 நீர் வழங்கல் திட்டங்களை மாத்திரமே பூர்த்தி செய்ய முடியும். இந்த சவால் பற்றிய தகவல்கள் கருத்திட்ட அணிக்கு தனித்தனியாக குறிப்புக்கள் கோப்பொன்றாகச் GCF செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- நாட்டின் அரசியல் சந்தர்ப்பத்தினுள் மாற்றங்கள் மற்றும் ஆண்டு முடிவடைகின்ற போது நடைபெற்ற பொதுத் தேர்தல் கருத்திட்டத்தை ஒப்படைத்தல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தின. சகல கருத்திட்டங்கள் சார்ந்த அரச நிறுவனங்களின் அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்கள் மற்றும் உயர் மட்ட அரச உத்தியோகத்தர்களின் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது.

செயற்படுத்தலின் மூன்றாம் ஆண்டில், செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் நிதி இடைவெளி ஏற்படுத்தியுள்ள விளைவளவு 02 தவிர , பௌதீக ரீதியான முன்னேற்றம் மற்றும் நிதி வழங்கல் அடிப்படையில்கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கெஸ்கெட் நீர் வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ திட்டம், VIS மேம்படுத்தல், நீர் வழங்கல் முன்மொழிவுத் திட்டம், நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகள் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு தொடர்பான பயிற்சி மற்றும் காலநிலை சேவைகளை விருத்தி செய்வதற்காக மேலதிக சமூக வலுவூட்டலை உள்ளடக்கி இந்தக் கருத்திட்டத்தை 2020 இல் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.∴

2.2.6 . மகாவலி ஆற்றங்கரை சார்ந்த கமத்தொழில் சமூகத்தவர்களை காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு பழக்கப்படுத்தும் கருத்திட்டம்.

பழக்கப்படுத்தல் நிதியம் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் உலக உணவு அமைப்பு (WFP) மூலம் இதன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை அரச தரப்பில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கருத்திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனமாக 2014 ஆம் ஆண்டு முதல் செயற்படுவதோடு கருத்திட்டத்தின் பெறுபேற்றை மேம்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) உதவி வழங்குகின்ற் நிறுவனமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்திடடம் மூலம் பொலொன்னறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய மற்றும் லங்காபுற ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் வலபனை பிரதேச செயலாளர் பிரிவும் உள்ளடங்குவதோடு இந்தப் பிரதேச செயலகப்பிரிவுகளின் விவசாய சேவைகள் நிலையங்கள் ஊடாக சிறிய விவசாய அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நண்மைகள் வழங்கப்படுகின்றன. கருத்திட்டம் 136 கிராம அலுவலர் பிரிவுளில் அமைந்துள்ள 183 சிறிய விவசாய அமைப்புகளுக்கு சேவை வழங்கப்படுவதோடு, அதற்கமைய பொலொன்னறுவை மாவட்டத்தில் 70 விவசாய அமைப்புகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 113 விவசாய அமைப்புக்களின் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தக் கருத்திட்டத்தின் மூலம் மேற்படி பிரதேச செயலகப்பிரிவுகளினுள் 14039 பயனாளிகளுக்கு நன்மைகளை பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதான நோக்கங்கள்.

கருத்திட்டத்தின் மொத்த நோக்கம் மகாவலி ஆற்றங்கரைப் பள்ளத்தாக்குகளில் காலநிலை மாற்றங்கள் காரணமாக துயரங்களுக்குற்பட்ட விவசாய மக்கள் வசமள்ள காணிகள் மற்றும் நீர்வளங்கள் என்பவற்றை பயனள்ள வகையில் முகாமைத்துவம் செய்தல் மூலம், அவர்களுக்காக பல்வகையிலான நெகிழ்வுத்தன்மையுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகும். அதற்கமைய பின்வரும் இரண்டு விசேட நோக்கங்கள் ஊடாக காலநிலை மாற்றங்கள் மற்றும் மழைவீழ்ச்சி வேறுபாடுகளின் தாக்கங்களுக்கு உட்பட்ட விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவு பாதுகாப'பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

I மழை நீரில் பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளும் விவசாயக் குடும்பங்களிற்கு நெகிழ்வான வாழ்வாதார வழிமுறையை அறிமுகப்படுத்தல் மற்றும் மானை சார்ந்த உணவு பாதுகாப்பைப் உறுதிப்படுத்தல்

II. காநிலை மாற்றங்களின் தாக்கங்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற மழைவீழ்ச்சி மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்தைக் குறைப்பதற்காக கிராமிய மற்றும் பிரதேச மட்டத்திலான சேவை வழங்கும் நிறுவனங்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.

பிரதான பணிகள்.

கருத்திட்டத்தின் மூலம் 2019 ஆண்டினுள் நீர்ப்பாசன கருத்திட்டம், சிராமிய குளங்கள் அபிவிருத்தி, விவசாயக் கிணறகள், விவசாய பாதைகள் நிர்மாணம், விவசாய மற்றும் கால்நடை வளங்கள் நிகழ்ச்சித்திட்டம்,பின் அறுவடை தொழில்நுட்ப நிகழ்ச்சித்திடட்டம்,பாதுகாப்பான வீடுடு நிர்மாணம் உள்ளிட்ட 62 உப கருத்திட்டங்கள் 160.45 மில் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய ஆண்டினுள் 89% நிதி முன்னேற்றம் அடையப் பெற்றதோடு இது வரை கருத்திட்டம் மூலம் மொத்தம் 215 உப கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 96% நிதி முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. மேலும் மாற்று வருமானத்தை பலமுடையதாக்கும் விவசாய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் மரமுந்திரிப் பயிர்ச் செய்கை ஆகியவற்றை வீட்டுத் தோட்டங்களில் பிரபல்யப் படுத்தும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு மகளிர் பயனாளிகளுக்கும் குடும்ப பொருளாதார நிலையை வலுப்படுத்திக் கொள்வதற்காக விவசாயம் அல்லாத வருமான வழிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்கள் ஆகியவற்றுக்கு பழக்கப்படுத்துவதற்கு நீர் வளங்கள் அவசியம் என்பதால் அதற்காக மழை நீர் தாங்கிகள், 415 பயனாளிகளுக்கு வழங்குவதற்கும் மற்றும் நிலக்கீழ் நீரை பயனள்ளவாறு பயன்படுத்திக் கொள்வதற்காக் 91விவசாயக் கிணறுகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் காலநிலை மாற்றங்களின் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் சேவை வழங்கும் நிறுவன ஆற்றலை கட்டியெழுப்புவதற்காக நிறுவன ஆற்றலை அதிகரிக்கும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், நில வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் முன் ஆபத்து எதிரவுகூறல் முறைமையை ஏற்படுத்தல் உள்ளிட்ட உப கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே காநிலை மாற்றங்களினால் துயரங்களுக்குற்பட்ட மையப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு தொடர்ச்சியாக வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான கருத்திட்டம் காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படும் வழிமுறைகள் மற்றும் மாற்று வருமான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு கருத்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகளின் நிலைத்திருக்கத்தகு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி தேசிய கூட்டுறவு சங்கமொன்றாக தாபிப்பதற்கு மற்றும் அந்த உற்பத்திக் குழுக்களுக்காக விற்பனை இணைப்பை கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.7. சற்றாடல் உணர் திறன்மிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சற்றாடல் முறைமை சேவைகள் பராமரிப்புக் கருத்திட்டம் (ESA)

சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அசைச்சின் ஐந்து வருட திட்டமொன்றின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற சுற்றுச்சூழல் உணர்திறன் நிலப்பிரதேசங்களில் உயிரியற் பல்வகைமை பேணிப் பாதுக்காப்புச் செய்வதை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைகள் பராமரிப்புக் கருத்திட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவி கிடைப்பதோடு சர்வதேச சுற்றாடல் வசதிகள் (GEF) மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றது. உயிர் பல்வகைமைக்குஎ ஏற்படுகின்ற அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக உயர் பாதுகாப்பு முக்கியத்துவம் கொண்ட சுற்றுச்சூழல் உணர்திறன் நிலப்பிரதேசங்களை மையமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் புறம்பாக காணப்படுகின்ற சுற்றாடல் முறைமை சேவைகள் மற்றும் உயிரியற் பல்வகைமை அடிப்படையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் உணர்திறன் வலயங்களை இனங்கண்டு உயிரியற் பல்வகைமை பேணிப் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் முறையொன்றின் மூலம் சுற்றாடல் முறைமை முகாமை அபிவிருத்தியுடன் ஒன்றிப்புச்செய்தல் இந்தக் கருத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டக் கால எல்லை 2015 தொடக்கம் 2020 வரையாகும்.

பிரதான நோக்கங்கள்.

சுற்றாடல் முறைமை முகாமைத்துவத்துடன் அபிவிருத்தி ஒன்றிப்புச் செய்தல் மூலம் இலங்கையில் நீண்டகால வளமான அபிவிருத்தியை உறுதி செய்து கொள்வதற்கு இந்த கருத்திட்டம் ஊடாக பிரதான அடிப்படை செய்யப்படுகின்றது. அவ்வாறே இந்தக் கருத்திட்டத்தின் அனுபவங்களை இலங்கையில் ஏனைய சுற்றாடல் உணர்தகு வலயங்களுக்கு எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

முடிவு 1: சுற்றாடல் உணர்தகு பிரதேசங்களை முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவன மற்றும் சட்ட ரீதியான சட்டகமொன்றை ஏற்படுத்தல் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல்.

முடிவு 2: கலா ஓயா ஆற்றங்கரைப் பள்ளத்தாக்கில் சுற்றாடல் உணர்தகு வலயங்களில் உயிர் பல்வகைமையைப் பேணிப்பாதுகாத்தல்.

பிரதான பணிகள்

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் 2019 ஆண்டில் கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

01. கலா ஓயா ஆற்றங்கரைப் பள்ளத்தாக்கில் 14,164 ஹெக்டெயார் நிலப்பிரதேசத்தை சுற்றாடல் உணர்தகு வலயமாக இனங்காணல்.
02. அங்கீகரிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட காட்டு யானை முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு கொள்கை மற்றும் மூலோபாயத்தை வெளியிடுதல்.
03. வன விலங்குகள் தொடர்பான – மனித மோதல் கொள்கை ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்.
04. காணிப் பயன்பாட்டுத் திட்டச் செயற்பாடுகளுக்கு உயிரியற் பல்வகைமையை ஒன்றிணைத்தல் மற்றும் ESA செயற்படுத்தல் தொடர்பான வழிநடாத்தல் கைநூலுக்கான வழிகாட்டலகளைத் தயாரித்தல்.
05. நிலைத்திருக்கத்தகு விவசாயத்திற்கான உயிரியற் பல்வகைமை பற்றிய மொடியுல் தயாரிக்கப்பட்டதோடு 65 அலுவலர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
06. மாவட்ட வசதிகள் குழு 02 மற்றும் பிரதேச முகாமைத்துவக் குழு 03 நடாத்தப்பட்டன.
07. தொடர்பாடல் மூலோபாயத்துடன் IUCN மீளாய்வு செய்து நிறைவேற்றிக்கொள்ளப் பட்டுள்ளது.
08. காட்டு யானை – மனித மோதலை குறைப்பதற்காக முன் ஆபத்து எதிர்வு கூறல் முறைமை தொடர்பான முன்னோடிக் கருத்திட்டமொன்று தேவநுவர கிராமத்தைச் சுற்றிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

09. ஈரப்பதன் கொண்ட கலப்பு என்றும் பசுமையான காடுகள் 10,197 ஹெக்டெயார்களுக்கான முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

10. இனங்காணப்பட்டசுற்றாடல் உணர்தகு இரண்டு வலயங்களுக்கான ESA மற்றும் முகாமைத்துவத் திட்டம்தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
11. 4,886 ஹெக்டயார் காணிகளை உயிர் பல்வகைமை இசைவுடைய விளைபொருட்கள் பயன்பாட்டின் கீழ் கொண்டுவருதல்.
12. வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான மாநெவ கந்த உத்தேச ஒதுக்கு வனத்திற்காக பேண்தகு தழுவல் திட்டம் தயார் செய்யப்பட்டது. மாநெவ கந்த சுற்றாடல் பூங்கா முகாம் காணியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யபப்பட்டுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.
13. ESA பரிமானத் திட்டம் தயாரிப்பதற்காக கல்நேவ பிரதேச செயலாளர் பிரிவில் உயிரியல் பல்வகைமை மதிப்பீடு பூரணப்படுத்தப்பட்டது.

14. உயிர் பல்வகைமை இணைந்த காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
15. மரதன்கடவல – அம்பலகஸ்வெவ வன ஒதுக்கில் 2 கி.மீ தீ பட்டி (10 மீற்றர் அகலம்) தாபித்தல்.
16. ஹபராவத்தை கந்துரல்ல முறைமையில் சிறிய காணிப் பயன்பாடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டது. காடுகள் அழிப்பு மற்றும் பேண்தகு தன்மையற்ற விவசாயக் கைத்தொழில் , கதுரெல்ல முறைமை புனரமைப்புச் செய்தல், பாதுகாப்பல்லாத பிரதேசங்களில் குடியிருப்புக்ககள் 18,439 ஹெக்டயாரில் சுற்றாடல் சுற்றுலா வணிகம்.
17. சமூக கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகள் (பிரம்பு சார்ந்த உற்பத்திகள்/ ஆடு சார்ந்த விவசாயப் பயிர்ச்செய்கை தொடர்பாக அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை
18. Transact Walk - இரவு மற்றும் பகல் நான்கு மாதிரிகள் - கலர் ஓயா முதலாம் 4 கி.மீ. - மீன் எஸ்பீஏ அடையாளம் காணுதல்.
19. யோத எல பாதுகாப்பு
20. கொரல் பாறை கடல் சரணாலயப் பூமிக்காக முகாமைத்துவத் திட்டம் செயற்படுத்தப்படுவதோடு மீளுருவாகும் கல்பிடி கொரல் பாறையின் தற்போதைய நிலை.

2.2.8 பொலிக்லோரினேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்களை சுற்றாடல் நட்புறவான விதத்தில் முகாமைத்தும் மற்றும் வெளியேற்றல் கருத்திட்டம்.

பொலிக்லோரினேடட் பயிபினயில் (PCB) நீடித்து நிலைத்திருக்கும் கழிவுப்பொருட்கள் காரணமாக புற்றுநோய் , விருத்திக் குறைபாடு போன்ற சுகாதார பிரச்சினைகள் பல ஏற்படகின்றன. இந்த இரசாயனம் உலகம் முழுவதும் 1980 ஆண்டளவில் தடைசெய்யப்பட்டதோடு, தற்போது இது இலங்கை மின்சார சபையின் பழைய ரான்ஸ்போமர்கள் மற்றும் வேல்டிங் ரான்ஸ்போமர்களில் காண முடியும். ஏற்கனவே பிரதானமாக ஒட்டவதற்கு (வேல்டிங்) பயன்படுத்தப்படும் ரான்ஸ்போமர்களின் எண்ணெய் மூலம் PCB பரவி வருகின்றது.

இந்தக் கருத்திட்டதின் நோக்கம் மின் ரான்ஸ்போமர் மற்றும் வேல்டிங் ரான்ஸ்போமர்களில் PCB அடங்கிய எண்ணெய் கொண்ட ரான்ஸ்போமரகளைர் இனங்கண்டு அதின் உள்ள ரான்ஸ்போமர் எண்ணெய் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரான்ஸ்போமர்களை சுற்றாடல் பாதுகாப்பான விதத்தில் வெளியேற்றுவதாகும்.

பிரதான பணிகள்

இதற்குரியதாக வேல்டிங் பிரிவின் இன்வென்றி தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு ரான்ஸ்போமர் எண்ணெய் மாதிரிகள் சோதனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. PCB கொண்ட எண்ணெய்க்குப் பதிலாக சுத்தமான எண்ணெயை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மின் சக்திப் பிரிவின் PCB ரான்ஸ்போமர் இன்வென்றியை தயாரிப்பதற்குரிய நடவடிகக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

PCB தொடர்பாக வெல்டிங் தொழிலாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று குருணாகல் மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.

உரிய குழுக்கள் மற்றும் மக்கள் மத்தியில் அறிவு மேம்படுத்தலுக்காக PCB தொடர்பாக இணைய வலையமைப்பு மற்றும் வீடியோ என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக , நீடித்து நிலைத்திருக்கும், உயிரியல் ஒதுக்கு மற்றும் விஷம் கொண்ட இரசாயனத் திரவம் தொடர்பான பாடநெறியொன்று தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறி தொடர்பாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனூடாக மேற்படி மாணவர்களிடத்தில் இந்த இரசாயனப் பொருட்கள் பற்றிய அறிவை, றேபடுத்தலும், அதன் உரிய பாவனைகள், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து மற்றும் சுற்றாடல் நட்புறவான விதத்தில் வெளியேற்றல் வழிமுறைகளை விருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், பொலிக்லோரினேடட் பயிபினயில் (PCB) தொடர்பான வழிகாட்டுநெறியை அச்சிடுவதற்காகத் தயாரித்தல், அதே போன்று தாயப் பாலில் டயொக்சின் அடங்கியுள்ளதா என்பதை ஆராய்ச்சி செய்வதற்காக பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வொன்றை ஆரம்பித்தல் மற்றும் இன்வென்றிக்காகத் தரவுகளைச் சேகரிப்பதற்காக Android கருவியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2.9. மினமாட்டா உடன்படிக்கையின் கீழ் "இரசம்" பற்றிய அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான கருத்திட்டம்.

இரசம் வெளியிடப்படுதல் சுவாசப் பாதிப்புக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையக் கூடும். இந்தக் கருத்திட்டத்தின் மூலம் சுகாதார, தொழிநுட்ப மற்றும் கல்வித் துறைகளில் இரசத்தின் உபயோகம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் ஆய்வொன்று மூலம் பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவு நாட்டினுள் இரசம் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதோடு ஏற்கனவே கல்வித் துறையில் இரசத்தின் உபயேகம் குறைக்கப்பட்டுள்ளதோடு, சுகாதாரப் பிரிவு இரசம் உபயோகிப்பதிலிருந்த வெளியேறிக் கொண்டு வருகின்றது.

இரசம் தொடர்பான பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான செயற்பாட்டுக்குழு மூலம் எமது நாட்டினுள் இதரச முகாமைத்துவ நடவடிக்கைகளின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

பிரதான பணிகள்.

இந்தக் கருத்திட்டத்தின் மூலம் இரசத்தின் உபயேகம் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் மற்றும் சகாதார விளைவுகள் தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறிய அலவிலான தங்கஆபரண உற்பத்தித் துறையின் தங்க நகை உற்பத்தியாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக இரசம் தொடர்பான துண்டுப் பிரசுரமொன்றை அச்சிட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தங்கத்திலான பொருட்களை தயாரிக்கின்ற சிறிய அளவிலான வியாபாரிகள் தொடர்பான ஆய்வொன்றைச் செய்வதற்காக இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணம் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டு ஆய்வுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தற்போது கொழும்பு, கம்பஹா, கண்டி, பதுளை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் ஆய்வுப் பணிகளை நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வு சிறிய அளவிலான தங்க பொருட்கள் தயாரிப்பாளர்களின் இரச உபயேகம் பற்றிய விடயங்களை கண்டறிவதற்கு உதவுவதோடு அதன் மூலம் இரசத்திற்குப் பதிலாக மாற்றீடொன்றை அறிமுகம் செய்து அவர்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் சிறிய அளவிலான தங்கஆபரண உற்பத்தியாளர்களுக்காக இரசம் உபயோகத்தின் சுற்றாடல் மற்றும் சுகாதார ரீதியான தாக்கங்கள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

சிறிய அளவிலான தங்கஆபரண உற்பத்தியாளர்களில் தலை மயிர் மற்றும் சிறுநீர் மாதிரிகளில் இரசத்தின் மட்டத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஆராய்ச்சி முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இரசம் உள்ளடங்கியுள்ள கழிவுப்பொருட்களை ஒழுங்கு முறையாக வெளியேற்றுதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மழை நீரில் இரசம் கலந்துள்ளதா என்பது குறித்து பரிசீலித்துப் பார்ப்பதற்காக உபகரணமொன்று ஆசியா பசுபிக் இரசம் ஒழுங்குபடுத்தல் வலையமைப்பினால் (Asia Pacific Mercury Monitoring Network/ APMMN) வழங்கப்பட்டுள்ளதோடு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவ்வுபகரணம் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே மழை நீர் மாதிரிகள் பல தடவைகளில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

2.2.10. மத்திய மலைநாட்டின் அரிப்புக்குற்பட்ட விவசாயக் காணிகளைப் புனரமைப்புச் செய்தல் கருத்திட்டம்.

அரிப்புக்குற்பட்ட விவசாயக் காணிகளை புனரமைக்கும் (RDAL) கருத்திட்டம் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (UN- FAO) மூலம் சுற்றாடல் அமைச்சின் நெருங்கிய ஒருங்கமைப்பில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்பிரதான நோக்கம் மத்திய மலை நாட்டின், கண்டி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் விவசாயக் காணிகள் அரிப்பைத் தடுத்தல் மற்றும் அரிப்படைந்த காணிகளை மீண்டும் புனரமைப்புச் செய்தல்.

பிரதான பணிகள்

1. பேண்தகு காணி முகாமைத்துவம் தொடர்பாக நீர் போஷாக்குப் பிரதேச முகாமைத்துவம்

இந்த நிகழ்ச்சித் திட்டம் நீர் போஷாக்குப் பிரதேச முகாமைத்துவப் பிரவேசம் மூலம் பேண்தகு காணி முகாமைத்துவம் மெம்படுத்தப்படுகின்றது. 46 சிறிய நீர்ப் போஷாக்குப் பிரதேசங்கள் தொடர்பாக காணிப் பயன்பாடு மற்றும் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் பங்கேற்பு காணி பயன்பாட்டுத் திட்டத்தைத் தயார் செய்துள்ளதோடு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் 09 செயற்படுத்தப்பட்டுள்ளதோடு எஞ்சிய திட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரப்புக்கள் மூலம் அவர்களின் நிதி மூலம் மெற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி செயலாளர் அலுவலகம், நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சபை போன்ற சில நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஏற்கனவே காணி உபயோகம் மற்றும் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் 11 திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு பங்கேற்பு காணி பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் மேற்கொள்ளல் அனுபவங்களின் அடிப்படையில் பங்கேற்பு காணி பயன்பாட்டுத் திட்டமிடல் வழிகாட்டு நெறியொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

2. பேண்தகு பூமி முகாமைத்துவ மாதிரிகளைத் தமாபித்தல்

717 ஹெக்டெயார் உள்ளடக்கும் வகையில் கருத்திட்ட மாவட்டங்கள் மூன்றில் தனி விவசாய மாதிரி இடங்கள் ஐம்பத்தியிரண்டு (52) தாபிக்கப்பட்டுள்ளதோடு கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேச செயலகப்பிரிவுகளில் ஒரு நுண் (சிறு) நீர் போஷாக்கு வீதம் மாதிரிகளாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந்தக் கருத்திடடத்தின் மூலம் 2784 விவசாயிகள் நேரடியாக பயிற்றுவிக்கப்பட்டதோடு பங்குதார தரப்பு நிறுவனங்களினால் 2650 ஹெக்டெயார் உள்ளடக்கும் வகையில் 6050 விவசாயிகள் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

3. பேண்தகு பூமி முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரச - தனியார் இணைந்த கருத்திட்டங்களை மேற்கொள்ளல்.

- பேண்தகு பூமி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக வீட்டுத் தோட்ட நிகழ்ச்சிததிட்டமொன்று தனியார் நிறுவனமான ஆதம்ஜீ லுக்மஞ்சி அன்ட் சன்ஸ் (AdamjeeLuckmenjee& Sons Ltd) லிமிடட் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. வீட்டுத்தோட்ட எண்ணக் கரு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக துறையினுள் தாபிப்பதற்கு முயற்சி செய்த போதிலும் அது இதுவரை வெற்றியடையவில்லை. எனவே பயிர்களைப் நிதிப் பயிர்களாக விருத்தி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார வீட்டுத் தோட்ட . பயிர் எண்ணக்கரு மேம்படுத்தப்பட்டதோடு வெனிலாப் பயிர் பொருளாதாரப் பயிராக வீட்டுத் தோட்டங்களில் சேர்க்கப்பட்டது. கமநல சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட“ சிதமு" மகளிர் வீட்டுதட் தோட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு ஏற்றுமதி விவசாய திணைக்களமும் இதற்த பங்களிப்புச் செய்தது.

- இலங்கையில் பால் உற்பத்தி நிறுவனமான பென்டெரா நிறுவனம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மூலம் விருத்தி செய்யப்பட்ட கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் மற்றும் பேண்தகு பூமி முகாமைத்துவத்திற்காக இணைந்த

பயிர்கள் மற்றும் கால்நடை வளங்கள் மாதிரிகள் பல மேற்கொள்ளப்பட்டன. கால்நடைப் பிரிவு பேண்தகு பூமி முகாமைத்துவத்தின் வெற்றிக்கு மிக முக்கியமென்பதோடு கழிவுகளின் வினைத்திறன்மிக்க உபயேகம் காரணமாக பால் பசுக் கைத்தொழிலின் மொத்த இலாபமும் அதிகரிக்கும்.

• சிறந்த விவசாய பழக்கங்களை சான்றுப்படுத்தல் (GAP) மூலம் பேண்தகு பூமி மகாமைத்துவ விருத்திற்காக காகில்ஸ் நிறுவனம் மற்றும் விவசாயத் திணைக்களத்துடன் நிகழ்ச்சிததிட்டமொன்றை மெற்கொள்கின்றது. சிறந்த விவசாய நடைமுறைகள் என்பது விவசாயிகளினஇலாபத்தை அதிகரிக்கச் செய்து தரமான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பயன்பாடுகளாகும். 80 நபர்களுக்கு உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் திறன் விருத்தி மூலம் சான்றிதழ் பெற்ற விவசாயிகள் மாற்றியமைப்பதற்கு கருத்திட்டம் உதவுகின்றது.

4. பேண்தகு பூமி முகாமைத்துவம் தொடர்பான கொள்கை மற்றும் தாபனக் கட்டமைப்பு மீளாய்வு

பேண்தகு பூமி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக பிரச்சினை இடைவெளிகளை இனங்கண்டு கொள்வதற்காக காணப்படுகின்ற காணிகள் சார்ந்த தேசிய கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் எட்டு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. பேண்தகு பூமி முகாமைத்துவம் பற்றிய விவாதமொன்றுக்கான களமொன்றை உருவாக்குவதற்கு அனைவரும் இனங்கியுள்ளனர்.

சுற்றாடல் முறைமை மதிப்பீடு மற்றும் பேண்தகு பூமி முகாமைத்துவத்திற்காகபுதிய நிதியத்தை நடைமுடுறைப்படுத்தல்.

3 கருத்திட்ட இடங்களுக்கான சுற்றாடல் முறைமை மதிப்பீடு செய்யப்பட்டதோடு பேண்தகு பூமி முகாமைத்துவம் தொடர்பாக புதிய நிதியத்தை செயற்படுத்தல் தொடர்பான வழிகாட்டு நெறிகள் தயாரிக்கப்பட்டன.

அறிவு முகாமைத்துவம்

அறிவு முகாமைத்துவப் பிரிவின் கீழ் விளம்பரப் பத்திரங்கள், பத்திரிகை கடிதங்கள் மற்றும் கள நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. பேண்தகு பூமி முகாமைத்துவம் தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் தகவல் பரிமாற்றததிற்கான களம் அமைக்கப்பட்டதோடு இற்றைப்படுத்துலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (www. sricat. net).

2.2.11.இலங்கையில் விவசாய சுற்றாடல் வலயப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு மக்களை இயைந்து போகச் செய்யும் கருத்திட்டம்.

பிரதான பணிகள்

சமூக அடிப்படை உயிரியல் பல்வகைமை ஆவணங்களைத் தயாரித்து பேணிவருதல்.

முன்னோடிக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற உயிரியல் பல்வகைமை மற்றும் அதற்குரிய சம்பிரதாய அறிவை இனங்கண்டு அதனைப் பாதுகாத்து வளமான அடிப்படையில் உபயோகப்படுத்துவதற்காக இந்த சமூக அடிப்படை உயிரியல் பல்வகைமை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒரு கருத்திட்டப் பிரதேசத்திற்கு பயிச் செய்கை, மருந்து மூலிகைத் தாவரங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு என தனித்தனியாக 3 ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு பராமரிக்கும் பொறுப்பு உரிய சமூக அடிப்படை அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

உயிரியல் பல்வகைமை சந்தைகளை நடாத்துதல்.

இங்கு தமது பிரதேசத்தின் பயிர்ப் பல்வகைமை தொடர்பாக மக்களுக்கு சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1) **மக்கள் பங்கேற்பு வழிமுறைகள் மூலம் பாரம்பரிய மரபுகள், தேசிய கால்நடை வளங்கள் இனங்கள் மற்றும் ஏனைய பயனுள்ள தாவர விசேடங்களை மீண்டும் அறிமுகம் செய்ததல்.**

ஆராய்ச்சியாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட போன்றே விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க பாரம்பரிய மற்றும் விருத்தி செய்யப்பட்ட பயிர் மரபுகள், மரக்கன்று மரபணு வள நிலையம், பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஆயுர்வேத திணைக்களம் ஊடாக இந்த முன்னேடிக் கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் சுற்றாடல் நிலைமைகளுக்கு பொருத்தமானவாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பரிந்துரையின் மீது சம்பிரதாய கோழிகள் மற்றும் பாற் பசுக்கள் வழங்கப்பட்டன.

மக்கள் அடிப்படையிலான விதை வங்கியொன்றைத் தாபித்தல்.

மக்கள் அடிப்படையிலான 04 விதை வங்கிகள் தாபிக்கப்பட்டதோடு பராமரிப்புப் பணிகள் உரிய பிரதேசத்தின் விவசாயிகள் மற்றும் கருத்திட்ட உதவியாளர் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பாரம்பரிய விதைசார் பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் விருத்தி செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயகளால் ஆரம்ப விதை வங்கிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த முன்னோடிக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட மில்லனியா, கம்பளை மற்றும் உடுகும்புர ஆகிய பிரதேசங்களில் முறையே ஆரம்ப விதை வங்கிகள் 09, 11 மற்றும் 04 என்றவாறு 20 விதை வங்கிகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மண் மற்றும் நீர் பாதுகாப்பு வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.

இயற்கை வள முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து முன்னோடிக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களில் கள இலட்சணங்கள் மற்றும் ஆய்வுகூட பகுப்பாய்வு ஆரைய்ச்சிகளை மேற்கொண்டு மண்ணின் செழிப்பான தன்மை மற்றும் மண் நீர்ப் பாதுகாப்புச் செய்யப்பட வேண்டிய விதம் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய மண்ணின் செழிப்புத்தன்மை மற்றும் மண் நீர் பாதுகாப்புத் தொடர்பாக விவசாயிகளுக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அது தொடர்பாக தெளிவுபடுத்தக் கூடிய முன்னோடி அலகுகள் தாபிக்கப்பட்டன.

மகரந்தச் சேர்க்கை (காவிகள்), நோய்ப் பூச்சிகொல்லிகள் மற்றும் மற்றொரு உயிரை உணவாகக் கொள்ளும் விலங்குகள், பறவைகள் தொடர்பாக ஆராய்தல்.

பேராதனை பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து மகரந்தக்காவுகை தொடர்பாக ஆராயப்பட்டது. பூக்கள் மற்றும் மகரந்தம் தொடர்புடைய பூச்சிகள் மற்றும் அவற்றின் பரவல், அதிகமாக பரவியுள்ள மகரந்தக் காவுகை உயிர்கள்,மகரந்தக் காவுகைகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் தொடர்படைய தாவரங்கள் மற்றும் மகரந்தக் காவிகளுக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற காரணிகள் தொடர்பாக மேற்படி நிறுவனம் மற்றும் இணைந்து ஆய்வு நடாத்தப்பட்டது. மகரந்த காவுகைகள் மற்றும் அவற்றால் ஆற்றப்படும் சேவைகள் பற்றி விவசாயிகளை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயிற்சியின் போது பயன்படுத்தக் கூடிய கருவியொன்றாக மகரந்தக் காவிகள் மற்றும் அவற்றின் சேவைகள் தொடர்பான சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன.

“ இணைந்த விவசாய உயிர் பல்வகைமை முகாமைத்துவம் ” தொடர்பான சான்றிதழ் பத்திர மற்றும் டிப்ளோமாப் பாடநெறியொன்றை ஆரம்பித்தல்.

“ இணைந்த விவசாய உயிரியல் பல்வகைமை முகாமைத்துவம்” தொடர்பான தொலைக்கல்வி சான்றிதழ் பத்திர மற்றும் டிப்ளோமாப் பாடநெறியொன்று கடந்த ஆண்டில் விவசாய உயிர் பல்வகைமை தொடர்பான காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையச் செய்யும் கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் றுஹுனு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

வெளிநாட்டு நிபுணத்துவம் கொண்ட வளவாளர்களின் பங்களிப்புடன் விவசாய உயிர் பல்வகைமை தொடர்பான காலநிலைகளுக்கு மக்களை இயைபுபடுத்தும் கருத்திட்டத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் 14 திறன்விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக முன்னோடிக் கருத்திட்டப் பிரதேசங்களில் 1742 விவசாயிகளுக்காக கள மட்டத்தில் 94 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

2.2.12. இலங்கையில் மொன்றியல் கூட்டமைப்பின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

மொன்றியல் கூட்டமைப்பின் ஏற்பாடுகள்/ கொள்கைகள் மிகவும் வினைத்திறன் கொண்டதாகவும் மற்றும் ஒழுங்கு முறையிலும் இலங்கையில் மேற் கொள்வதற்காக 1994 ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சின் கீழ் மொன்றியல் கூட்டமைப்புப் பிரிவு (பின்னர் தேசிய ஓசோன் பிரிவு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது) உருவாக்கப்பட்டதோட அதன் மூலம் மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் மொன்றியல் கூட்டமைப்பின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் இலங்கையில மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டது. அன்றய தினம் தொடக்கம் கடந்த 25 ஆண்டு காலப்பகுதியினுள் இலங்கையில் மொன்றியல் கூட்டமைப்பின் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டத்ன் மூலம் ஓசோன் படலம் சிதைவடைவதைத் தவிர்ப்பதற்காக மிக விசேடமான பங்களிப்பு வழங்கப்பட்டதோடு 2016 ஆம் ஆண்டில் கிலாலி திருத்தத்திற்கு ஏற்பச் செயற்பட்டதைத் தொடர்ந்து வளி மண்டல வெப்பநிலை அதிகரிப்பதைத் தவிர்ப்பதைகட கருத்திற்கொண்டு விசேட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

பிரதான பணிகள்

அவ்வாறு 2019 ஆம் ஆண்டில் தேசிய ஓசோன் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மூலம் விசேட முன்னேற்றங்கள் அடையப்பட்டது.

- **HCFC இறக்குமதி பங்கு முறைமை (quota distribution) இதன் கீழ் 2019 ஆம் ஆண்டுக்காக கோட்டா (பங்கு) விநியோகித்தல் (ஓசோன் மிதமாக்கல் பொருட்கள் கட்டுப்பாட்டுக்கான செயற்பாட்டு பொறிமுறை)**

  அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட 18 நிறுவனங்களுக்கான HCFC 196.511 மெற்றிக் டொன் இறக்குமதி செய்வதற்காக quota வழங்கப்பட்டது. இந்த பரிந்துரைகளுக்கு ஏற்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் HCFC இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

- **ஓசோன் மிதமாக்கல் பொருட்கள் நுகர்வை அறிக்கையிடல்**

  2018 ஆம் ஆண்டின் ஓசோன் மிதமாக்கல் பொருட்கள் நுகர்வு 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அறிக்கையிடப்பட்டது.

- குளிரிவிப்பான் சேகரிக்கும் இயந்திரம் மற்றும் குளிர்விப்பான் சேகரிக்கும் சிலின்டர் (Recovery Machines& Recovery Cylinders) வழங்குதல்

  2019 ஆம் ஆண்டில் தேசிய ஓசோன் பிரிவினால் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் ,இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு குளிர்விப்பான் சேகரிக்கும் இயந்திரம் மற்றும் குளிர்விப்பான் சேகரிக்கும் சிலின்டர் (Recovery Machines& Recovery Cylinders) வழங்கப்பட்டன.

- **குளிரூட்டல் மற்றும் குளிரூட்டித் துறையில் ஈடுபட்டுள்ள சேவை மற்றும் பராமரிப்பு நிறுவனங்கள் தொடர்பாக தரவு முறைமையைத் தயார் செய்தல்.**

- **குளிரூட்டல் மற்றும் வளி சீராக்கித் துறையில் ஈடுபட்டுள்ள தொழிநுட்பவியலாளர்களுக்கு ஒழுங்கு முறையான பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல்.**

- **கிலாளி திருத்தத்தின் கீழ் இலங்கைக்காக ஹைட்ரோபுளோரோ காபன் (HFC) மதிப்பீட்டு அறிக்கையைத் (Country Assessment Report) தயாரித்தல்.**

  2019 ஆம் ஆண்டில் குறித்த மதிப்பீட்டு அறிக்கையின் முதலாம் மற்றும் இரண்டாம் வரைவு அறிக்கைகள் தேசிய ஓசோன் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு HFCs மென்பெருள் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகள் சேகரித்தலும் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிலாளி திருத்தத்திற்கமைய HFCs நாட்டினுள் இறக்குமதி வரையறுக்கப்படுவதால் குறைந்த வளி மண்டல உஷ்ணம் கொண்ட (low GWP) மாற்று குளிர்விப்பான் பயன்பாடு தொடர்பாக 2019/12/19 மற்றும் 20 ஆகிய இரு தினங்களில் இரண்டு விரிவுரைகளை நடாத்துதல் மூலம் கைத்தொழிலாளர்களை ஆறிவுறுத்துவதற்காக தேசிய ஓசோன் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- **1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் HFCs இறக்குமதி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான வழிமுறையை அறிமுகப்படுத்தல்.**

தேசிய ஓசோன் பிரிவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து இறக்குமதி செய்யப்படுகின்ற HFCs அளவைக் கணிப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகின்ற HS code அறிமுகம் செய்வதற்காக 2019/08/29 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஒழுங்குவிதிகள் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டன.

• ஓசோன் மிதமாக்கல் மற்றும் உயர் வளிமண்டல உஷ்ணம் கொண்ட குளிர்விப்பான் உபயேகக் கட்டுப்பாடு மற்றும் பாவனையிலிருந்து அகற்றுதல் தொடர்பாக அறிவுறுத்துதல்.

I சுங்க அலுவலர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் அலுவலர்கள் ஆகியோருக்காக நடாத்தப்பட்ட திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஓசோன் மிதமாக்கல் பொருட்களை சட்ட விரோதமான விதத்தில் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்தல் .

II. குளிரூட்டல் மற்றும் வளி சீராக்கித் துறைக்கான பசுமைத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.

22 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளில் குளிரூட்டி மற்றும் வளி சீராக்கித் துறையில் பயிற்சி பெறுகின்றவர்கள், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கித் துறையின் சேவை மற்றும் பராமரிப்பு நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தொழிநுட்பவியலாளர்கள் மற்றும் வளி சீராக்கி மற்றும் குளிரூட்டி துறையின் பொறியியலாளர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலர்கள் ஆகியோர்களுக்காக நடாத்தப்பட்டுள்ளன. மேலும்

III. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்களிற்கு பயிற்சியளித்தல் மற்றும் அறிவுறுத்தல் செயலமர்வுகள் 09 நடாத்தப்பட்டுள்ளன.

IV. அறிவுறுத்துவதற்கான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பாவனை.





2.2.13.இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல் அறிக்கையைத் தயாரித்தல் கருத்திட்டம்.(SLTNC)

ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றங்கள் பற்றிய கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) இணக்காடுகளுக்கு அமைய காநிலை மாற்ற சவால்களுக்கு பயனுள்ள விதத்தில் முகம்கொடுப்பதற்கு ஏற்றவாறு பங்குதாரத் தரப்பினரிடமுள்ள தொழில்நுட்ப மற்றும் மனித வளத்தைப் பயன்படுத்திக் கொண்டு மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையைத் தயாரிப்பது இந்தக் கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பிரதான பணிகள்.

1. மூன்றாவது தேசியத் தொடர்பாடல் அறிக்கையைத் தயாரிப்பதற்காகப் பொருத்தமான விசேட நிபுணர்கள் மற்றும் நிபுணர் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டதோடு பிரதான பகுதிக்கான/ ஆக்கக் கூறுக்கான இறுதி அறிக்கை கருத்திட்ட முகாமைத்துவ அலகுகிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது

2. சுதந்திர மீளாய்வுக் குழுவொன்று தாபிக்கப்பட்டதோடு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 12 நடத்தப்பட்டு அதன் மூலம் பெற்றுக் கொண்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை, அந்த அறிக்கையை இறுதி வரைவு செய்வதற்காக பயன்படுத்தி கொள்ளப்பட்டதோடு பங்குதாரத் தரப்பினரின் பரந்த பங்களிப்புடன் அவ்வறிக்கைகளை தயாரிப்பதற்கான கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

3. மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக செயலமர்வொன்றை நடாத்தி பங்குதாரத் தரப்பினரின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு அதன் மூலம் அந்த அறிக்கை மேலும் விருத்தி செய்யப்பட்டது.

4. நிபுணர்களால் வழங்கப்பட்ட பிரதான பகுதிக்கான இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்து தொழிநுட்பக் குழுக்களனின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

5. காலநிலை மாற்றங்களுக்கு இயைபுபடும் மற்றும் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல் வழிமுறைகள் தொடர்பாக அறிஞர் குழுக்களுக்கு நிபுணர்களால் வழங்கப்பட்ட பிரதான பகுதிக்கான இறுதி அறிக்கை முன்வைக்கப்பட்டது.

6. சர்வதேச மதியுரைஞர் ஒருவரின் ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கை மேலும் விருத்தி செய்யப்பட்டது.

7. மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கை தயாரித்தல் தொடர்பாக அறிவுறுத்துவதற்காக சகல மாகாண சபை உத்தியோகத்தர்களையும் 20 அறிவூட்டும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. எதிர்கால அறிக்கையிடுதலுக்கான தரவுகளின் தேவைப்பாடுகள் மேற்படி செயலமர்வுகளில் முன்வைக்கப்பட்டதோடு இந்த தரவுகளை மாகாணத்தினுள் சேகரிப்பதற்கான விதிமுறையான நடைமுறையொன்றுக்கான அத்திவாரம் இடப்பட்டது. பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் கருவிகளாக காலநிலை மாற்றங்கள் தொடர்பாக அறிவுறுத்தும் 10 ஹீ குறுகிய ஒளித்தோற்றம் திட்டங்கள் 10 பத்திரங்கள் மற்றும் குறும் வீடியோ நிகழ்ச்சித் திட்டங்கள் 10 என்பன தயாரிக்கப்பட்டன.

8. காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் அடங்கிய தகவல் தொகுப்பொன்று தயாரிக்கப்பட்டதுடன் கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வி சமூகத்தவர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவுகள், ஆராய்ச்சி தேவைப்பாடுகள்,அறிவுறுத்துவதற்துரிய வியங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

9. மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் குறிப்பான விடயங்கள் தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அதில் களஞ்சியப்படுத்தபட்டது.

10. காலநிலை மாற்றங்கள் தொடர்பான தேசிய ஆராய்ச்சி மற்றும் தொடர்பாடல் மூலோபாயத் திட்டம் வரைவுபடுத்தப்பட்டு பங்குதாரத் தரப்புக்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் தயாரித்து நிறைவு செய்தல்.

2.2.14. காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பங்குடமை கருத்திட்டம்.

காபன் சந்தைக்கு தயாராகும் பங்குடமை என்பது உலக வங்கி மூலம் நிருவகிக்கப்படுகின்ற பல்தரப்பு நிதியமாகும். இதன் மூலம் பசச்சைவீட்டு வாயு (GHG) வெளியேற்றத்தைக் குறைப்பதை அதிகரிப்பதற்காக காபன் விலை நிர்ணயம் / விலையிடல் உபகரணங்கள் உள்ளிட்ட காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்காக கொள்கைகளைத் தயாரித்து மேற்கொள்வதற்கு நாடுகளுக்கு உதவி வழங்கப்படுகின்றன. இலங்கை 2016 ஆம் ஆண்ட ஏப்ரல் மாதம் தொடக்கம் இதன் பங்காளரொருவராக செய்யப்பட்டுள்ளதோடு இலங்கை அரசின் கோரிக்கையின் பிரகாரம் உலக வங்கி தற்போது மேற்படி பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு உதவுதற்காக காலநிலை மாற்றங்களைக் குறைக்கும் பங்குடமை கருத்திட்டத்தை மேற்கொள்கின்றது. இதற்காக கருத்திட்ட முன்மொழிவு (Market Redness Proposal) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அதன் உத்தேச செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2018 சனவரி மாதம் 18 ஆம் திகதி இலங்கைக்கு 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி அன்பளிப்பொன்று அனுமதிக்கப்பட்டது. இந்த மொத்த நிதி அன்பளிப்பில் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுவோரால் (இலங்கை) மேற்கொள்ளப்படுகின்ற நிதியம் (RETF) எனவும், 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் உலக வங்கி மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிதியம் (டீறுவுகு) எனவும் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

பிரதான பணிகள்

- கருத்திட்ட முகாமைத்துவ பிரிவொன்றை (ீஆரு) தாபித்தல்
- பச்சைவீட்டு வாயு வெளியேற்ற மதிப்பீட்டு அறிக்கையொன்றைத் தயாரித்தல்
- மின்வலு, மற்றும் போக்குவரத்துப் பிரிவின் கொள்கைகள் மற்றும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட உபகரணங்களின் பகுப்பாய்வு ரீதியான நடவடிக்கைகளுக்கான அறிக்கை தயாரித்தல்
- தேசிய MRV (Monitoring, Reporting Verification) முறைமையொன்றுக்கான தேவைப்பாட்டு மதிப்பீட்டு அறிக்கைத் தயாரித்தல்
- இலங்கையில் இணைந்த தேசிய MRV (Monitoring, Reporting Verification) முறைமையொன்றைத் திட்டமிடுவதற்காக தொழிற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப விவரக் கூற்றுக்களைத் முடிவுறுத்தல்
- பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக தேசிய ஆவணமொன்றைத் திட்டமிடுவதற்காக தேவைப்பாட்டு பகுப்பாய்வு அறிக்கையை சமர்ப்பித்தல்.
- பச்சைவீட்டு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக தேசிய ஆவணமொன்றைத் திட்டமிடுவதற்காக இறுதி தொழிற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப விவரக் கூற்றைத் தயாரித்தல்
- இலங்கை காபன் கடன் முன்மொழிவு முறையை (SLCCS) மேற்கொள்வதற்காக வழங்கல், கேள்வி மாற்று இறுதி மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
- இலங்கையில் இனங்காணப்பட்ட மாகாண மட்டத்தில் இலங்கை காபன் கடன் முன்மொழிவு முறைக்கான (SLCCS) கேள்வி மற்றும் வழங்கல் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

2.2.15. சுகாதார மற்றும் சுற்றாடல் கொள்கைகளுக்கான வாயு நிலைமை மதிப்பீடு தொடர்பான கருத்திட்டம்.

குளிரூட்டி மாசு மனித சுகாதாரத்திற்கு தாக்கங்களை ஏற்படுத்துகின்ற முறை தொடர்பாக ஆராய்ந்து கொள்கை தயாரிப்பதன் மூலம் வளி மாசாக்கிகளை (மாசு படுத்திகளை) சூழலில் விடுவிக்கின்றவைகளைக் கட்டுப்பாடுத்தி சுகாதார ரீதியில் காணப்படுகின்ற ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடொன்று காணப்படுகின்றது. எனவே வாயு வள முகாமைத்துவ பிரிவின் மூலம் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNEP) தொடர்புபட்டு குறித்த கருத்திட்டத்தின் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கருத்திட்டம் ஆபிரிக்க மற்றும் ஆசிய பசுபிக் வலயத்தின் இலக்கு நாடுகளின் அறிவை விருத்தி செய்தல், சுழலும் காற்றின் தரத்தன்மை மற்றும் மனித சுகாதாரம் பற்றிய சான்றுகளை அடிப்படையாக கொண்டு கொள்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கான ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNEP) தொடர்புடைய விரிவான கருத்திட்டமொன்றின் ஒரு பகுதியாகும்.

பிரதான நோக்கங்கள்

1. வாயு மாசு மட்டங்களைள் மதிப்பீடு செய்வதற்காக தரவுகள் மற்றும் தகவல்களை வலுப்படுத்துவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் திறனை விருத்தி செய்தல்.
2. வளியின் தரத்தன்மை மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றுகளை அடிப்படையாக கொணடு கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.
3. சுற்றாடல் மற்றும் சுகாதாரம் ஆகிய இரு பிரிவுகளின் அறிவைச் சேகரித்தல்.

பிரதான பணிகள்.

இந்தக் கருத்திட்டம் 2018 – 2019 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டதுடன் கருத்திட்டதின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு. 40,000 அ. டொலர் ஆகும். இதன் கீழ் துறைசார் நிபுணத்துவ ஆலோசகர்கள் மூலம் சுற்றாடல் வாயு நிலைமைகள் மனித சுகாதாரம் தொடர்பில் பாதிக்கக்கூடிய முறை பற்றிய முழுமையான அறிக்கை மற்றும் அதற்கான கொள்கைகள் மற்றும் திட்டமிடல் மீளாய்வு அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டன மேலும் அந்த அறிவியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு வாயு மாசடைதல் மூலம் ஏற்படக்கூடிய சுகாதார ரீதியான ஆபத்துக்களைக் குறைப்பதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2.16. உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா கூட்டமைப்புக்கு உட்பட்ட தேசிய உயிரியல் பாதுகாப்பு மூல மாதிரியை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டம்.

புதிய உயிரியல் தொழிநுட்பத்தினால் இலங்கை பெற்றுக்கொள்ள கூடிய உயர்ந்த பயன்களை அடைந்து கொண்டு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான கார்டஜீனா கூட்டமைப்புக்கு உட்பட்டு தேசிய உயிரியல் பாதுகாப்பு மூல மாதிரியை செயற்படுத்தும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் உலக சுற்றாடல் வசதிகள் மூலம் வழங்கப்படுகின்ற நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒத்துழைப்பு சகிதம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

பிரதான நோக்கங்கள்

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் உயிரியல் பாதுகாப்புக்குரிய தகவல்கள் தடைநீக்கல் பொறிமுறையொன்றைத் தயார் செய்து மேற்கொள்ளல், மரபணு மாற்றியமைவு செய்யப்பட்ட உயிர்கள் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்து மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான பொறிமுறையொன்றைத் தயாரித்தல், தொழில்நுட்ப தகவல் சகிதம் தரவு முறைமை, மரபணு மாற்றியமைவு செய்யப்பட்ட உயிர்களை அறிந்து கொள்வதற்குரிய திறனை விருத்தி செய்தல் மற்றும் ஆய்வுகூடத் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் பொது மக்கள் மத்தியில் உயிரியல் பாதுகாப்புப் பற்றிய அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதான பணிகள்

ஆக்கக் கூறு 1- உயிரியல் பாதுகாப்புக்கான கொள்கைகள், நிறுவன மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை வலுப்படுத்தல்.

• உயிரியல் பாதுகாப்பு இறுதிச் சட்ட மூலத்தின் வரைவுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதுடன் சட்ட மூலத்தை நிறைவேற்றும் போது மேற்படி விடயங்கள் உட்சேர்க்கப்பட வேண்டிய விதம் பற்றி உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

• உயிரியல் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், உயிரியல் பாதுகாப்புக்கான நிருவாக மற்றும் செயற்பாட்டு விதிகள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு முதன்மைத் திட்டம் ஆகிய ஆவணங்களின் வரைவு பூர்த்திசெய்யப்பட்டது

• இலங்கையில் உயிரியல் பாதுகாப்பு பற்றிய ஒழுங்குபடுத்தல் முறைமை தொடர்பான முதலாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி 40 இற்கு மேற்பட்டவர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டது.

• உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான தேசிய இணைய வலையமைப்பொன்று இலங்கை உயிரியல் பாதுகாப்பு தொழிநுட்பத் தடைநீக்கல் பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டது. (http://lk.biosafetyclearinghouse.net/)

• தடைநீக்கல் பொறிமுறையின் தடைநீக்கல் மத்திய வாயிலூடாக தகவல்களுக்காக பிரவேசித்தல் மற்றும் பரிமாற்றம் செய்தல் தொடர்பாக அறிவூட்டுவதற்காக பங்குதாரத் தரப்பினரின் பங்களிப்புடன் ஐந்து செயலமர்வுகள் ஒரு செயலமர்வில் 30 உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டன.

• இணைய வலையமைப்பை முகாமைத்துவும் செய்தல் தொடர்பாக தேசிய மைய நிலையமான அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் தகவல் உள்ளீர்ப்புச் செய்தல் தொடர்பான உயிரியல் பல்வகைமை செயலாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது பயிற்சி அமர்வு நடாத்தப்பட்டது.

ஆக்கக் கூறு 2 - ஆபத்து மதிப்பீடு, ஆபத்து முகாமைத்துவம் மற்றும் ஆபத்துத் தொடர்பாடலுக்கான முறைமையை மேம்படுத்தல்.

பின்வரும் வழிகாட்டு நெறிகளின் வரைவுகள் அனைத்து உரிய பங்குதாரத்தரப்பினர்களின் பங்களிப்புடன் உள்ளீடுகள் சகிதம் தயாரிக்கப்பட்படன.

1. ஆய்வுகூடத்தினுள் கதிரியக்க உயிரினங்கள் உயிர்களை பாதுகாப்பாக உபயேகப்படுத்துவதற்கான வழிகாட்டல்.

2. கதிரியக்கத் தாவரங்கள் பற்றிய சுற்றாடல் அனர்த்த மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்

3. கதிரியக்கத் தாவரங்களின் வரையறுக்கப்பட்ட துறைகளை பரீட்சித்துப் பார்ப்பதற்காக வழிகாட்டல்.

4. கதிரியக்கத் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட உணவுகளின் பாதுகாப்பு மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்.

5. மரபணு கதிரியக்கத் நுளம்புகள் பற்றிப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வழிகாட்டல்.

6. நிறுவன உயிரியல் பாதுகாப்பு குழுவுக்கான வழிகாட்டல்

7. ஆபத்து பகுப்பாய்வுச் சட்டகம்

உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான தேசிய மைய நிலையத்தினால் இந்த வழிகாட்டல்கள் தற்போது மீளாய்வு செய்யப்பட்டுவருகின்றது.

ஆக்கக் கூறு 3 - கதிரியக்க உயிரினங்கள் பரீட்சித்தல் மற்றும் இனங்காண்பதற்கான தொழில்நுட்பத் திறனைகளை விருத்தி செய்தல்.

கதிரியக்க உயிரினங்கள் இனங்காண்பதற்கான தேசிய ஆய்வு கூடமாக தரம் உயர்த்துவதற்காக பின்வரும் ஆய்வு கூட மதிப்பீடுகள் செய்யப்பட்டன.

1. தேசிய தாவர தொற்றுநோய்த்தடை சேவை (NPQS)

2. தொழினுட்பவியல் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

3. விவசாய உயிரியல் தொழில்நுட்ப நிலையம் (AgBC)

4. இலங்கைச் சுங்கம் (SLC)

5. அரசாங்க இரசாயனப் பரிசோதனைத் திணைக்களம் (AGD)

6. உயிரியல் தொழிநுட்ப, மூலக்கூறு உயிரியல் விஞ்ஞானம் மற்றும் உயிரியல் இரசாயனம் பற்றிய நிறுவனம் (IBMBB)

இவற்றில் தேசிய தாவர தொற்றுநோய்த்தடை சேவை, தொழிநுட்பவியல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் விவசாய உயிரியல் தொழில்நுட்ப நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஆய்வு கூடங்கள் நவீனமயப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் இனங்காணப்பட்டது. பக்க ஓட்ட நிரல் (lateral flow strips) மூலம் இனங்காண்பதற்குத் தேவையான கொள்திறன் இலங்கை சுங்கத்திடம் காணப்படுவதோடு புரதத்தை அடிப்படையாகக் கொண்ட பரீட்சித்தலுக்கான கொள்திறன் அரசாங்க இரசாயன பரிசோதனைத் திணைக்களத்திடம் காணப்படுகின்றது.

- கதிரியக்க உயிரினங்கள் மேற்பார்வை மற்றும் பரிசோதனைக்கான விவவாயத் திணைக்களத்தின் விதைகள் சான்றுப்படுத்தும் சேவை, தேசிய தாவர தொற்றுநோய்த்தடை சேவை மற்றும் இலங்கை சுங்க உத்தியோகஸ்தர்களுக்கான ஐந்து செயலமர்வுகள் நடாத்தப்பட்டதோடு ஒரு செயலமர்வில் **30** பேர் வீதம் கலந்துகொண்டனர்.

- தேசிய தாவர தொற்றுநோய்த்தடை சேவை, தொழிநுட்பவியல் தொழில்நுட்ப நிறுவனம், விவசாய உயிரியல் தொழில்நுட்ப நிலையம் மற்றும் இலங்கை சுங்க உத்தியோகத்தர்களுக்கான கதிரியக்க உயிரினங்கள் பரீட்சித்தல் தொடர்பான முதலாவது பயிற்சி 2019 மே மமாதம் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டது. தேசிய ஆய்வு கூடமாக தரமுயர்த்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு கூடங்களிலிருந்து இரண்டு பேர் மற்றும் இலங்கை அனுமதித்தல் சபையின் (SLAB) மூன்று பேர் சர்தேசப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆக்கக் கூறு 4 - அறிவு விருத்தி, பொதுமக்களை அறிவுறுத்தல், கல்வி மற்றும் பங்குபற்றல்
உயிரியல் பாதுகாப்பிற்கான தேசிய தொடர்பாடல் மூலோபாயத் திட்டத்தின் முதலாவது வரைவு உரிய அனைத்து தரப்பினர்களதும் ஆலோசனைகள் பெறப்பட்டு தயாரிக்கப்பட்டது.

பின்வரும் பல்வேறு தரப்பினர்களுக்காக விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நடாத்தப்பட்டது.

- பட்டம் எதிர்பார்த்துள்ள மாணவர்கள் - 2019 செப்தெம்பர் 11
- சாதாரண தரம் , உயர் தர மாணவர்கள் - 2019 செப்தெம்பர் 12
- சுகாதார அமைச்சின் உயர் அலுவலர்கள் - 2019 ஒக்தோபர் 24
- வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக (பொதுச் சுகாதார பரிசோதகர்கள் போன்ற) – 2019 ஒக்தோபர் 25
- தேசிய மைய நிலையத்தின் உயர் அலுவலர்கள் - 2020 சனவரி 23

உயிரியல் பாதுகாப்பு இந்நாட்டின் இரண்டாம்நிலை இணைவு (Secondary) மட்டத்திலான கல்வியினுள் ஒன்றிணைத்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக தேசிய கல்வி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுடன் நடைபெற்ற முதலாவது கூட்டம் 2019 யூலை மாதம் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்விக்காக உயிரியல் பாதுகாப்பை உட்சேர்ப்பதற்காக பாடநெறி பொருட்களைத் தயாரிக்கும் நோக்கில் பல்கலைக்கழக கல்வியியலார்கள் , ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் ஆய்வுகூடங்களிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பல்தரப்பு முதலாவது மதியுரைச் செயலமர்வு 2019 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

பின்வரும் அறிவூட்டும் பத்திரங்கள் வெளியிடப்பட்டன.

- இலங்கையில் உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான அடிப்படை தகவல்கள் அடங்கிய பத்திரம்.
- உலக சுகாதார அமைப்பினால் தயாரிக்கப்பட்ட மரபணு மாற்றியமைவு செய்யப்பட்ட உணவு பற்றிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு.
- உயிர் பாதுகாப்பு சட்டமூலத்தின் நகலைக் (வரைவை) குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிச் செயற்பாடுகளைக் காட்டுகின்ற காட்டூன்.
- உலகில் நாடுகளின் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட கதிரியக்க உயிரினங்களின் உயிர்களின் பட்டியல்
- பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய கடிதங்கள் அடங்கிய புத்தகம்
- மரபணு மாற்றியமைவு செய்யப்பட்ட உணவுகள் மற்றும் மரபணு மாற்றியமைவு செய்யப்பட் தாவரங்கள் தொடர்பாக விசேட நிபுணர்கள் சொல்வது என்ன என்ற தலைப்பிலான புத்தகம்
- உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான தகவல் மற்றும் காடூன்கள் அடங்கிய முகாமைத்துவ அமைப்பு

2.3. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

இலங்கையில் வன வளங்கள் பாதுகாப்பு

2030 ஆம் ஆண்டுடாகும் போது இலங்கையில் ஒதுக்குக்காடுகளை மொத்த நிலப்பரப்பில் 32% வரை அதிகரித்துக் கொள்வதற்கான இலக்கை எய்தும் பொருட்டு, அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் தரப்புக்களின் உயிர்பான பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக " வன ரோபா " தேசிய மர நடுகை வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் மர நடுகை தொடர்பான கவனத்தை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் ஒக்தோபர் மாதத்தை " வன ரோபா " தேசிய மர நடுகை மாதமாக பெயரிடப்பட்டுள்ளது.

" வன ரோபா " தேசிய மர நடுகை வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி பதுளை மெதிரிய நீர் ஒதுக்குப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. பிரதான விழா அப்போதைய அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் 2019 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 12 ஆம் திகதி பொலொன்னறுவை மாவட்டத்தில் ஹபரணை கல்ஓய வன ஒதுக்கில் மொரகந்த பிரதேசத்தில் நடத்தப்பட்டதோடு 3000 ஹெக்டயாருக்கு மேற்பட்ட பிரதேசமொன்றை தேசிய வன ஒதுக்கிற்குச் சேர்க்கும் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நாடளாவிய வேலைத் திட்டத்தின் அங்குரார்பண நிகழ்வாக கல்ஓய ஒதுக்குக் காட்டினுள் கழிவுக்குற்பட்ட 100 ஹெக்டெயார் இலங்கை வங்கியின் 80 ஆவது வருட நிறைவு வைபவத்திற்சு சமாந்தரமாக மீண்டும் வனப் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு " BOC ஹரித அரண" எனப் மீளுருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் கண்டல் பிரதேசங்கள் 14,800 ஹெக்டெயாரும் ஏனைய காடுகள் 9,900 ஹெக்டெயாரும் ஒதுக்குக் காடுகள் பிரதேசத்தோடு ஒன்றுசேர்க்கப்பட்டன.

வனப் பாதுகாப்புக்காக காணிகளை சுவீகரித்தல் 03 வலயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

I. நகல்ஸ் மலைத்தொடர் பாதுகாப்பிற்காக காணிகளைச் சுவீகரித்தல்
II. சிங்கராஜ காட்டைப் பாதுகாப்பதற்காக காணிகளைச் சுவீகரித்தல்
III. ஏனைய வனப் பயிர்ச் செய்கைக்காக காணிகளைச் சுவீகரித்தல்

மாநகர துரு வியன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

மாநகர துரு வியன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று 2019/06/27 ஆம் திகதி பொலொன்னறுவை மகளிர் படையணி தலைமையகத்தில் நடத்தப்பட்டதோடு 600 மரக் கன்றுகள் நடப்பட்டன.

மாநகர துரு வியன் தாபிப்பதற்கான தொழில்நுட்ப ஆதரவு வழங்குதல் பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

- கிரிபத்கொடை வைத்தியசாலை வளாகத்தைப் பசுமையாக்கல்
- பிலியன்தல மத்திய மஹா வித்தியாலயம்
- கொழும்பு துறைமுக வளாகம்

மாநகர துரு வியன் தாபிப்பதற்காக நான்கு மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் மாநகர துரு வியன் தாபிப்பதை அதிகரிப்பதற்காக பின்வரும் இடங்களில் மர நடுகை வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அப் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- கொழும்பு - கண்டி (கம்பஹா) வீதியின் இரு பக்கமும்.
- மஹிந்த ராஜபக்ச தேசிய பாடசாலை, ஹோமாகம
- கிளிநொச்சி, பூநகரி பிரதேசங்களில் மர நடுகைக்காக மரக் கன்றுகள் வழங்குதல்.
- மனுதம் உயன (பூங்கா) தாபித்தல் - ஏப்ரல் 21 ஆம் திகதி கொடிய பயங்கரவாத தாக்குதலால் மரணமடைந்த பெறுமதியான மனித உயிர்களை நினைவு கூர்வதற்காக ஹரித வன

அரண “ மனுதம் உயன (பூங்கா) ” தாபிக்கும் பணி திவுலபிட்டியப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது.

கண்டல் தாவர சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் பேண்தகு பயன்பாடு

இலங்கையில் கண்டல் தாவர சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் பேண்தகு பயன்பாடு தொடர்பான கொள்கையைத் தயாரித்தல்

தற்போது காணப்படுகின்ற கண்டல் நிலங்களைப் பாதுகாப்பதற்காக மற்றும் இரால் வளர்ப்பு மற்றும் உப்பளங்கள் போன்ற பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட கைவிடப்பட்டள்ள அரசுக்குச் சொந்தமான கண்டல் காணிகளை புனரமைப்பதற்காக அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதோடு அதற்கான அமைச்சரவை அனுமதி 2019 – 08 - 13 ஆம் திகதி கிடைக்கப் பெற்றது.

பொதுநலவாய நாடுகளுக்கிடையில் கண்டல் தாவர பாதுகாப்பு மற்றும் புனரமைப்பின் முதன்மையாளராக இலங்கை செயற்பட வேண்டியுள்ளமையினால் அதற்குத் தேவையான இலக்கை அடைந்து கொள்வதற்காக அமைச்சினால் கண்டல் தாவர சுற்றாடல் முறைமை புனரமைப்புக்காக செயலணியொன்று 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் தாபிக்கப்பட்டது.

“ Sustainable management for health of global mangroves " என்ற தலைப்பில் கண்டல் தொடர்பான கொள்கை இந்துனேசியாவின் ஒத்துழைப்புடன் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11- 15 வரை நடாத்தப்பட்டதோடு 4 வது ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் மாநாட்டில் சமர்ப்பித்தல் மற்றும் அனுமதியை பெற்றுக் கொள்ளல்.

கண்டல் தாவர மேம்பாடு மற்றும் புனரமைப்பு தொடர்பான தொழிநுட்ப வழிகாட்டு நெறியை வரைவு படுத்தல்.

இலங்கையின் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு



உயிரியல் பல்வகைமை மூலோபாய செயற்பாட்டுத்திட்டத்தின் முன்னேற்றத்தை ஆராந்து பார்ப்பதற்கான 4 செயலமர்வுகள் உரிய பங்குதாரத் தரப்புக்களின் பங்களிப்புடன் கண்டி, கொழும்பு, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் நடாத்தப்பட்டன.

தேசிய உயிரியல் பல்வகைமை அறிஞ்ஞர்கள் குழு கூட்டம்

2019 ஆம் ஆண்டில் தேசிய உயிரியல் பல்வகைமை அறிஞ்ஞர்களின் குழு மூலம் விடயத் துறைகளில் எழுகின்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

1. இலங்கையில் டெங்கு நுளம்பு காவிகளின் வேதியல் ஒத்திசைவுக் கட்டுப்பாடு செய்வதற்கான முன்னோடி பரிசோதனை நடவடிக்கையாக பூச்சி கொல்லி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல் சாத்தியப்பாடு தொடர்பாக.
2. மூலப்பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காக அனுமதி பெற்றுக்கொள்வதற்காக மரபணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்.
3. வெங’காயங்களில் உள்ள நோய்க்காவிகளின் மரபணு மாதிரிகளை கப்பலில் ஏற்றுவதற்காக அனுமதி வழங்குதல் தொடர்பாக.
4. இலங்கையின் தேசிய மலரின் பெயர் தொடர்பான முரண்பாடு

தேசிய சிவப்பு தரவுப் பட்டியலை இற்றைப்படுத்தல்

2019 ஆம் ஆண்டினுள் இந்த சிவப்பு தரவுப் பட்டியலை இற்றைப்படுத்தல் தொடர்பாக தேசிய தாவரவியல் பூங்கா தாவரக் கூடத்தல் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு அதன் மூலம் 1,900 வரையான உயர் தாவரங்கள் மதிப்பீடுக்கு உட்படுத்தப்பட்டன.

உலக சிவப்பு தரவுப் பட்டியல் மதிப்பீட்டுடன் ஒத்துழைப்பு - நன்னீர் மீன்கள் மற்றும் ஊர்வன பற்றிய உயிர்த் தொகுதி மதிப்பீடு.

தேசிய வண்ணத்துப்பூச்சி பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்.

ஈர வலயத்தினுள் இரண்டு வண்ணத்துப்பூச்சி பூங்காக்களை நிர்மாணித்தல்.

வண்ணத்துப் பூச்சி பூங்கா நிர்மாணம் மற்றும் பராமரிப்பு தொடர்பான கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான பயிற்சிகள் மற்றும் அறிவூட்டும் செயலமர்வுகளை நடாத்துதல்.

உயிரியல் பல்வகைமை மற்றும் சுற்றாடல் தொகுதியின் பெறுமதியை மதித்தல்

வட மாகாண உயிரியல்பல்வகைமை விபரத்தொகுப்பு மற்றும் பாதுகாப்பு செயற் திட்டத்தைத் தயாரித்தல்

மண் உயிரியல் பல்வகைமை விபரத்தொகுப்பு மற்றும் பாதுகாப்பு செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.

உயிரியல் பல்வகை ஈ - செய்திமடல்.

ஆசிய வலய அயனமண்டல உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு அமைப்பின் 2019 ஆம் ஆண்டுக்கான மாநாடு - இந்த மாநாட உயிரியல் பல்வகைமை பாதுகாப்புக்குரிய மூலக்கூறு உயிரியல் பல்வகைமை பாதுகாத்தல் (save), கற்றல் (study) மற்றும் பயன்பாடு (use) இடையில் ஒருங்கிணைப்பை எற்படுத்துவதற்காக ஆராய்ச்சியாளர்கள், கல்வியிலாளர்கள், உயிரியல் பல்வகைமைக்குரிய தொழிலாளர்கள் மற்றும் மாணவர்களை இலக்காகக் கொண்டு ஏற்பாடு செயயப்படடிரந்தது.

மூதாதையர் வழிவந்த (பரம்பரை வழி) அறிவுப் பாதுகாப்பு - இலங்கையில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு உபயேகத்திற்கான உயிரியல் பல்வகைமை மற்றும் தொடர்புடைய மூதாதையர் வழிவந்த அறிவு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்ட வரைவு துறைசார்த வல்லுநர்களின் மற்றும் பங்குதார நிறுவனங்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொண்டு தயாரிக்கப்பட்டது.

உயிர் விசேடங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கும் நோக்கில் உயிரியல் பல்வகைமை தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தல் - மத்திய மாகாணத்தில் நன்னீர் நத்தைகளின் பல்வகைமையை ஆராய்ச்சி செய்தல் மற்றும் அவற்றின் மரபணு குறிமுறை மற்றும் குடிமரபியல் ஆராயும் ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்க நிதியுதவி வழங்கப்பட்டன.

உயிர்ப் பொருட்களுக்கான பிரவேசம் மற்றும் பிரதிபயன்களை நியாயமாகவும் மற்றும் உண்மையான அடிப்படையிலும் பகிர்ந்து கொள்ளல் தொடர்பான தேசிய கொள்கை.

உயிரியல் சார்ந்த பொருட்களுக்கான பிரவேசம் மற்றும் பிரதிபயன்களை நியாயமாகவும் மற்றும் உண்மையான அடிப்படையிலும் பகிர்ந்து கொள்ளல் தொடர்பான தேசிய கொள்கைக்குரிய சகல தரப்புக்களின் மற்றும் பங்குதார நிறுவனங்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பெறப்பட்டு வரைவு தயாரிக்கப்பட்டது

வாயு வள முகாமைத்துவம்



வாயு நிலைமை முகாமைத்துவத்திற்குரிய கொள்கைத் திட்டத்தைத் தயரித்தல் மற்றும் உரிய தரப்புக்களை இணைத்துக்கொண்டு அக்கொள்கை மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். வாகன வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல், நிலைய வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல், வீட்டு எரி வாயு நிலைமை முகாமைத்துவம், எரிபொருட்களின் தரத்தன்மையை உயர்வடையச் செய்தல், வாயு நிலைமை மேற்பார்வை மற்றும் வளி மாசடைதல் தொடர்பாக மக்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

காலநிலை மாற்றங்கள்

காநிலை மாற்றங்களைக் குறைத்தல் தொடர்பான தேசிய விசேட நிபுணர்கள் குழு

- உலக வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட காபன் சந்தைக்கு தயாராகும் பங்குடமை கருத்திட்டம் (Partnership for Market Readiness Project) வெளியேற்ற அறிக்கை மற்றும் மூன்றாவது தேசிய தொடர்பாடல் அறிக்கையில் உள்ள பச்சைவீட்டு வாயு வெளியேற்ற இன்வென்றி, வெளியேற்றத்தைக் குறைந்தல் மாற்று பந்திகள் மீளாய்வு செய்தல்
- NAMA கருத்திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டமான உயிர் வாயு,பியஸ்சுபர் சக்தி மற்றும் VFD மோட்டார் வாகனங்களின் வினைத்திறனுக்காக வழிகாட்டுதல் உயிர்க் காபன் தொடர்பாக முன்வைக்கப்பட்ட உத்தேச கருத்திடடத்தை மேம்படுத்தற்கான ஆலோசனைகளை வழங்குதல்
- மின்சார புகையிரதம் (light Rail Transit project) கருத்திடடத்தின் ශක්‍යතාවය பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றையும் மற்றும் கல்துரையாடலொன்றையும் நடாத்துதல்.

காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்துவதற்கான தேசிய விசேட நிபுணர்கள் குழு.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

- காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்து மதிப்பீடு மற்றும் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளில் காலநிலை மாற்றங்களுக்குப் பழக்கப்படுத்தல் செயற்பாடுகளை

உள்ளடக்குவதற்கான தொழில்நுட்ப கருத்திடடத்தின் இறுதி மதிப்பீட்டு முடிவுகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குதல்

- காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் சட்டக ஒப்பந்தத்திற்குச் சமர்பிக்க வேண்டிய இலங்கையின் மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையின் ஆபத்து நிலையை மதிபீடல் மற்றும் பழக்கப்படுதல் வழிமுறைகள் பற்றிய பந்திக்குரிய மதிப்பீட்டு முடிவுகள் பரிந்துரை செய்தல்.
- குருணாகல். நகருக்கான காலநிலை சுஹுரு நகர பழக்கப்படுத்தல் திட்டம் தொடர்பாக பரிந்துரை செய்தல்
- விவசாயக் கைத்தொழில் பற்றிய கொரோனோவியா ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான போஷனை முகாமை மற்றும் கால்நடை முகாமை தொடர்பான இலங்கையின தற்போதைய நிலைமை தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

காலநிலை தொழில்நுட்பப் பரிமாற்ற நிலையம் மற்றும் வலையமைப்பின் (CTCN) கீழ் காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக பொருத்தமான தொழில்நுட்பத்தை அடையாளம் காணுதல் மற்றும் பரபல்யப்படுத்தல்.

- தோட்டத் துறைக்கு சுஹுரு/ சரியான விவசாயக் கைத்தொழிலை அறிமுகப்படுத்தல். – தோட்ட செயற்பாடுகளின் ஒட்டு மொத்தப் பயன்களை மேம்படுத்துவதற்காக ரோன்/ யூஏவி தொழிநுட்பம் மற்றும் உலக தகவல் முறைமை உள்ளீட்டைப் பயன்படுத்தல்.
- புத்தளம் மாவட்டத்தில் தென்னங் காணிகளுக்கான காநிலை மாற்றங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காக விவசாயிகளுக்கான தொழிநுட்ப மாற்று நிகழ்ச்சித்திட்டத்திற்கான தொழில்நுட்ப உதவி.

காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் மூலோபாயத் திட்டத்தைத் (LCDS) தயாரித்தல்
தேசிய அதிகாரம் பெற்ற அதிகாரசபையின் (னுயு) முதலாவது தயாராதல் கருத்திட்டத்தை செற்படுத்தல்.
தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட ஒத்துழைப்பை (NDCs) நடைமுறைப்படுத்தல்
காலநிலை மாற்றங்கள் பற்றிய அறிவூட்டல் மற்றும் திறன் விருத்தி
காலநிலை சுஹுரு நகர் உருவாக்கம் (Climate Smart City), குருநாகல், பழக்கப்படுத்தல் திட்டம்

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயன திரவங்கள் முகாமைத்துவம்

- தேசிய கழிவுப் பொருட்கள் முகாமைத்துவக் கொள்கையை இற்றைப்படுத்தல்.
- தேசிய இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவக் கொள்கையைத் தயாரித்தல்
- அனைத்து பங்குதாரத் தரப்புக்களை இணைத்துக் கொண்டு இலங்கையில் இலக்ரோனிக் மற்றும் கழிவுப் பெபாருட்கள் முகாமைத்துவம் தொடர்பில் 3 வருட செயற்பாட்டுத் திட்டமொன்றை இலங்கைப் பாராளுமன்றம், அரச கணக்குகள் தொடர்பான செயற் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.
- பாசல்,ரோடர்டம்,ஸ்டொக்ஹோம் மற்றும் மினமாட்டா சர்வதேச ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதற்காக 04 இணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- உணவுக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய சுவரொட்டியொன்றை அச்சிடல் மற்றும் அதனைப் பகிர்ந்தளித்தல்.
- மேலும் நுண்ம பிளபஸ்ரிக், தற்போது காற்று, நீர் மற்றும் மண் ஆகியனவற்றை மாசுபடுத்தி சூழல் முழுவதும் பரந்து காணப்படுகின்றமைக்கு ஆராய்ச்சிகள் சான்றுபகர்வதோடு எமது நாட்டிலும் குடிதண்ணீர் போத்தல்களில் நுண்ம பிளாஸ்ரிக் பற்றிய பரிசோதனையொன்று பேராதனை பல்கலைக்கழகத்தோடு இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சிகளுக்கு ஏற்ப வெளிநாட்டு நாடுகளின் குடி நீர் போத்தல்களில் 95% வரை நுண் பிளபஸ்ரிக் மூலம் மாசடைந்துள்ளன.
- இதற்கு மேலதிகமாக இந்த பிரிவின் மூலம்" பசுமை (ஹரித) வைத்தியசாலை"," பசுமை (ஹரித) பல்கலைக்கழகம் (சரசவி)" மற்றும்" பசுமை(ஹரித) நிறுவனங்கள்" திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு இதனூடாக இந்த எண்ணக்கரு தொடர்பாக வைத்தியசாலைகள்

மற்றும் பல்கலைக்கழகங்கள் அறிவூட்டப்படுகின்றன. இதற்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில்ம ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

புவி வளங்கள் பாதுகாப்பு

அரிப்புக்குற்பட்ட நிலப்பகுதியை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மாதிரி மண் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளல்.

